பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-126

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் : 18<br>Vol : 18 | இதழ் : 08<br>Issue : 08 | www.ncbhpublisher.in | நவம்பர் 2025<br>November 2025 | விலை<br>Price } ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription } ₹ 540/- |




**முஸ்லிம் – இந்து – பாகிஸ்தான்**
**நிகழ்வுகள், விளைவுகள் குறித்து அம்பேத்கரின் உரையாடல்கள்**
- வீ.அரசு

**உலக முதலாளித்துவத்தின் கிரீமிலேயர்**
- ப.கு.ராஜன்

**தி.மு.க. நாவலாசிரியர்களின்**
**நாவல்கள் சித்திரிக்கும் அரசியல் சொல்லாடல்கள்**
- ந.முருகேசபாண்டியன்

**செயற்கை நுண்ணறிவைப் பற்றிய விரிவான நூல்**
- அ.கா.ஈஸ்வரன்






01.11.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் ந.முருகேசபாண்டியன் தொகுத்த 'கலைஞர் நாடகங்கள்' இரண்டு தொகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் இரா.முத்தரசன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இதில் என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், நூல் தொகுப்பாசிரியர் ந.முருகேசபாண்டியன், அவரது துணைவியார் உஷா, என்சிபிஎச் கிளை மேலாளர் அ.பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்



10.10.2025 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் கவிஞர் சக்திஜோதி எழுதிய 'சங்க இலக்கியம் - உடல் மனம் மொழி' எனும் நூலை முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் வெளியிட ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் பெற்றுக்கொண்டார். இதில் பேரா. முனைவர் எல்.ராமமூர்த்தி, என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், என்சிபிஎச் முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, நூலாசிரியர் சக்திஜோதி ஆகியோர் கலந்துகொண்டனர்




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 18 இதழ் - 08 - நவம்பர் 2025*

ஆசிரியர்

**த. ஸ்டாலின் குணசேகரன்**



ஆசிரியர் குழு

*க. சந்தானம்*
*பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்*
*முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்*
*முனைவர் ந. முத்துமோகன்*
*முனைவர் மு. இராமசுவாமி*
*முனைவர் நா. இராமச்சந்திரன்*
*முனைவர் பா. ஆனந்தகுமார்*
*முனைவர் ஞா. ஸ்டீபன்*
*ப. கு. ராஜன்*
*முனைவர் இரா. அறவேந்தன்*
*முனைவர் இரா. காமராசு*
*முனைவர் உ. அலிபாவா*

இதழ் வடிவமைப்பு
***கா. குணசேகரன்***



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c. No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட். ,**
**41-பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 புத்தொளி பாய்ச்சிய புத்தகங்கள்
ஆசிரியர் குழு........ 04

2 படித்துப் பாருங்களேன்
ப.கு.ராஜன்........ 06

3 செயற்கை நுண்ணறிவைப் பற்றிய விரிவான நூல்
அ.கா.ஈஸ்வரன் ........ 13

4 நாவல் இலக்கிய ஆய்வில் விலகி வாசித்தலும் அமைப்புக்கோட்பாடும்
முனைவர் பா.ஆனந்தகுமார்........ 21

5 பட்டுக்கோட்டையாருக்கான கவிதாஞ்சலி
இரா.காமராசு........ 29

6 பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் வடமொழி கலவா தமிழ் நூல்
டாக்டர் சு.நரேந்திரன் ........ 31

7 முஸ்லிம் – இந்து – பாகிஸ்தான்: நிகழ்வுகள், விளைவுகள் குறித்து அம்பேத்கரின் உரையாடல்கள்
வீ.அரசு........ 35

8 தி.மு.க. நாவலாசிரியர்களின் நாவல்கள் சித்திரிக்கும் அரசியல் சொல்லாடல்கள்
ந.முருகேசபாண்டியன்........ 47

9 மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் புலங்களின் எல்லைகளைக் கலைத்தல்
மு. அறிவழகன்........ 55


10 குறிஞ்சிச் செல்வர்
டாக்டர் த.அறம்........ 60

11 கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் சாதியச் சிக்கல்கள்
க. உஷாநந்தினி & முனைவர் ப. பாலமுருகன்........ 62

12 நிகழ்வுகளைக் கடத்திச் செல்லும் திரைநாவல்
வெ. சந்தியா........ 66

13 SERVICES OF BHASKARA SETHUPATHI FOR THE SPREADING OF VAISHNAVA CONCEPT IN RAMANATHAPURAM REGION - A Study
Mr.D.BHARATHI & Dr.K.JEYAKALAI........ 68

14 Information Seeking Behavior of the Academic Library Users in the Affiliated College Under Bharathiar University: A Case Study of Santhalinga Adigalar Arts, Science, and Tamil College
Dr. S.ABIRAMI........ 71



# புத்தொளி பாய்ச்சிய புத்தகங்கள்

சீனப் பயணி யுவான் சுவாங் கி.பி.629ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார். கி.பி.645ஆம் ஆண்டு திரும்பிச் சென்றார். பதினாறாண்டுக்காலம் இந்தியாவின் பல பகுதிகளுக்குத் தொடர் பயணங்களை மேற்கொண்டுள்ளார். தமிழகத்திற்கும் வந்துள்ளார். தமிழகப் பகுதிகளில் 'மதநம்பிக்கையுள்ள ஒரு சிலர் இருக்கிறார்கள்' என்றும் 'சிலர் சமய மறுப்பாளர்களாக இருந்தனர்' என்றும் இன்னும் இதுபோன்ற பல நுட்பமான செய்திகளையும் தகவல்களையும் தனது பயணக் குறிப்பில் அடர்த்தியாகப் பதிவு செய்துள்ளார்.

இவருடைய இந்தியப் பயணத்திற்கான பின்புல வரலாறு சுவாரஸ்யமானது. இளம் வயதிலேயே யுவான் சுவாங் தனது மூத்த சகோதரருடன் அங்கிருந்த பௌத்த மடாலயங்களுக்குச் செல்வதை வழக்கமாக வைத்திருந்தார். அந்தக் காலகட்டத்தில் அங்கு பௌத்த மதம் புதுமையானதொரு சமயமாக மக்களால் பார்க்கப்பட்டது. தனது சகோதரரோடு அங்கிருந்த பல மடாலயங்களுக்குச் சென்றார். பல நேரங்களில் மடாலயங்களிலேயே தங்கினார். குறுகிய காலத்தில் பௌத்த சமயத்தின் மீதான அவரது ஈடுபாடு அதிகரித்தது. பௌத்த சமயத்தின் புனித நூல்களைக் கற்றார்; அச்சமயம் சார்ந்த உரைகளையும் உரையாடல்களையும் ஊன்றிக் கவனிக்கலானார். இவரும் பேசத் தொடங்கி அவரது இருபதாவது வயதிலேயே பௌத்தத் துறவியாகப் பிரமாணம் பெற்றார். தனது சமய ஞானத்தையும் பேச்சாற்றலையும் வளர்த்துக் கொண்டார்.

மிக விரைவிலேயே கல்வி அறிவில், சமயஞானத்தில் சிறந்த – திறம்படப் பேசக்கூடிய இளம் துறவியாக பரவலான அங்கீகாரம் பெற்றார்.

நாள் ஆக ஆக இவரது வேகம் அதிகரித்தது. தேடல் வேட்கையோடு பரிணாமம் பெற்றது. பௌத்த நூல்களை மூல மொழியிலேயே படிக்க வேண்டுமென்ற சிந்தனையும் புத்தர் போதனைகளிலுள்ள ஆழ அகலங்களை, உட் பொருளை பௌத்தம் பிறந்த மண்ணின் மைந்தர்களாக விளங்கும் சமயச் சான்றோர்களிடம் கற்றுத் தெளிய வேண்டுமென்ற தாகமும் உருவெடுத்தது.

தேவையான முன் தயாரிப்புகளைச் செய்துகொண்டு கி.பி.629ஆம் ஆண்டு தனது

பயணத்தை வெளிப்படுத்தாமல் இந்தியாவுக்குப் புறப்பட்டார். பதினாறு ஆண்டுகள் இந்தியாவில் அவர் பயணித்தவை, பார்த்தவை, படித்தவை, கேட்டவை ஏராளம்.

கி.பி.645இல் யுவான் சுவாங் சீனா திரும்பிச் சென்று. தனது சான்-யான் நகரை அடைந்தார். மாமன்னர் தாங்-தாய்-சங் தலைமையில் வரலாறு காணாத வரவேற்பு யுவான் சுவாங்கிற்கு அளிக்கப்பட்டது. அதுவரை எந்த ஒரு பௌத்தத் துறவிக்கும் அந்தளவுக்கான எழுச்சியுடன் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டதில்லை.

யுவான்-சுவாங் சீனாவுக்கு இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றது 657 நூல்களையும் சில சிறிய அழகிய புத்தர் சிலைகளையும்தான். அவற்றுள் பெரும்பாலானவை பௌத்த சமய நூல்கள். இவர் கொண்டுசென்ற ஓலைச் சுவடிகளான நூல்கள் உரிய மரியாதையுடன் இருபது குதிரைகளின் மீது அலங்காரத்துடன் வைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்களால் மகிழ்வுடன் வரவேற்கப்பட்டன.

மன்னரின் நண்பரானார் யுவான் சுவாங். மன்னர் யுவானிடம் தனது புனிதப்பயண அனுபவங்களை முழுமையாகப் பதிவு செய்யும் விதத்தில் ஒரு நூல் எழுத வேண்டினார்; எழுதி முடித்தார் யுவான். அந்நூல் நம் நாட்டு வரலாற்று ஆவணங்களில் ஒன்றானது.

யுவான் சுவாங் தலைமையில் ஒரு அறிஞர் குழு அமைத்து அவர் இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற நூல்கள் அனைத்தையும் மொழிபெயர்க்க அரசாணை பிறப்பித்தார் மன்னர். அதற்கான உதவிகள் அனைத்தையும் செய்தார் மன்னர். நூல்கள் மொழி மாற்றம் பெற்றன.

அவை சமயப் புத்தகங்கள் மட்டுமல்ல, இந்திய வரலாறு, கல்வி, பண்பாடு, மருத்துவம், நாகரிகம், மக்களின் பழக்கவழக்கங்கள் உள்ளிட்ட பல்வகை உண்மைகளைப் பறைசாற்றிய புதையல்கள்.

யுவான் சுவாங்கால் இந்திய அறிவுச் செல்வங்கள் அள்ளிச் செல்லப்பட்டு 1380 ஆண்டுகளாகின்றன.

ஆம்... அவை சீனாவுக்குப் புத்தொளி பாய்ச்சிய இந்தியப் புத்தகங்கள்.

அரிய நூல்கள் உருவான வரலாற்றை அறிந்து கொள்வோர்க்கு அவற்றை வாசிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும் என்பதில் சந்தேகமில்லை.


●

**ஆசிரியர் குழு**



படித்துப் பாருங்களேன்...

# உலக முதலாளித்துவத்தின் கிரீமிலேயர்




**தொழில்நுட்பப் பிரபுத்துவம்**
முதலாளித்துவத்தைக் கொன்றது எது?
**யானிஸ் வருஃபாக்கிஸ்**
(Techno Feudalism – What Killed Capitalism by Yanis Varoufakis)



**ப.கு.ராஜன்**

*யானிஸ் வருஃபாக்கிஸ் கிரிஸ் நாட்டின் ஏதென்ஸில் 1961ஆம் ஆண்டு பிறந்தார். கிரிஸ் நாட்டில் புதிய இடதுசாரிக் கட்சியான 'சிரிஸா' அமைச்சரவையில் நிதி அமைச்சரானார். உலகப் புகழ் பெற்றார். அதற்கு முன்பு கிரிஸ், இங்கிலாந்து, அமெரிக்க, ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இங்கிலாந்தின் எஸ்ஸெக்ஸ், பர்மிங்ஹாம் பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் கற்று முனைவர் பட்டம் பெற்றவர்.*

*குலோபல் மினோட்டர் (தமிழில் – அகில உலக பகாசுரன் - பாரதி புத்தகாலயம்), அடல்ட்ஸ் இன் த ரூம் (அறையிலுள்ள வயது முதிர்ந்தவர்களுக்கு), அன் எக்கனாமிக் ஹிஸ்டரி ஆஃப் யூரோப் (ஐரோப்பாவின் பொருளாதார வரலாறு) ஆகிய பல லட்சம் பிரதிகள் விற்பனையாகிய நூல்களின் ஆசிரியர்.*

*சிரிஸா கட்சித் தலைமையின் 'ஊசலாட்ட', 'சமரச' அரசியலைத் தாங்க முடியவில்லை என்று சொல்லி DiEM25 (Democracy in Europe 25) என்ற இயக்கத்தை உருவாக்கி அதன் தலைவராக இருக்கின்றார். 2019 ஆம் ஆண்டு முதல் அந்த இயக்கத்தின் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகப் பணியாற்றினார்.*

*நூலின் தலைப்பான 'தொழில்நுட்பப் பிரபுத்துவம்' என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். தலைப்பின் இரண்டாவது வரியான 'முதலாளித்துவத்தைக் கொன்றது எது?' என்பதை நாம் எப்படி ஏற்பது?*

அப்படி என்ன முதலாளித்துவம் உலகில் இல்லாது போய்விட்டதா என்ற கேள்வி நியாயமானதுதானே? அவரும் அதை உணர்ந்திருக்கின்றார். ஏன் அப்படி ஒரு வரியைத் தலைப்பாக வைத்தேன் என அவரே விளக்குகின்றார். சில ஆண்டுகள் முன்பு தனது 12 வயது மகள் புரிந்துகொள்வதற்கு ஏற்ப 'முதலாளித்துவத்தின் வரலாறு' என்பதைக் கூற ஒரு நூலை எழுதியுள்ளார். அப்போது பழைய செவ்வியல் முதலாளித்துவத்தை விளக்கும்போது, இன்றைய சமகால முதலாளித்துவம் மாமேதை கார்ல் மார்க்ஸ் கால முதலாளித்துவத்திலிருந்து எந்த அளவு மாறியிருக்கிறது என்பதை உணர்ந்துள்ளார். அந்த மாற்றத்தின் பாரதூரத் தன்மையை அடிக்கோடிட்டு கவனம் பெற வைக்க வேண்டும் எனக் கருதியுள்ளார். 'எனவே நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் எரிச்சல் ஏற்படுத்தும் இந்த வரியைச் சேர்த்தேன்' என்கிறார்! எனவே அந்த வரிக்கு அகராதி அர்த்தத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. மாற்றத்தின் அளவை வலியுறுத்தும் உயர்வு நவிற்சி எனக் கொள்வோம். நூல் என்ன சொல்கிறது எனப் பார்ப்போம்.

தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் சமூக மாற்றத்திற்கும் உள்ள உறவு குறித்து, அதாவது உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் உள்ள உறவு பற்றி கோடிட்டுக் காட்டுகின்றார் வருஃபாக்கிஸ். இரும்புப் பயன்பாடு வரும்வரை வரலாறு ஆயிரம் ஆண்டு பரப்பில் பேசப்பட்டு வந்தது; பின் நூற்றாண்டு பரப்பில் பேசப்படும் வண்ணம் மாற்றங்கள் துரித கதியில் நடக்கத் தொடங்கியதை விவரிக்கின்றார். பின்னர் முதலாம் இரண்டாம் தொழில் நுட்பப் புரட்சியில் இது இன்னும் வேகம் கண்டதை விளக்குகின்றார்.

தொழில் முதலாளித்துவத்திற்கு உருமாற்றம் என்பது பச்சோந்திக்கு நிறமாற்றம் என்பதுபோல அடிப்படைப் பண்பு. அதுதான் அதன் பாதுகாப்புப் பொறியமைவு. முதலாளித்துவத்தின் உருமாற்றங்களுக்கு அது உலகில் தோன்றிய காலத்திலிருந்து நீண்ட வரலாறு உள்ளது. அதனைச் சற்று பார்த்தால்தான் அது எடுத்துள்ள இன்றைய நிலையை அல்லது அதனை இடம்பெயரச் செய்துள்ள புதிய அமைப்பு குறித்துப் புரிந்துகொள்ள இயலும்.

முதலாளித்துவம் மானுடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சரக்குகளை உற்பத்தி செய்யும் நிலையைத் தாண்டி தனது சரக்குகளுக்காக மானுடத் தேவைகளை உற்பத்தி செய்யும் நிலைக்கு வந்தது. தனது சரக்குகளின் சந்தைக்காக புதிய நிலப்பரப்புகளில் பணியாற்றுவது என்பதைத் தாண்டி, தனது சரக்குகளுக்காக மானுட மனப்பரப்புகளில் பணியாற்றும் நிலைக்கு வந்து சேர்ந்தது. முதலாளித்துவம் இன்று மானுடத் தேவை அவாவை (Desire) திறம்பட உருவாக்கக் கூடியதாக மாறியுள்ளது. இந்தக் காரணத்திற்காக அனுபவ மதிப்புகளை 'பரிவர்த்தனை' மதிப்புகளாக மாற்றக் கூடியதாக உருவெடுத்துள்ளது. தான் பார்க்குமிடங்களிலெல்லாம் இருக்கின்ற அனுபவ மதிப்புகளை பரிவர்த்தனை மதிப்புகளாக மாற்றுவதன் மூலம் உலகைத் தன் வசமாக்கியுள்ளது.

முதலாளித்துவம், அலைக் கற்றைகள் (Air Waves), பெண்களின் கர்ப்பப்பைகள், கலை, மரபணுத் தொகுப்புகள், விண்கற்கள், அண்ட வெளி உட்பட முன்னர் கற்பனை செய்யும் பார்க்கவியலாதவற்றை எல்லாம் சரக்குகளாக மாற்றியுள்ளது. அதன் மூலம் பலவற்றின் அனுபவ மதிப்புகளை பரிவர்த்தனை மதிப்புகளாக மாற்றியுள்ளது; சில டாலர் மதிப்புகளாக, ஒரு வணிகச் சொத்தாக, ஒரு வர்த்தக ஒப்பந்தமாக மாற்றியுள்ளது.

உலகப் போர்களுக்குப் பிந்தைய காலத்தில் முதலாளித்துவம் அடைந்த மாற்றத்தின் பகுதியாக அது ஒரு புதிய சந்தைப் பரப்பைக் கண்டுபிடித்தது. அது மானுட கவனம் எனும் மனப்பரப்புதான். ஆனாலும் அவையெல்லாமும் முதலாளித்துவத்தின் அடிப்படையான உழைப்பின் இரட்டைப் பண்பு என்பதை அடித்தளமாகக் கொண்டதே. அதாவது உழைப்பு ஆற்றலின் பரிவர்த்தனை மதிப்பு மற்றும் பயன் மதிப்பு என்பதை அடித்தளமாகக் கொண்டதே. அந்த வகையில் அதன் சுரண்டல் அடிப்படை மாறவில்லை. அந்தவகையில் அவை முதலாளித்துவத்திற்குள் நடந்த மாற்றம்தான். முதலாளித்துவத்திலிருந்து புதிய ஒன்றுக்கான மாற்றம் அல்ல.

முதலாளித்துவம் தான் தொடும் ஏதொன்றையும் சரக்காக மாற்ற வேண்டிய நிர்பந்தம் கொண்டது. அது எப்போதும் தான் இதுவரை சரக்காக ஆக்காதவற்றைத் தேடிக் கண்டுபிடித்து சரக்காக



**யானிஸ் வருஃபாக்கிஸ்**

ஆக்கும் விரிவாக்கப் பண்பும் கொண்டது. முதலாளித்துவத்திற்காகப் பணியாற்றும் திறமையான விளம்பர வடிவமைப்பாளர்கள் இதனைத்தான் செய்கின்றனர். அவர்கள் மானுட மனதின் உணர்வுகளைக் கண்டறிந்து அதனைச் சரக்காக்குகின்றனர். அவை ஒரு சாக்லேட்டுத் துண்டின் மீது சுற்றப்படும் தாள்போல ஏதேனும் ஒன்றின் மீது சுற்றப்பட்டு சரக்காக ஆக்கப்பட்டு விற்கப்படுகின்றன.

உலகப் போர்களுக்குப் பின்னர் முதலாளித்துவம் தனது பொற்காலத்தை அடைந்தது. எல்லாப் பொருட்களும் ஏற்கனவே சரக்குகளாக மாற்றப்பட்டுவிட்டபின் புதிதாய் லாபம் உருவாகித் தொடர்ந்து பாய என்ன செய்வது? முதலாளித்துவம் கண்டுபிடித்த விடைதான் மானுட உணர்வுகளை சரக்குகளாக ஆக்குவது.

முதலாளித்துவத்தின் தொடக்ககால ஆர்வலர்கள் இந்த உருவெடுப்பு கண்டு அதிர்ச்சி அடைந்திருப்பர். அவர்கள் பாராட்டத்தக்க பண்புகள் கொண்ட தொழில்முனைவோர் எனக் கருதியது, திறன்கொண்ட வங்கியாளர்கள், கசாப்புக் கடைக்காரர்கள், மதுபானம் காய்ச்சுபவர்கள் போன்ற முதலாளித்துவ தொழில் முனைவோரைத்தான். தங்கள் வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவு செய்ய கடுமையாக உழைப்பவர்கள், எல்லாவற்றையும் சிக்கனமாகச் செய்துதர முயற்சிப்பவர்கள், தாங்கள் பயன்படுத்தும் கச்சாப் பொருட்கள், உதவிப் பொருட்கள், ஆற்றல் ஆகியவற்றின் பரிவர்த்தனை மதிப்பை அதன் கடைசிச் சொட்டுவரை பிழிந்து தங்கள் உற்பத்தி செய்யும் சரக்கிலேற்றிக் கொடுப்பவர்கள். இது மாற்றம் அடைந்தது.

அறிவியல் வளர வளர தொழில்நுட்பமும் வளர்ச்சி கண்டது. வளர்ச்சி அடைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த பெருவீத தொழிற்சாலைகள் இன்றியமையாதவை. பெருவீத தொழிற்சாலைகளைக் கட்டியமைக்க பெரும் மூலதனம் தேவை. பெரும் மூலதனத்திற்கு பெரும் வங்கிகள் தேவை. இந்த நிலை நிதிமூலதனப் பெருக்கத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. பெருவீத நிதி மூலதனம் அதற்குத் தேவையான மூலதனத்தைத் திரட்டுவதற்காக எதிர்காலத்திடமிருந்து கடன் வாங்கத் தொடங்கியது. அதாவது ஏற்கனவே பெருவீத நிறுவனங்கள் வாக்களித்திருந்த பெரு லாபத்திலிருந்து இன்னமும் ஈடேற்றம் ஆகாத லாபத்திலிருந்து கடன் வாங்கியது. இப்படிக் கடன் வாங்குவது உண்மையிலேயே உற்பத்தி செய்யப்போகும் தொழிற்சாலைகளைக் கட்டி அமைக்க மட்டும் பெறப்படவில்லை. மாறாக ஊக வணிக சூதாட்டங்களில் ஈடுபடவும் வாங்கப்பட்டன.

உள்ளதைக் கொண்டு வாழ்வது பிற்போக்கான பழைய பஞ்சாங்க நடைமுறையாகவும் வாரியிறைத்தல் நவீன அணுகுமுறை எனவும் கருதப்பட்டது. பெருமுதலாளித்துவத்திற்கு எது நல்லதோ அது அமெரிக்காவிற்கு நல்லது எனப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் இந்தப் போக்கு நீண்டகாலம் தொடரப்படவில்லை. 1929 ஆம் ஆண்டின் பெருவீழ்ச்சியில் இது முடிவிற்கு வந்தது.

ரூஸ்வெல்ட் கொணர்ந்த புதிய ஒப்பந்தம் (New Deal) என்ற நடைமுறைகள்தான் பெருவீழ்ச்சியை முடிவிற்குக் கொண்டு வந்ததற்கும் அமெரிக்கா சர்வ நாசத்திலிருந்து காப்பாற்றப்பட்டதற்கும் காரணம் எனக் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் இரண்டாம் உலகப் போர்தான் முக்கியமான காரணம். பேர்ல் ஹார்பர் துறைமுகத்தை தாக்கியதன் மூலம் ஜப்பான் இரண்டாம் உலகப் போரை அமெரிக்காவிற்குக் கொண்டு வந்தது. 1929 ஆம் ஆண்டு பெருவீழ்ச்சி காலத்திலிருந்து உலகப்போர் முடியும்வரை அமெரிக்கப் பொருளாதாரம் சோவியத் சோசலிசப் பொருளாதாரத் திட்டமிடலைத்தான் பின்பற்றியது. அதன்படி அமெரிக்கா போரில் வெற்றிபெற என்ன தேவையோ அவற்றை அமெரிக்க முதலாளித்துவம் உற்பத்தி செய்யும். அமெரிக்க அரசு, முதலாளித்துவத்திற்கு ஒரு குறைந்தபட்ச லாபத்தை உறுதி செய்யுமென்று ஆனது. அது பெரும் வெற்றி பெற்றது. ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி நான்கு மடங்கு அதிகரித்தது. அதாவது பெரு நிதி மூலதனத்தை அரசின் கட்டுப்பாட்டில் விட்டது எல்லோருக்கும் நலன் பயப்பதாகியது. பெருமுதலாளித்துவமும் அமெரிக்க அரசும் ஈருடல் ஓருயிர் ஆயின. பெருமுதலாளித்துவ பெரு வங்கிகளின் தலைவர்கள் அரசுத் துறைகளின் தலைவர்களாக ஆயினர்; பிறகு மீண்டும் பெருநிறுவனத் தலைவர்கள் ஆயினர். அதிகாரிகள் அமைச்சர்களாயினர்; மீண்டும் அதிகாரிகளாயினர். ஜான் கெனத் கால்பிரித் இந்த உறவு முறையை தொழில்நுட்பக் கட்டமைப்பு (Techno Structure) என்றார்.

லாபம் என்பது இந்தக் கட்டமைப்பைக் கொண்டு செலுத்த அவசியம்தான். ஆனால் லாபம் முதன்மையானதல்ல என ஆகியது. தங்கள் கீழுள்ளவர்களைத் தொடர்ந்து பணியில் இருத்தி வைப்பது முதன்மையான நோக்கமானது. தங்கள் கட்டமைப்பு மேலும் மேலும் பெரிதாக ஆவது லாபத்தைக் காட்டிலும் முக்கியமானதாக ஆகியது. அரசாங்கத்தில் இருந்த 'புதிய ஒப்பந்தக்காரர்கள்' இதற்காக வெளிநாட்டுச் சந்தைகளை தங்கள் ஆதிக்கத்திற்குக் கீழே கொண்டு வருவதும் உள்நாட்டில் புதிய தேவை அவாக்களை (desires)

உருவாக்குவதும் முக்கியம் என உணர்ந்தார்கள். போரின் முடிவிற்குப் பிறகு இது உடனடியான பணிப்பரப்பு ஆனது.

போரின் முடிவுக் காலத்தில் உருவான பிரெட்டன் வுட்ஸ் அமைப்பு இதற்கு வழி கோலியது. உலக வங்கியும் சர்வதேச நிதி நிறுவனமும் தொடங்கப்பட்டன. அமெரிக்கா மார்ஷல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அடிப்படையில் 1929 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மீண்டும் ஏற்படாமல் தடுப்பது என்பது நோக்கம். இதற்காக போரால் முழுச் சிதிலமாகி இருந்த ஐரோப்பாவையும் ஜப்பானையும் அமெரிக்கப் போர் பொருளாதாரக் கட்டமைப்புடன் இணைத்தனர். உடனடி பணி ஐரோப்பா மற்றும் ஜப்பான் கைகளில் பணம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பதை அமெரிக்கத் தலைமை உணர்ந்தது. எனவே ஐரோப்பாவும் ஜப்பானும் அச்சடிக்கும் கரன்ஸி நோட்டிற்கு ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனை விகிதத்தில் தனது செலாவணியான டாலரை அளிக்க முடிவு செய்து அறிவித்தது. போரினால் அதிகம் பாதிக்கப்படாத அமெரிக்காவின் டாலருக்கு தங்க தகுதரமும் இருந்தது (35 அமெ.டாலர்: 1 அவுன்ஸ் தங்கம்). இது ஐரோப்பிய ஜப்பானிய நாணயத்திற்கு ஒரு மதிப்பையும் ஏற்பையும் பெற்றுத்தந்தது. போரால் அதிகம் பாதிக்கப்பட்ட ஆனால் பெரும் மறுகட்டமைப்பிற்கு இடமிருந்த ஜப்பானும் ஜெர்மனியும் போருக்குப் பிந்தைய பொருளாதாரத்தை இழுத்துச் செல்லும் இரு எஞ்ஜின்களாக ஆகின. அந்த நாடுகளின் மறு கட்டமைப்பிற்குத் தேவையான சர்க்குகளுக்கான சந்தைக்கு உற்பத்தி செய்வது, தங்கள் நாட்டின் மறு கட்டமைப்பிற்குத் தேவையான சரக்குகளுக்கான சந்தைக்கு உற்பத்தி செய்வது என ஐரோப்பிய ஜப்பானியப் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சி பெற்றது; தொடர்ந்து லாபம் சேர்ந்தது. அவற்றை ஒட்டி அமெரிக்கப் பொருளாதாரம் ஏனைய ஆசிய நாடுகளின் பொருளாதாரம் ஆகியவையும் வளர்ச்சி கண்டன.

ஏறக்குறைய 300 ஆண்டு காலம் முதலாளித்துவம் கட்டியமைத்திருந்த தொழிற்சாலை, உள்கட்டமைப்பு வசதிகள் எல்லாம் போரால் தவிடுபொடி ஆகியிருந்தன. அவற்றை மீளுருவாக்கம் செய்யும் பணி, முதலாளித்துவம் சுமார் 30 ஆண்டுகள் அதாவது 1973 வரை எந்த நெருக்கடியும் இல்லாமல் இயங்கத் தேவையான சந்தைக் கேட்பை (Demand) உருவாக்கித் தந்தது. லாபம் மேன்மேலும் குவிந்தது. அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகியவை மிகக் குறைவான வேலையின்மை, மிகக் குறைவான விலைவாசி உயர்வு-பணவீக்கம், உயர் வளர்ச்சி வீதம், குறைந்து வரும் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றைக் கண்டன.

அமெரிக்க டாலர் எல்லோரும் சேகரிக்கத் தேடும் நாணயமாக ஆகியது. அமெரிக்காவில் ஏதும் சரக்கு வாங்காத நாடுகளும் டாலர் சேகரிக்கும் நாடுகளாகின. டாலர் தங்கத்தைக் காட்டிலும் மதிப்பானதாக ஆகியது. அமெரிக்க டாலருக்கும் ஏனைய – ஜப்பானிய, ஐரோப்பிய - நாடுகளின் நாணயங்களுக்குமிடையில் நிலையான பரிவர்த்தனை விகிதம் என்பது இதன் அடிப்படை.

இது தொடர வேண்டுமென்றால் அமெரிக்கா ஒரு உபரி நாடாகத் தொடர வேண்டும். அதாவது அமெரிக்கா மற்ற நாடுகளுக்கு செய்யும் ஏற்றுமதி ஏனைய நாடுகளிடமிருந்து செய்யும் இறக்குமதியைக் காட்டிலும் தொடர்ந்து அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் 1960 களின் முடிவில் இந்நிலை இல்லாமல் போனது. இதற்கு மூன்று காரணிகள் உண்டு. முதலாவது காரணி வியட்நாம் போர். அமெரிக்கா ஏராளமான செல்வத்தை அந்த வெல்ல முடியாத போருக்குக் கொட்டி அழுதது. இரண்டாவது லிண்டன் ஜான்ஸன் போருக்கு இளைஞர்களை குறிப்பாக கருப்பின இளைஞர்களை அனுப்பி பெற்ற கெட்ட பெயரை சமன் செய்யக் கொண்டுவந்த ‘மகத்தான சமூகம்’ (Great Society) திட்டம் காரணமாக பணப் புழக்கம் அதிகரித்து நாட்டின் இறக்குமதி அதிகரித்தது. குறிப்பாக ஐரோப்பிய, ஜப்பானிய நுகர்வுச் சாதனங்களின் இறக்குமதி அதிகரித்தது. மூன்றாவதாக ஜப்பானிய ஜெர்மானிய தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனும் தரமும் அதிகரித்தன; அவற்றின் உற்பத்திப் பொருட்களின் விலை அமெரிக்க உற்பத்திப் பொருட்களைவிட ஒப்பீட்டளவில் மலிவானவையாக இருந்தன.

முழுகி வந்த அமெரிக்கப் பொருளாதாரத்தைக் காப்பாற்ற அமெரிக்க அதிபர் நிக்ஸன், 1971 ஆகஸ்ட் 15 ஆம் நாள், பிரெட்டன் வுட்ஸ் ஒப்பந்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்தார். அமெரிக்க டாலரை தங்க தகுதரத்திலிருந்து விடுவித்தார். ஐரோப்பிய, ஜப்பானிய நாணயங்களுக்கும் அமெரிக்க டாலருக்கும் இடையே இருந்த நிலையான நிர்ணயிக்கப்பட்ட பரிவர்த்தனை விகிதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். இனி பரிவர்த்தனை விகிதத்தை சந்தை தீர்மானிக்கும் என்றார்.

2002! நிக்ஸன் தங்க தகுதரத்தையும், டாலரின் நிலையான பரிவர்த்தனை மதிப்பையும் முடிவுக்குக் கொண்டு வந்து 30 ஆண்டுகள் ஓடியிருந்தன. அந்த ஆண்டு உலகில் மானுடத்தின் மொத்த வருவாய் 50 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள். (1 டிரில்லியன் : ஒரு லட்சம் கோடி!) ஆனால் அந்த ஆண்டு உலகெங்கும் நிதி மூலதன சூதாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தொகை 70 டிரில்லியன் அமெரிக்க

டாலர்கள். [நீங்கள் உங்கள் மாத சம்பளத்தைப் போல் 1.4 மடங்கு தொகையை சூதாடித் தொலைத்தால் என்ன ஆவீர்கள்?]

2007 ஆம் ஆண்டு, உலகில் மானுடத்தின் மொத்த வருவாய் 70 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகின. ஆனால் நிதி மூலதன சூதாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தொகை 750 டிரில்லியனாக ஆகிவிட்டது. இது வெறுமனே பங்குச் சந்தைப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் மூலம் நடப்பதில்லை. இது ஆப்ஷன், ஹெட்ஜ் ஃபண்ட்.... இத்யாதி இத்யாதி 'வருவிப்பான்கள்' மூலம் நடைபெறுகிறது. வங்கிகள் ராமனிடம் வைப்புத் தொகை பெற்று அதிலிருந்து சோமனுக்கு வீடு கட்டக் கடன் கொடுக்கும். சோமனிடம் கொடுத்த கடனுக்கு சுமார் 10% வட்டி வாங்கும். ராமனின் வைப்புத் தொகைக்கு சுமார் 7% வட்டி அளிக்கும். மீதியைக் கொண்டு வங்கிப் பணியாளர்களுக்கு ஊதியம் அளிப்பதோடு லாபமும் சம்பாதிக்கும். இது போன்ற பணிகளை மட்டும் செய்யாது ராமனின் பணத்தை வைத்து சூதாடும். இதில் யாரேனும் ஒரு சோமன் கடனைக் கட்ட முடியவில்லையென்றால் பரவாயில்லை. ஆனால் சோமனைப் போன்று எல்லாக் கடன்காரர்களும் பணம் கட்டவில்லை என்றால் ராமன் போன்றோரின் வாழ்நாள் சேமிப்பு எல்லாம் காற்றில் ஆவியாகிவிடும். வங்கி தான் ஆடிய சூதாட்டத்தில் பெரும் இழப்பைச் சந்தித்தாலும் நொடித்துப் போகும். ஒரு வங்கி நொடித்தால் மிக நீண்ட சங்கிலிப் பிணைப்பில் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும் எல்லா வங்கிகளும் ஸ்தம்பித்துப் போகும். எந்தப் பாவமும் செய்யாத ராமன் பாதிக்கப்பட்டு திவாலானது போல உண்மையில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களும் அந்த உற்பத்தி நிறுவனங்களின் பணத்தை வைத்துள்ள வங்கிகளும் திவாலாகும். பொருளாதாரம் கடும் வீழ்ச்சியில் விழும்.

1929 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியும் பெரு வீழ்ச்சியும் இதுபோல ஏற்பட்டதுதான் என்று ஒரு குத்து மதிப்பான புரிதலுக்குக் கூறலாம். அது போன்ற நிலை மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்குதான் பிரெட்டன் வுட்ஸ் ஒப்பந்தமும் உலக வங்கி, ஐ.எம்.எஃப் ஆகியவையும் வந்தன. ஆனால் பிரெட்டன் வுட்ஸ் ஒப்பந்தத்தை அமெரிக்கா கிழித்தெறிந்த பின் இது போன்ற நிலை உருவாகாது தடுக்க உலகில் அமைப்பேதுமில்லை, விசையேதுமில்லை. அப்படியென்றால் நிக்ஸன் பிரெட்டன் வுட்ஸையும் டாலரின் தங்கத் தகு தரத்தையும், நிலையான பரிவர்த்தனை விகிதத்தையும் முடிவிற்குக் கொண்டுவந்ததன் காரணம் என்னவெனப் புரிந்துகொள்ள வேண்டும்.

1960களின் இறுதியிலேயே அமெரிக்காவின் வணிக உபரி சரியத் தொடங்கி விட்டது. விரைவில் அமெரிக்க டாலர் தங்கத்திற்கெதிரான மதிப்பை இழக்கும் என்பதை அறிந்த நிதிமூலதன முதலைகள் டாலரைத் தங்கத்திற்கு மாற்றத் தொடங்கினர். இந்தப் போக்குத் தொடர்ந்தால் அமெரிக்கத் தங்கம் முழுவதும் காணாமல் போகும். இதை உணர்ந்த நிக்ஸன் தங்க தகு தரத்தை விலக்கினார். டாலர் மதிப்பிழக்கத் தொடங்கியது. ஆனால் ஒரு கட்டத்திற்குப் பிறகு அது மதிப்பிழக்கவில்லை. மாறாக மதிப்பேறத் தொடங்கியது. என்ன மாயம்? அமெரிக்க டாலருக்கும் ஏனைய நாணயங்களுக்கும் இடையே 1948 இல் செயற்கையாக உருவாக்கியிருந்த பரிவர்த்தனை விகிதத்தையும் விலக்கிக் கொண்டது. அதுவரை டாலரோடு பிணைக்கப்பட்டிருந்ததால் மதிக்கப்பட்ட ஐரோப்பிய, ஜப்பானிய நாணயங்கள் மதிப்பிறக்கம் கண்டன. எல்லோரும் டாலருக்கு ஆளாய்ப் பறந்தனர். ஏனென்றால் பெட்ரோலியப் பொருட்களை எல்லோரும் இப்போது டாலர் கொடுத்துதான் வாங்க வேண்டும் எனும் நிலை. அந்த நிலைக்கு மேற்காசிய நாடுகள் ஏன் வந்தன என்பது பெரிய கதை. அதுமட்டுமல்ல; ஏனைய முக்கியமான கனிமப்பொருட்கள், விமான, கப்பல் சரக்குக் கட்டணம் என ஏராளமான வணிகப் பரிவர்த்தனைகளை டாலரைக் கொண்டு மட்டுமே நடத்த முடியும் என்பதே நிலை. எனவே டாலரின் மதிப்பு உயர்ந்தது. இன்றுவரை தக்க வைக்கப்பட்டுள்ளது.

இத்தோடு வேறு ஒரு போக்கும் ஆரம்பமானது. அமெரிக்கப் பொருட்களின் உற்பத்தி விலை ஐரோப்பிய ஜப்பானியப் பொருட்களின் விலையோடு ஒப்பிட அதிகமாக இருந்தது. பல காரணங்கள் இருந்தன என்றாலும் உடனடியாக அமெரிக்க நிறுவனங்களும் அரசும் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என அமெரிக்கத் தொழிலாளரின் கூலியை ஒப்பீட்டளவில் குறைத்தன. இன்றைக்கு (2020 இல்) அவர்களது உண்மைக் கூலி 1974 ஆம் ஆண்டு கூலிதான். அத்தோடு 1970ஆம் ஆண்டுகளின் தொழிலாளர் யூனியன்கள் மீதான தாக்குதலும் ஆரம்பமாகியது. இதனை ஐரோப்பிய நாடுகளும் தத்தம் நாடுகளில் பின்பற்றினர். ரீகனிசமும் தாட்சரிசமும் மேற்குலகு முழுவதும் கோலோச்சின.

1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்து சிதறியது. இந்தப் போக்கு இன்னும் வேகம் கண்டது. அதன் பிறகு ரஷ்யாவும் மிகவும் முக்கியமாக சீனாவும் அமெரிக்காவிற்கு தொடர்ந்து மூலதனத்தையும் உற்பத்திச் சரக்குகளையும் அனுப்பின. இரண்டிலும் பற்றாக்குறை கொண்ட அமெரிக்கா அப்படி உலகம் முழுவதும் இருந்து உற்பத்திப் பொருட்களையும் மூலதனத்தையும் ஈர்க்கும் காந்தமாயிற்று. டாலர் தங்கமாகியது.

அமெரிக்க முதலாளித்துவம் வாழ்வது சீனா உட்பட எல்லோருக்கும் தேவை என்றானது.

இந்தச் சூழல் மாற்றத்தோடு 1929 பெரு வீழ்ச்சியோடு காணாமல் போயிருந்த பொருளாதாரக் கோட்பாடுகள் எல்லாம் புத்தம் புதிய ஞானம் போல மீண்டெழுந்தன. ஒழுங்காற்றல் என்ற பெயரிலான அரசாங்கத் தலையீடில்லாத நிதிச் சந்தை வேண்டும்; சந்தை என்ன செய்ய வேண்டும் என்பதை அறியும் என்பதெல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டன. இத்தோடு 1970 களின் இறுதியில் சந்தைக்கு வந்த தனிநபர் கணினி, 90 களில் வந்த இணையம், WWW ஆகியவையும் இணைந்தன. வருவிப்பான்கள் (Derivatives), ஆப்ஷன், ஹெட்ஜ் ஃபண்ட் இத்யாதி இத்யாதி நிதிமூலதனப் பத்திரங்களில் நடக்கும் யூக வணிகம், சூதாட்டம் எல்லாம் கற்பனைக்கெட்டாத அளவுகளில் கண்ணிமைக்கும் நேரங்களில் நடந்தன. கணினிகளும் இணையமும் நிதிமூலதன சூதாடிகளின் ஆட்டத்தை மிகவும் சிக்கலானதாக, எந்தவொரு தேசிய அரசின் கட்டுப்பாடும் இல்லாத வெளியில் நடத்திட ஏது செய்தன. இந்த நீண்ட வலுவற்ற சங்கிலியில் ஓரிடத்தில் ஏற்படும் துண்டிப்பு கணநேரத்தில் உலகமெங்கும் பாதிப்புகளை ஏற்படுத்தி உலகளாவிய அளவில் வழமையான பொருளாதார நடவடிக்கைகளும் ஸ்தம்பித்து நிற்கச் செய்தன. 2008 வரை நடந்தது அன்று நின்றது குமிழ் உடைந்தது. கோடிக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். ஆனால் இந்தக் குமிழ்களை உருவாக்கி ஊதிப் பெரிதாக்கிய வங்கியாளர்கள், முதலீட்டு நிறுவனத் தலைவர்கள் உடைந்து போகவில்லை, எரிந்துபோகவில்லை. ஏனென்றால் அவர்கள் எரிந்து போக அனுமதிக்கப்பட்டால் மிச்சமீதம் இருக்கும் பொருளாதாரச் செயல்பாடும் நிலைகுத்தி நின்று போகும். அமெரிக்காவில் வீடற்றவர்கள் எண்ணிக்கை இன்னும் பலமடங்கு அதிகமாகும். எனவே அமெரிக்க அரசு அளவற்ற பணத்தைப் பாய்ச்சி, அவர்கள் உடைந்து போகாமல் எரிந்துபோகாமல் காப்பாற்றியது.

இப்படி கணினியும் இணையமும் முதலாளித்துவத்தின் பரிணாம வாழ்வுத் தகுதியை அழித்துவிட்டன (Capitals Evolutionary Fitness). அது தனது உடைமையாளர்களை முதலாளித்துவத்திலிருந்து முகிழ்ந்தெழுந்த புதிய ஆளும் வர்க்கமாக மாற்றிவிட்டது. மூலதனம் இப்போதும் இருக்கிறது; அது செழித்துக் கொழிக்கின்றது. ஆனால் முதலாளித்துவம் ஒழிந்துபோனது. ஒரு சமூகக் கட்டமைப்பிற்குள் தொழில்நுட்பம் வளர்ச்சி காண்கிறது. ஒரு கட்டத்தில் சமூகக் கட்டமைப்பு அடையாளம் காண முடியாத புதிய ஒன்றாக மாற்றம் காண்கிறது. ஆனால் இந்தக் கட்டமைப்பைக் கட்டியமைத்த எல்லாமும் முழுமையாக மாறியாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மூலதனம், உழைப்பு, பணம் ஆகியவை எல்லாம் புதிதாக ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

கடற்பயணத்திலும் கப்பல் கட்டும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் உடனடியாக நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துவிடவில்லை. மாறாக வணிக அளவுகள் பெரிதும் அதிகரித்து வணிக முதலாளித்துவத்தின் செல்வக் குவிப்பு அதிகரித்து ஒரு நிலைமாற்றுப் புள்ளியை அடைந்தபோது அது நிலத்தையும் உழைப்பையும் விற்பனைச் சரக்காக மாற்றியது. விரைவில் எல்லாம் விற்பனைச் சரக்குகளாக மாறின. நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவமாக உருமாற்றம் அடைந்தது.

அதுபோல 2008ஆம் ஆண்டிற்குப் பிறகும் உலகமெங்குமிருந்து லாபம், சேமிப்பு எல்லாம் வால்ஸ்ட்ரீட்டுக்கு வந்து குவிவது நிற்கவில்லை. ஆனால் அவ்வாறு குவியும் செல்வத்தில் ஒரு சிறு பகுதிதான் உண்மையான உற்பத்தியை நடத்தும் தொழிற்சாலை மூலதனமாக, தொழில் நுட்ப வளர்ச்சி, வேளாண்மை வளர்ச்சி மூலதனமாக மாறியது. வால்ஸ்ட்ரீட்டுக்கு வந்து சேர்ந்த மூலதனம் வால்ஸ்ட்ரீட்டிலேயே தங்கி நின்றது. அது ஊக வணிகத்தில் ஈடுபட சூதாடிகளுக்கு பணம் அளித்து அவர்களை அதில் ஈடுபட நிர்பந்தித்தது. இல்லையென்றால் அவர்கள் வேலை பறிக்கப்படும். எனவே அவர்களும் அதுவரை உலகம் காணா அளவுகளில் ஊக வணிக சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கையிலிருக்கும் மூலதனம் உண்மையில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மூலதனத்தைப் போல் பலமடங்கு. இவர்கள் கைவசமிருக்கும் மூலதனம் புதியவகை மூலதனம். இவை தொழிற்சாலைகளாக, வேளாண் பண்ணைகளாக, எந்திர சாதனங்களாக நிலத்தில் காலூன்றி நிற்பவை அல்ல. அவை எங்கோ வானத்தில் மிதக்கும் மேக மூலதனம் (Cloud Capital). இந்தப் புதிய வகை மூலதனத்தின் பிறப்பை அதன் வரலாற்றை முதல் இரண்டு அத்தியாயங்களில் விளக்கிய யானிஸ் வருஃபாக்கிஸ் இந்தப் புதிய மூலதனத்தின் இயங்கு விதிகளை அடுத்து வரும் அத்தியாயங்களில் விளக்குகின்றார். அதன் மூலம் அதனைத் தான் ஏன் தொழில்நுட்ப பிரபுத்துவம் என அழைக்கின்றார் என்பதையும் விளக்குகின்றார். அதனை அடுத்த பகுதியில் காண்போம்.

**தொடரும்...**

●

**கட்டுரையாளர்: NCBH பதிப்பாசிரியர், எழுத்தாளர், செயல்பாட்டாளர்.**

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# கலை இலக்கிய விருதுகள்

*அன்பான படைப்பாளிகளே,*

*வணக்கம்.*

*தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் - நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்தும் 34-ஆவது கலை இலக்கிய விருதுகளுக்கான படைப்புகள் கீழ்க்கண்ட வகைமைகளில் வரவேற்கப்படுகின்றன:*

1. **கட்டுரை நூல்கள்**
2. **சிறார் நூல்கள்**
3. **மொழிபெயர்ப்பு நூல்கள்**
4. **கவிதைத் தொகுப்புகள்**
5. **சிறுகதை நூல்கள்**
6. **நாவல்கள்**
7. **ஆய்வு நூல்கள்**
8. **மார்க்சிய நூல்கள்**
9. **அறிவியல் நூல்கள்**
10. **நாடகங்கள் (ஒளிப்பதிவு செய்யப்பட்டவை)**
11. **ஆவணப் படங்கள்**
12. **குறும்படங்கள்**

- ♦ *விருதுகளுக்குரிய நூல்கள் 2023-க்குப் பிறகு வெளிவந்தவையாக இருக்க வேண்டும். நூலின் இரண்டு படிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும்.*
- ♦ *நாடகங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் ஆகியவை 2024 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.* **takaepe2022@gmail.com** *என்ற மின்னஞ்சல் வழி அவற்றை அனுப்ப வேண்டும்.*
- ♦ *தனி நுழைவுப் படிவம் இல்லை.*
- ♦ *படைப்பாளிகள் தம் முகவரி, தன்குறிப்பு, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, படைப்புகள் குறித்த சிறுகுறிப்பு ஆகியவற்றை நூல்கள், குறும்படங்கள், ஆவணப் படங்கள், நாடகங்கள் ஆகியவற்றுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.*
- ♦ *2020-க்குப் பிறகு த.க.இ.பெ. - என்.சி.பி.எச். விருது பெற்ற படைப்பாளிகள் கலந்துகொள்ள இயலாது.*
- ♦ *படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்:* **30–11–2025.**
- ♦ *அனுப்ப வேண்டிய முகவரி:*

**மருத்துவர் த.அறம்**
**பொதுச் செயலாளர்**
**தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்**
**தனுஷ்கோடி அரங்கம்**
**63, பழைய படந்தால் ரோடு,**
**சாத்தூர் – 626203**
**விருதுநகர் மாவட்டம்**
*பேச: 9443244633* *மின்னஞ்சல்:* takaepe2022@gmail.com


| | | |
|---|---|---|
| **எஸ்.கே.கங்கா** | **த. அறம்** | **நா.இராமச்சந்திரன்** |
| மாநிலத் தலைவர் | மாநிலப் பொதுச் செயலாளர் | ஒருங்கிணைப்பாளர் |

திறனாய்வு



# செயற்கை நுண்ணறிவைப் பற்றிய விரிவான நூல்

அ.கா.ஈஸ்வரன்



புதிய கண்டுபிடிப்புகள் வருகின்ற போது, அதனை மார்க்சியப் பார்வையில் புரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவல் கம்யூனிஸ்டுகளில் பலருக்கு ஏற்படும். அவர்களின் ஆவலை நிறைவு செய்யும் வகையில், 'செயற்கை நுண்ணறிவும் உழைப்பின் எதிர்காலமும்' என்கிற இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

எந்திர மனிதன் (Robot) வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனைப் பற்றி விரிவான நூல் எதுவும் தமிழில் வரவில்லை. ஆனால் செயற்கை நுண்ணறிவைப் பற்றி செயற்கை நுண்ணறிவும் உழைப்பின் எதிர்காலமும் என்கிற தலைப்பில் ஒரு சிறந்த விரிவான நூலை எஸ்.பாலச்சந்திரன் எழுதியுள்ளார்.

இந்த நூல் சுமார் 480 பக்கங்களைக் கொண்டுள்ளது. இப்படி அதிகமானப் பக்கங்களைக் கொண்டிருந்தாலும் செயற்கை நுண்ணறிவு – ஒரு மார்க்சியப் பார்வை என்கிற தலைப்பில் முதலிலேயே சுமார் 80 பக்கங்களுக்கு இந்நூலாசிரியர் எழுதி உள்ளார். இதனோடு 25 பக்கங்களைக் கொண்ட 12ஆம் அத்தியாயத்தையும் படித்தாலேயே தேவையான புரிதல் கிடைத்துவிடுகிறது.

இந்த நூல் எத்தகையக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதை நூலின் தலைப்பே எடுத்துக் காட்டிவிடுகிறது. இந்த நூல் செயற்கை நுண்ணறிவும் அதனால் உழைப்பின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது பற்றியே விரிவாகப் பேசுகிறது.

புதுப்புது இயந்திரங்களைப் புகுத்தாமல் ஒரு முதலாளி மற்ற முதலாளிகளுடனான போட்டியில் வெற்றிபெற முடியாது. அதனால்தான் முதலாளித்துவத்தில் மற்ற உற்பத்தி முறைகளில் காணமுடியாத அளவுக்கு புதிய இயந்திரங்கள் புகுத்தப்படுகிறது. அப்படி வந்ததுதான் செயற்கை நுண்ணறிவு.

செயற்கை நுண்ணறிவு என்பது என்ன என்பதை, நூலாசிரியர் தமது முன்னுரையிலேயே வரையறுத்துக் கொடுத்துள்ளார்.

கம்ப்யூட்டர் துறையின் பரந்த கிளையில் ஒன்று செயற்கை நுண்ணறிவு. இது மனிதனது நுண்ணறிவு செய்கின்ற பணிகளைச் செய்யும் திறன் கொண்ட இயந்திரம். திட்டமிடல், சிந்தித்தல், கற்றுக்கொள்ளுதல் போன்ற பல்வேறு நுண்ணறிவுத் திறன்களை மனிதனைப் போன்றே சிந்தித்து செயல்படுகிறது. இந்தப் புதிய கண்டுபிடிப்பு மனிதப் பிழைகளைக் குறைப்பதுடன் உற்பத்தியை விரைவு படுத்துகிறது, அதிக உற்பத்தியையும் செய்கிறது.




**செயற்கை நுண்ணறிவும் உழைப்பின் எதிர்காலமும்**
**எஸ்.பாலச்சந்திரன் | வெளியீடு - இடது பதிப்பகம்**
**விலை- ரூ.400/- | பேசி: 9790133141**

கடந்த நான்கு ஆண்டுகளில் வணிகத்தின் பல துறைகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு 270% அதிகரித்துள்ளது என்று நூலாசிரியர் சொல்லும் போது அதன் பயன்பாட்டு அதிகரிப்பைப் புரிந்து கொள்ள முடிகிறது.

புதிய இயந்திரங்களின் வரவு என்பது பல தொழிலாளர்களை அப்புறப்படுத்துகிறது என்பது எப்போதும் நடைபெறுகிற நிகழ்வுதான். ஆனால் செயற்கை நுண்ணறிவு என்பது உழைப்பை மட்டுமல்லாது, சிந்தித்துச் செயல்படுவதுடன், திட்டமிட்டு முடிவுகளையும் எடுப்பதால் இதனை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. உழைப்பை முழுவதுமாக செயற்கை நுண்ணறிவு அப்புறப்படுத்திவிடுமா? என்கிற கேள்வி எழுப்பப்படுகிறது. அத்துடன் மார்க்சியத்தின் உபரி மதிப்புக் கோட்பாடு செல்லாததாகிவிடுமா? என்கிற கேள்வியும் எழுப்பப்படுகிறது. இதனை மறுத்து பல்வேறு விளக்கங்களை போதுமான அளவுக்கு இந் நூலாசிரியர் கொடுத்துள்ளார்.

"உயிருள்ள உழைப்பு இல்லாமல் முதலாளித்துவம் இருக்க முடியாது என்பதே மார்க்சியத்தின் முக்கியமான முடிவு. ஏனெனில் உயிருள்ள உழைப்புதான் உபரி மதிப்பின் இறுதி ஆதாரமாகும். செயற்கை நுண்ணறிவு, உற்பத்தியைத் தானியங்கி மயப்படுத்தினாலும், அந்த உற்பத்தியின் மதிப்பு (மற்றும் அதன் மூலம் இலாபம்) இறுதியில் செயற்கை நுண்ணறிவின் உருவாக்கம், பராமரிப்பு, உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான ஒட்டுமொத்த அமைப்பில் உள்ள மனித உழைப்பிலிருந்து பெறப்படுகிறது. மனித உழைப்பு உண்மையிலேயே மறைந்துவிட்டால், இலாபத்தின் ஆதாரம் மறைந்துவிடும்; இது முதலாளித்துவத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுக்குமேயல்லாமல், அம் முதலாளித்துவத்தின் புதிய, மேம்பட்ட வடிவத்திற்கு அல்ல. எனவே, செயற்கை நுண்ணறிவு யுகத்திலும் முதலாளித்துவம் நிலைத்திருப்பது, மனித உழைப்பின் தொடர்ச்சியான, இருப்பினும் மாற்றியமைக்கப்பட்ட, இருத்தலையும். உழைப்புச் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால்தான்." *(பக்கம் -218-219)*

மேலும் இந்த செயற்கை நுண்ணறிவு என்பது தொழிலாளர்களின் வேலைப் பளுவைக் குறைப்பதற்கு பதிலாக, முதலாளிகளின் லாபத்தைக் கூட்டுவதற்கே பயன்படுகிறது என்பதையும் இந் நூலாசிரியர் மிகவும் சிறப்பாக பல பக்கங்களில் திரும்பத்திரும்பக் கூறியுள்ளார்.

மார்க்சியவாதிகளுக்கு தேவைப்படுகிற பார்வை என்னவென்றால், இந்த செயற்கை நுண்ணறிவு சமூகப் பொருளாதாரத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும், அதன் எதிர் விளைவு என்னவாக இருக்கும் என்பதே ஆகும்.

வழக்கமான புதிய இயந்திரங்களைப் போல செயற்கை நுண்ணறிவைப் பார்க்க முடியாது. கம்ப்யூட்டர் தரவுகளில் இருந்து கற்றுக் கொள்ளவும், வடிவங்களை அடையாளம் காணவும், அதனடிப்படையில் முடிவெடுக்கவும் செயற்கை நுண்ணறிவு உதவிடுகிறது. இப்படி அலசி ஆராயும் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு பல துறைகளில் செயல்படுகிறது. குறிப்பிட்டு சொல்லக்கூடிய துறைகள் என்றால், மருத்துவம் மற்றும் சுகாதாரம், போக்குவரத்து, தொழில் மற்றும் உற்பத்தி, கல்வி, நிதி, விவசாயம், வாடிக்கையாளர் சேவை, பொழுது போக்கு. இதே போன்று பல துறைகளில் செயற்கை நுண்ணறிவு செயல்படுகிறது.

பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே செல்லும் போது, செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது என்கிற பார்வையோடு இதனை நிறுத்த முடியாது. செயற்கை நுண்ணறிவுப் புரட்சியானது, உழைப்பு, வருமானம், வாழ்க்கை முறையின் மீது செலுத்தும் தாக்கத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனை உணர்ந்து இந்நூலாசிரியர் இந்நூலை எழுதியுள்ளார்.

அப்படிச் செய்யும் போது செயற்கை நுண்ணறிவு என்பதை உற்பத்தி சக்தியாகப் பார்க்கிறார்.

"செயற்கை நுண்ணறிவு ஒரு குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப முன்னேற்றமாக, இந்தக் கட்டமைப்பிற்குள் ஒரு புதிய மற்றும் ஆற்றல் வாய்ந்த 'உற்பத்தி சக்தி'யாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. உற்பத்தி சக்திகள் என்பவை தொழிலாளர் சக்தி,

தொழில்நுட்ப நிபுணத்துவம், நிறுவன அறிவு, கருவிகள், இயந்திரங்கள், உள்கட்டமைப்பு மற்றும் மூலப்பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது." (பக்கம்-46)

இத்தகைய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் விளைவுகளை அடுத்துக் கூறுகிறார்.

"செயற்கை நுண்ணறிவு ஒரு சக்திவாய்ந்த புதிய உற்பத்தி சக்தியாக முதலாளித்துவத்தின் கீழ் பயன்படுத்தப்படும்போது, அது மூலதனக் குவிப்பை மேம்படுத்துவதற்கும், அதிக உபரி மதிப்பைச் சுரண்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றம், முதலாளித்துவ அமைப்பின் உள்ளார்ந்த முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிறது. வாழும் உழைப்பை (living labour-மார்க்சின் கோட்பாட்டில் மதிப்பின் ஆதாரம்) அகற்றுவதன் மூலம், செயற்கை நுண்ணறிவு இலாப வீதம் குறையும் போக்கைத் தீவிரப்படுத்துகிறது; தொழிலாளர் வர்க்கத்தின் வாங்கும் சக்தியைக் குறைப்பதன் மூலம் அதிக உற்பத்தி நெருக்கடிகளுக்குப் பங்களிக்கிறது. செயற்கை நுண்ணறிவானது முதலாளித்துவத்தின் கீழ் செயல்படுவதுடன் மட்டுமல்லாமல் அதன் உள்ளார்ந்த முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிறது; அதன் நெருக்கடி மற்றும் மாற்றத்திற்கான பாதையைச் சாத்தியமான அளவுக்குத் துரிதப்படுத்துகிறது. எனவே, செயற்கை நுண்ணறிவுப் புரட்சி, மார்க்சியப் பார்வையில், முதலாளித்துவத்தின் சுரண்டல், சமத்துவமின்மை மற்றும் அமைப்பு ரீதியான நிலையற்ற தன்மை ஆகிய உள்ளார்ந்த போக்குகளை அதிவேகப்படுத்துவதாகும்." (பக்கம் – 47-48)

முதலாளித்துவத்தின் உள்முரண்பாட்டையே செயற்கை நுண்ணறிவு என்கிற புதிய உற்பத்தி சக்தி ஏற்படுத்துகிறது என்பதை நூலாசிரியர் சரியாகவே சுட்டிக்காட்டுகிறார். ஆனால் அந்த உள்முரண்பாட்டை நேரடியாக சுட்டிக்காட்டாமல் அதன் வடிவங்களையே எடுத்துச் சொல்கிறார், அதாவது வடிவங்களை முதன்மைப்படுத்துகிறார்.

உற்பத்தி சாதனங்களின் உரிமையாளர்களான முதலாளி வர்க்கத்துக்கும், உழைப்பு சக்தியை விற்பவர்களான பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள அடிப்படையான பகைமையானது, முரண்பட்ட நலன்களால் இயக்கப்படுகிறது. அதாவது செயற்கை நுண்ணறிவானது வர்க்கப் பிரிவினைகளை வலுப்படுத்துகிறது, முதலாளித்துவ வர்க்கத்திடம் செல்வத்தைக் குவிக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் மீதான சுரண்டலின் புதிய வடிவங்களை உருவாக்குகிறது. (பக்கம்-49)

ஓரிடத்தில் செல்வத்தைக் குவிப்பதும் மற்றொரு இடத்தில் சுரண்டலை அதிகரிப்பது மட்டுமே முதலாளித்துவ உற்பத்தி முறையில், வர்க்கப் போராட்டத்துக்குக் காரணமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் அடிமைச் சமூகத்திலும் நிலப்பிரபுத்துவச் சமூகத்திலும் இத்தகைய வர்க்க வேறுபாடு காணப்பட்டது. ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் இந்த முரண்பாடு முற்றிய நிலையில் காணப்படுகிறது. அதனடிப்படையில் வர்க்கப் போராட்டத்தை விளக்குவதே மார்க்சிய வழியில் சரியானதாக இருக்கும்.

பணம் இல்லாதவன் பணம் படைத்தவரைப் பார்த்து, இல்லாமையினால் கோபம் கொண்டு வர்க்கப் போராட்டத்தை நடத்துவதாகக் கருதுவது அடிப்படையைப் பற்றி பேசாமல் வடிவத்தை மட்டும் முன்னிறுத்துவதாக இருக்கிறது. இதன் அடிப்படை பொருளாதாரத்தில் காணப்படுகிறது. இதனை எங்கெல்ஸ் தமது டூரிங்குக்கு மறுப்பு என்கிற நூலில் தெளிவாக விளக்கி இருக்கிறார். அதில் ஒன்று, "சமூகமயமாகிவிட்ட பொருள் உற்பத்திக்கும் முதலாளித்துவ சுவீகரிப்புக்கும் இடையிலான முரண்பாடு, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையாய் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது." (முன்றேற்றப் பதிப்பகம், பக்கம் - 473)

வர்க்கப் போராட்டம் வெறும் கருத்தியல் வழிப்பட்டது அல்ல, அதற்கென்று பொருளாதார அடித்தளம் இருக்கிறது. இத்தகைப் பொருளாதார அடித்தளத்திடமே, முதலாளித்துவம் வீழ்த்தப்படுவதின் தவிர்க்க முடியாமை அடங்கி இருக்கிறது. சமூகமயமாகிவிட்ட பொருள் உற்பத்திக்கும், தனிச்சொத்தின் அடிப்படையிலான முதலாளித்துவ சுவீகரிப்புக்கும் இடையிலான முரண்பாடே பொருளாதார அடிப்படை ஆகும்.

இதனை இந்த நூலாசிரியர் அறிந்திராதவர் அல்ல, ஆனால் அவர் இதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அந்நியமாதல் என்பதற்கே அழுத்தம் கொடுக்கிறார். மனிதத் தன்மையற்ற அந்நியமாதலே வர்க்கப் போராட்டத்தைத் தூண்டுவதாகக் கருதுகிறார்.

"தொழிலாளர்கள் தங்கள் உழைப்பை விற்கவும், முதலாளிகளால் அபகரிக்கப்படும் உபரி மதிப்பை உருவாக்கவும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். புதிய சூழலிலும் இதுவேதான் நடைபெறுகிறது. செயற்கை நுண்ணறிவு உழைப்புச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும், உபரி மதிப்புச் சுரண்டலை அதிகரிப்பதன் மூலமும், 'மறைமுக உழைப்பு' மூலமும், உலகளாவிய தெற்கில் அதீதச் சுரண்டலை (super - exploitation) உருவாக்குவதன் மூலமும் சுரண்டலைத் தீவிரப்படுத்துகிறது.

முதலாளித்துவத்தின் கீழ், தொழிலாளி தனது உழைப்பின் மூலம் உற்பத்தி செய்த பண்டம், தனது உழைப்புச் செயல்முறை, தனது சக மனிதர்கள், தனது சொந்த ஆன்மா ஆகிய அனைத்திடமிருந்தும் அந்நியமாதல் நிகழ்கிறது. முதலாளித்துவ உலகில்

'செயற்கை நுண்ணறிவுப் புரட்சியின்' போதும் இதேதான் நிகழ்கிறது. திறனிழப்பு உழைப்புச் செறிவாக்கம், மனிதச் செயல்பாடுகளை டிஜிட்டல் அடிப்படையில் வணிகமயமாக்கல் ஆகியவை மூலம் அந்நியமாதல் ஆழப்படுத்தப்படுகிறது.

உழைப்பால் உருவாக்கப்பட்ட மதிப்புக்கும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலிக்கும் இடையிலான வேறுபாடு, முதலாளிகளால் இலாபமாக அபகரிக்கப்படுகிறது. செயற்கை நுண்ணறிவானது, உழைப்பு உள்ளீடுகளைக் குறைப்பதன் மூலம் உபரி மதிப்பை அதிகரிக்க முதலாளிகளுக்கு உதவுகிறது. இது அதிக இலாபத்திற்கு வழிவகுக்கிறது.

முதலாளித்துவ அமைப்பின் உள் முரண்பாடுகள் (எ.கா., ஒரு சிலர் வசம் செல்வக் குவிப்பு Vs வெகுஜன வறுமை, அதீத உற்பத்தி VS அதீதச் சுரண்டல்), நெருக்கடிகளுக்கும் அமைப்பு ரீதியான நிலையற்ற தன்மைக்கும் வழிவகுக்கும். செயற்கை நுண்ணறிவு இந்த முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிறது. குறிப்பாக, இலாப வீதம் குறைதல் மற்றும் அதிக உற்பத்தி நெருக்கடி, தொழிலாளர்களின் உழைப்பு இடம்பெயர்க்கப்படுவதன் மூலம் நுகர்வோர் சக்தி குறைதல், இன்ன பிற." (பக்கம்-50)

அதீத உற்பத்தி, அதிக உற்பத்தி என்று நெருக்கடிக்கு மிகை உற்பத்தி காரணம் என்று நூலாசிரியர் இங்கே பேசினாலும் அவரது அடிப்படைக் கண்ணோட்டம் அந்நியமாதலிலேயே இருக்கிறது. மற்ற இடங்களிலும் இதனையே பேசுகிறார்.

“தொழிலாளி தனது உழைப்பு மற்றும் அதன் விளைபொருட்களில் இருந்து அந்நியமாதலை ஆழப்படுத்தவும், முதலாளித்துவ உற்பத்தியின் மனிதத் தன்மையற்ற அம்சங்களை வலுப்படுத்தவும் தீவிரமாகப் பயன்படுத்தப்படுகிறது.” (பக்கம் -55).

“தொழில்நுட்பப் புரட்சிகள் நடுநிலையானவை அல்ல, மாறாக அவை தற்போதுள்ள வர்க்கப் போராட்டத்திற்குள் உட்பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தப் புதிய உற்பத்தி சக்திகளின் கட்டுப்பாடு மற்றும் பலன்கள் தொடர்பான மோதல்களாகவும் வெளிப்படுகின்றன.” (பக்கம் -65).

“மார்க்சியர்கள், செயற்கை நுண்ணறிவின் பலன்கள் ஒரு சிலரின் இலாபத்திற்காக அல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்தின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய, உற்பத்தி சாதனங்களின் மீது ஜனநாயகக் கட்டுப்பாடு தேவை என்று வாதிடுகின்றனர். இது உழைப்புச் சுரண்டலையும் ஏற்றத்தாழ்வையும் தீவிரப்படுத்துவதற்குப் பதிலாக, மனித வாழ்வின் செழிப்பு, உழைப்பிலிருந்து விடுதலை ஆகியவற்றை எளிதாக்கும் ஒரு சமூகத்தை நோக்கிய ஒரு மாற்றத்தை நாடுகிறது. இது 'டிஜிட்டல் உற்பத்தி சாதனங்களை மீட்டெடுப்பதை'யும் உள்ளடக்கியதாகும்.” (பக்கம் -82).

“தொழிலாளர் வர்க்கம் தங்கள் நலன்களைப் பாதுகாக்கவும், தொழில்நுட்பத்தின் பலன்கள் அனைவருக்கும் பகிரப்படுவதை உறுதி செய்யவும் தொடர்ந்து போராடி வருகிறது. மார்க்சியக் கோட்பாடு, இந்தப் புதிய சவால்களை எதிர்கொள்வதற்கும், தற்கால மூலதனத்தின் சிக்கலான இயக்கவியலைப் புரிந்து கொள்வதற்கும், ஒரு நியாயமான, சமத்துவமான எதிர்காலத்திற்கான போராட்டத்திற்கு வழிகாட்டுவதற்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக விளங்குகிறது” (பக்கம் -83).

இந்த அந்நியமாதல் என்பது மார்க்சின் தொடக்கக் கால கோட்பாடு என்பதை குறிப்பிட்டு இந்நூலாசிரியர் கூறியுள்ளார். (பக்கம் -305). அதாவது தமது பொருளாதார ஆய்வுகளை முடிப்பதற்கு முன்பு மார்க்ஸ் கொண்டிருந்த கோட்பாடு.

மனிதத் தன்மையற்ற போக்காக அந்நியமாதலை முதன்மைப்படுத்துவதால் இந்நூலாசிரியர் இதற்கானத் தீர்வைப் பொருளாதார அடிப்படையில் தேடாமல், அறநெறியின் அடிப்படையில் வைக்கிறார். அதாவது நியாயம், அநியாயம் என்கிற வழியில் வர்க்கப் போராட்டத்தை முன்வைக்கிறார்.

“மார்க்சிய அணுகுமுறையின்படி, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகவும் ஒரு நியாயமான சமூகத்திற்காகவும் போராடுவதன் முக்கியத்துவத்தை இது வலியுறுத்தும். கூட்டு நடவடிக்கையின் மூலம் அதிகாரமற்ற தன்மையையும் அந்நியமாதல் உணர்வுகளையும் எதிர்த்துப் போராடலாம்” (பக்கம்-257).

நூலாசிரியர் இந்த அந்நியமாதலை வர்க்கப் போராட்டத்துக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளதை இதன் மூலம் அறிய முடிகிறது.

முதலாளி-தொழிலாளி என்கிற வர்க்கப் போராட்டத்துக்குத் தீர்வை அறநெறியில் காண முடியாது. இது பொருளாதாரப் பிரச்சினை. இதனை பொருளாதார வழியில்தான் தீர்க்க முடியும். நூலாசிரியர் அந்நியமாதல் என்கிற இளம் மார்க்சின் சிந்தனையுடன், எங்கெல்சின் இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்கிற நூலில் காணப்படும் கருத்தோடும் நின்றுவிடுகிறார்.

இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்கிற நூலில் 1790 முதல் 1840 வரையிலான தொழில்துறைப் புரட்சியின் போது ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி, தொழிலாளர் வர்க்கத்தின் உண்மையான ஊதியங்களை அதிகரிக்கச் செய்யாத ஒரு காலக்கட்டத்தை இடை நிறுத்தம் (Engel’s Pause) என்கிறதை அடிப்படையாக விளக்குகிறார். இந்த இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்கிற நூலின் மறுபதிப்பை 1892ஆம் ஆண்டில் வெளியிடும் போது, அதில் எழுதிய முன்னுரையில், இருபத்தி நான்கு வயதுடைய இளைஞரின் சிறப்பானத் தன்மையும் குறைகளையும் இந்த நூல் கொண்டுள்ளதாக எங்கெல்ஸ் கூறியுள்ளார்.

நூலாசிரியர் எங்கெல்சின் இளமைக் கால நூலுக்குப் பதிலாக, பிற்காலத்தில் எழுதிய டூரிங்குக்கு

மறுப்பு என்கிற நூலில் காணப்படும் பொருளாதார அடிப்படையில் விளக்கி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். எங்கெல்சின் டூரிங்குக்கு மறுப்பு என்கிற நூல் மார்க்சின் மூலதனம் (தொகுதி-1) நூலின் அடிப்படையில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த விளக்கங்கள் இந்நூலாசிரியருக்குத் தெரியாமல் இருந்திருக்காது. மார்க்சின் அரசியல் பொருளாதார குறிப்புகளான கிரண்டிஸ்ஸே என்பதில் உள்ளதை சரியாகவே எடுத்துக் காட்டியுள்ளார். இதுதான் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படை முரண்பாடு.

"மார்க்சின் தொலைநோக்குப் பார்வையில், முதலாளித்துவம் உள்ளார்ந்த முரண்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதை கிரண்ட்ரிஸ்ஸே வெளிப்படுத்துகிறது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள மோதல்கள், காலப்போக்கில் பொருளாதார நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் என்பதை அவர் இதில் உணர்த்துகிறார். உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும், உடைமையின் தனியார் தன்மைக்கும் இடையே உள்ள இந்த முரண்பாடு, முதலாளித்துவத்தின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்று அவர் வாதிடுகிறார்." (பக்கம் -334)

இதன் அடிப்படையில்தான் செயற்கை நுண்ணறிவு என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். அந்நியமாதல், இடை நிறுத்தம் என்பது போன்றவற்றில் தீர்வைத் தேடாமல் பொருளாதார அடிப்படையில் அணுகுவதே சரியானதாக இருக்கும். சோஷலிசப் புரட்சி தவிர்க்க முடியாமை என்பதை பொருளாதார அடிப்படையில்தான் மார்க்சியம் விளக்குகிறது.

செயற்கை நுண்ணறிவும் உழைப்பின் எதிர்காலமும் என்கிற நூலில் ஆசிரியர், செயற்கை நுண்ணறிவை முதலாளித்துவம் ஏன் உருவாக்கியது, எதற்கு பயன்படுத்துகிறது என்பது பற்றியதில் மிகச் சரியான விளக்கங்களைக் கொடுத்துள்ளார். இதற்கான தீர்வை மட்டுமே பொருளாதார அடிப்படையில் இல்லாது அந்நியமாதல் என்பதை முன்வைத்து அறநெறியின் அடிப்படையில் வைத்துள்ளார். தீர்ப்பைத் தவிர மற்றதை நூலாசிரியர் மிகவும் சிறப்பாக விளக்கி எழுதியுள்ளார். குறிப்பாக நூலின், செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியங்கி மய யுகத்தில் மார்க்ஸின் உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின் நீடித்து நிலைத்திருக்கும் பொருத்தப்பாடு என்கிற 12ஆம் அத்தியாயத்தில் நூலாசிரியர் மிகமிக சிறப்பாக விளக்கி இருக்கிறார்.

நூலாசிரியர் முதலாளித்துவம், செயற்கை நுண்ணறிவு போன்ற அதி நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதன் நோக்கத்தை சுட்டிக்காட்டுகிறார்.

"செயற்கை நுண்ணறிவு, மூலதனத்தின் ஒரு கருவியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று மார்க்சியப் பகுப்பாய்வு தெளிவு படுத்துகிறது. அதன்படி, இலாபத்தை அதிகப்படுத்தவும் சுரண்டலைத் தீவிரப்படுத்தவுமே செயற்கை நுண்ணறிவு வடிவமைக்கப்பட்டுள்ளது." (பக்கம்-226)

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைப்பதற்கும், ஒப்பீட்டு உபரி மதிப்பை பெறுவதற்குமே ஆகும் என்பதை நூலாசிரியர் சரியாகச் சுட்டிக்காட்டுகிறார்.

"மார்க்சியக் கண்ணோட்டத்தில், செயற்கை நுண்ணறிவும் தானியங்கி மயமாக்கலும் சுதந்திரமாகத் தாமே மதிப்பை உருவாக்குபவை அல்ல. 'இறந்த உழைப்பை' - இயந்திரங்கள் மற்றும் மென்பொருளில் உள்ள கடந்தகால மனித உழைப்பை – அவற்றால் புதிய பொருட்களுக்கு மாற்ற முடியும்; அதன் மூலம் உயிருள்ள உழைப்பின் உற்பத்தித்திறனைக் கணிசமாக அதிகரிக்க முடியும். ஒரு முதலாளித்துவ அமைப்பிற்குள் செயற்கை நுண்ணறிவின் முதன்மை நோக்கம், சமூக ரீதியாக அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைப்பதன் மூலம் உபரி மதிப்பைப் பிரித்தெடுப்பதை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் சார்பு உபரி மதிப்பு அதிகரிக்கப்படுகிறது. இது முதலாளிகள் குறைந்த அளவிலான நேரடி உயிருள்ள உழைப்பைக் கொண்டு அதிகமாக உற்பத்தி செய்ய அனுமதிக்கிறது; ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் சுரண்டப்படும் மதிப்பின் விகிதத்தைத் தீவிரப்படுத்துகிறது." (பக்கம்-223)

செயற்கை நுண்ணறிவு போன்ற புதியவை, உபரி மதிப்பைப் படைப்பதை தடுக்கவில்லை என்பதையும் அதன் பொருத்தப்பாடு இதிலும் இருக்கிறது என்கிறார் நூலாசிரியர்.

"ஒரு கறாரான மார்க்சியப் பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு யுகத்திலும் உழைப்பு மதிப்புக் கோட்பாடு ஆழமான பொருத்தத்தைக் கொண்டுள்ளது. உலகப் பொருளாதாரம் மற்றும் வேலையின் தன்மையில் நடந்து வரும் மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்கு ஒரு வலுவான கட்டமைப்பை வழங்குகிறது என்பதை நிரூபிக்கிறது." (பக்கம்-222)

சோஷலிச மாற்றத்துக்கான பொருளாதார முரணை சுட்டிக்காட்டாமல் உழைப்பின் நிச்சயமற்ற தன்மை, அதீத செல்வக் குவிப்பு ஆகியவைகளையே சமூகப் போராட்டத்துக்கான அடிப்படையாக நூலாசிரியர் காட்டுகிறார். இது வடிவமே ஆகும். இதன் உள்ளடக்கம் பொருளாதாரத்தில் இருக்கிறது.

"செயற்கை நுண்ணறிவு யுகம், மார்க்சிய அரசியல் பொருளாதாரத்துடன் ஆழமான ஈடுபாட்டை அவசியமாக்குகிறது. வேலையின் தொடர்ச்சியான மாற்றம், உழைப்பின் நிச்சயமற்ற தன்மை அதிகரித்தல், அதீத செல்வக் குவிப்பு ஆகியவை சமகால வர்க்க உறவுகள், தொழில்நுட்பத்தின் மீதான கட்டுப்பாடு, உற்பத்திமுறை ஆகியவற்றின்மீதான எதிர்கால சமூகப்போராட்டங்களுக்கான மார்க்ஸின் நுண்ணறிவின் நீடித்த பொருத்தப்பாட்டை அடிக்கோடிட்டுக்

காட்டுகின்றன. விவாதம் உழைப்பின் மறைவு பற்றியது அல்ல, மாறாக அதன் மாறிவரும் தன்மையையும், ஒரு வளர்ந்து வரும் முதலாளித்துவ அமைப்பிற்குள் அதன் சுரண்டல் நிலைமைகளையும் பற்றியதாகும்." *(பக்கம்-227)*

நூலாசிரியர் அந்நியமாதலை தொட்டுவிட்டு பொருளாதார அடித்தளத்துக்கு முதன்மை இடம் கொடுத்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். அதே போல எங்கெல்சின் இங்கிலாந்து தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை தொடர்ந்து டூரிங்குக்கு மறுப்பு என்கிற நூலினை எடுத்து விளக்கி இருந்தால் முழுநிறைவு பெற்றிருக்கும்.

நவீன இயந்திரங்கள் முதலாளித்துவத்தில் முடிவின்றி அதிகரித்து வருவதன் கட்டாய விதியினால் உற்பத்தியில் அராஜகம் அதாவது அதீத உற்பத்தி ஏற்படுவதை, எங்கெல்ஸ் டூரிங்குக்கு மறுப்பு என்கிற நூலில் சுட்டிக்காட்டுகிறார். நவீன இயந்திரம் என்பதை இன்றைய நிலையில் செயற்கை நுண்ணறிவு என்பதாகப் பொருள் கொண்டால் புரிதல் எளிதாகும்.

"நவீன இயந்திர சாதனங்களின் முடிவின்றி அதிகரித்து வரும் செம்மைத்திறன், சமுதாயப் பொருளுற்பத்தியின் அராஜகத்தால் தனிப்பட்ட தொழில்துறை முதலாளி ஓயாமல் தனது இயந்திர சாதனங்களை மேம்படுத்துமாறும், ஓயாமல் அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்குமாறும் வலுவந்தம் செய்யும் கட்டாய விதியாக மாற்றப்படுகிறது ..." *(டூரிங்குக்கு மறுப்பு, பக்-480)*

நவீன இயந்திரங்களைப் புகுத்துவதன் மூலம் சந்தையின் தேவையைவிட உற்பத்தியில் அதிகம் ஏற்பட்டு பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை எங்கெல்ஸ் சுட்டிக்காட்டுகிறார்.

"உண்மை நடப்பைக் கூறுமிடத்து, முதலாவது பொது நெருக்கடி வெடித்த 1825ஆம் ஆண்டு முதலாய், பத்து ஆண்டுகளுக்கு ஒரு தரம் தொழில் மற்றும் வாணிப உலகு முழுவதிலும் எல்லா நாகரிக மக்களிடையிலும் அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சி குன்றிய நிலையில் இவர்களைச் சார்ந்து வாழ்வோரிடையிலும் பொருளுற்பத்தியும் பரிவர்த்தனையும் நிலைகுலைந்து விடுகின்றன. வாணிபம் தடைபட்டு நின்று போகிறது; சந்தைகள் விற்பனை இன்றி நிரம்பி வழிகின்றன; எந்தளவு விலை போகவில்லையோ அந்தளவு பண்டங்கள் எண்ணிறந்தவையாய்க் குவிந்து கிடக்கின்றன; ரொக்கப் பணம் மறைந்து விடுகிறது; கடன் செலாவணி இல்லாமற் போய் விடுகிறது; ஆலைகள் மூடிக் கிடக்கின்றன; பெருந்திரளான தொழிலாளர்கள் பிழைப்புக்கு வேண்டிய சாதனங்கள் இல்லாது தவிக்கிறார்கள், காரணம் இந்த சாதனங்களை அவர்கள் மிதமிஞ்சி உற்பத்தி செய்துவிட்டார்கள்; முறிவுகளுக்கும் ஜப்திகளுக்கும் முடிவில்லாமற் போகிறது. பல ஆண்டுகளுக்கு மந்தம் நீடிக்கிறது; உற்பத்தி சக்திகளும் பொருள்களும் பெருவித அளவில் விரயமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன; பிறகு, திரண்டு அம்பாரமாய்க் குவிந்து விட்ட பண்டங்கள் அதிகமாகவோ குறைவாகவோ மதிப்புத் தேய்ந்து கரைந்து இறுதியாய் மறையும் வரை, பொருளுற்பத்தியும் பரிவர்த்தனையும் மெதுவாக மீண்டும் இயங்கத் தொடங்கும் வரை நிலைமை இதுவே. சிறிதுசிறிதாக வேகம் அதிகரிக்கிறது. இது பெருநடையாகிறது. தொழில்துறையின் பெருநடை ஓட்டமாய் மாறுகிறது; ஓட்டம் பெருகி, தொழில்துறை, வாணிபக் கடன் செலாவணி, ஊக வாணிபம் ஆகிய எல்லாமாய்ச் சேர்ந்து தாவிக்குதித்துத் தலைதெறிக்க ஓடி முடிவில் குப்புற விழும்படி துள்ளிப் பாய்ந்தோடிய பின் தொடங்கிய நிலைக்கே—நெருக்கடியின் சாய்க் குழியில் வந்து முடிவுறுகின்றன. தொடர்ந்து திரும்பத் திரும்ப இதே கதைதான். 1825ஆம் ஆண்டு முதலாய் ஐந்து தடவை இதை அனுபவத்திருக்கிறோம். தற்போது (1877) ஆறாவது தடவையாய் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்." *(டூரிங்குக்கு மறுப்பு,பக்-481-482)*

இந்தப் பொருளாதார நெருக்கடி சமூகமயமான சரக்கு உற்பத்திக்கும் தனிச்சொத்தின் அடிப்படையிலான முதலாளித்துவ சுவீகரிப்புக்கும் இடையே வர்க்கப் போராட்டமாய் வெடிக்கிறது என்கிறார் எங்கெல்ஸ்.

"இந்த நெருக்கடிகளில் சமூகயமயமான பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவ சுவீகரிப்புக்கும் இடையிலுள்ள முரண்பாடு மூர்க்கமாய் வெடித்தெழுகிறது. பரிவர்த்தனைப் பண்டப் புழக்கம் தற்காலிகமாய் நின்று விடுகிறது. புழக்கத்துக்குரிய சாதனமான பணம் புழக்கத்துக்கு இடையூறாகி விடுகிறது. பண்டங்களின் உற்பத்தி மற்றும் புழக்கம் சம்பந்தமான விதிகள் எல்லாம் தலைகீழாகி விடுகின்றன. பொருளாதார மோதல் அதன் உச்ச நிலையை அடைந்து விட்டது. பொருளுற்பத்தி முறை பரிவர்த்தனை முறையினை எதிர்த்துக் கலகம் புரிகிறது. பொருளுற்பத்தி சக்திகள் எதை மீறி வளர்ந்து விட்டனவோ அந்தப் பொருளுற்பத்தி முறைக்கு எதிராகக் கலகம் செய்கின்றன." *(டூரிங்குக்கு மறுப்பு, பக்-482-483)*

புதுப்புது இயந்திரங்களைப் புகுத்துவதன் மூலம் முதலாளித்துவம் தோற்றுவித்த உற்பத்தி சக்திகளை கட்டுப்படுத்த முடியாத வகையில் முதலாளித்துவத்தை நெருக்குகிறது என்பதை எங்கெல்ஸ் கூறுகிறார்.

"முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையின் பொறியமைவு முழுதுமே அதனாலேயே தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி சக்திகளால் நெரிக்கப்பட்டுக் குலைந்து போகிறது. பெருவாரியான இந்தப் பொருளுற்பத்தி சாதனங்களை அதனால் மூலதனமாக மாற்ற முடியவில்லை. இவை செயலற்று முடங்கிக் கிடக்கின்றன." *(டூரிங்குக்கு எதிர்ப்பு, பக்-483)*

முதலாளித்துவத்தில் காணப்படும் வளர்ச்சி அடைந்த உற்பத்தி சக்திகளை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கு முடியாமல், முதலாளித்துவம் திறனற்றுப் போனதை எடுத்துக்காட்டுவதுடன், வளர்ச்சி

அடைந்துள்ள உற்பத்தி சக்திகள் முதலாளித்துவ தனிச் சொத்துடைமை, எதிர்த்துக் கலகம் செய்வதையும் எங்கெல்ஸ் சுட்டிக்காட்டுகிறார்.

"..ஒரு புறத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை தொடர்ந்து இந்த உற்பத்தி சக்திகளை நெறியாண்மை புரியத் திறனற்றது என்பது நிரூபிக்கப்பட்டு தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. மறுபுறத்தில் இந்த உற்பத்தி சக்திகள் தற்போது நிலவும் முரண்பாட்டை நீக்குவதற்காக, மூலதனம் என்ற முறையில் தமக்குள்ள இயல்பை ஒழிப்பதற்காக, சமுதாயப் பொருளுற்பத்தி சக்திகள் என்ற முறையில் தமக்குள்ள தன்மை நடைமுறையில் அங்கீகரிக்கப்படுவதற்காக மேலும் மேலும் கூடுதலான ஆற்றலுடன் போராடி முன்னேறிச் செல்கின்றன.

உற்பத்தி சக்திகள் மேலும் மேலும் வலிமை மிக்கனவாய் வளர்ந்து, தமது முதலாளித்துவ இயல்பை எதிர்த்துப் புரியும் இந்தக் கலகம், அவற்றின் சமுதாயத் தன்மை அங்கீகரிக்கப்படுவதன் அவசியம் ஆகியவை முதலாளித்துவ நிலைமைகளில் எந்தளவுக்கு சாத்தியமோ அந்தளவுக்கு அவற்றை மேலும்மேலும் சமுதாயப் பொருளுற்பத்தி சக்திகளாய் நடத்தும்படி முதலாளி வர்க்கத்தைக் கட்டாயப் படுத்துகின்றன." (டூரிங்குக்கு மறுப்பு, பக்-483-484)

வளர்ச்சி அடைந்த உற்பத்தி சக்திகளும் பழைமைப்பட்டுப் போன முதலாளித்துவ உற்பத்தி முறைக்கும் இடையேயான முரண்பாடு சோஷலிச உற்பத்தியிடம் சரணடைய வேண்டியதாகிறது என்கிறார் எங்கெல்ஸ்.

"முதலாளித்துவச் சமுதாயத்தின் உறுதியான திட்டம் ஏதும் இல்லாத பொருளுற்பத்தியானது வரப்போகும் சோஷலிசச் சமுதாயத்தின் உறுதிவாய்ந்த திட்டவழியிலான பொருளுற்பத்தியிடம் சரணடைகிறது." (டூரிங்குக்கு மறுப்பு, பக்-485)

ஒப்பீட்டு உபரி மதிப்பு கிடைக்க வேண்டும் என்று நினைத்து முதலாளித்துவம் புதியபுதிய இயந்திரங்களைப் புகுத்துகிறது. இறுதியில் வளர்ச்சி அடைந்த உற்பத்தி சக்திகளை முதலாளித்துவத்தால் நெறியாண்மை செய்ய முடியாமல் நெருக்கடிக்கு உள்ளாகிறது. மேலும் முதலாளித்துவ உற்பத்தி முறை கூட்டுப் பங்கு கம்பெனிகளாக வளர்ச்சி அடைந்த பிறகு தனித்த முதலாளித்துவ வர்க்கம் தேவையற்றவர்களாகி விட்டனர் என்கிற கருத்தை எங்கெல்ஸ் முன்வைக்கிறார். இன்றைய கார்ப்பரேட் முதலாளித்துவத்தில் இது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. முதலாளியின் நேரடி கண்காணிப்பு இல்லாமலேயே பல கம்பெனிகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"நவீன உற்பத்தி சக்திகளைத் தொடர்ந்து நிர்வகிப்பதற்கு முதலாளித்துவம் ஆற்றலற்று விட்டது என்பதை நெருக்கடிகள் எடுத்துக் காட்டுகின்றன என்றால் பொருளுற்பத்திக்கும் வினியோகத்துக்குமான மாபெரும் நிலையங்கள் கூட்டுப் பங்குக் கம்பெனிகளாகவும் [டிரஸ்டுகளாகவும்] அரசு உடைமைகளாகவும் மாற்றப்பட்டிருப்பதானது இந்தக் காரியத்துக்கு முதலாளித்துவ வர்க்கத்தினர் எவ்வளவு தேவையற்றவர்களாகி விட்டனர் என்பதைக் காட்டுகிறது. முதலாளிகள் செய்துவந்த எல்லாச் சமூக வேலைகளையும் இன்று சம்பளம் பெறும் சிப்பந்திகள் செய்து விடுகின்றனர். லாப ஈவுகளை (dividents] மூட்டை கட்டிக் கொள்வதையும், சீட்டுக் கத்தரிப்பதையும் [tearing off coupons], முதலாளிகள் ஒருவர் முதலை ஒருவர் சூறையாடிக் கொள்ளும் பங்கு மாற்றுச் சந்தையில் சூதாடுவதையும் தவிர முதலாளிக்கு இனிச் சமூக வேலை எதுவும் இல்லாமற் போய் விட்டது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முதலில் தொழிலாளர்களை வெளியே தள்ளுகிறது. இப்பொழுது அது முதலாளிகளையும் வெளியே தள்ளி, தொழிலாளர்களைச் செய்தது போலவே இவர்களையும் உடனடியாகத் தொழில் துறை ரிசர்வ் பட்டாளத்தின் அணிகளுக்கு இல்லாவிட்டாலும், வேண்டாத உபரி மக்கள் தொகையின் அணிகளுக்குத் தாழ்த்தி விடுகிறது." (டூரிங்குக்கு மறுப்பு, பக்-487)

வளர்ச்சி அடைந்துள்ள உற்பத்தி சக்திகளை நெறியாண்மை செய்ய முடியாமல் போன முரண்பாட்டினால் ஏற்பட்ட நெருக்கடி, சோஷலிசப் புரட்சிக்கு வழிவகுக்கிறது. புரட்சியை நிகழ்த்திய பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொள்கிறது என்கிறார் எங்கெல்ஸ்.

"ஏற்கெனவே சமூகமயமாகி விட்ட பிரம்மாண்டமான பொருளுற்பத்தி சாதனங்களை மேலும் மேலும் அரசின் சொத்தாக மாற்றமடையும்படி நிர்ப்பந்தம் செய்யும் அதே போதில் இந்தப் பெருமாற்றத்தினைச் செய்து முடிப்பதற்கான வழியையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தானே சுட்டிக்காட்டுகிறது. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு உற்பத்தி சாதனங்களை முதலாவதாக அரசுச் சொத்தாய் மாற்றுகிறது." (டூரிங்குக்கு மறுப்பு, பக்-490-491)

பாட்டாளி வர்க்கப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்து தனிச்சொத்துக்கள் பொதுச்சொத்தாக்கப்படுகிறது, அதன் பிறகு, வினியோகத்திற்கு ஏற்ப திட்டமிட்டு உற்பத்தி நிகழ்த்தப்படுகிறது. இறுதியாக எங்கெல்ஸ் முதலாளித்துவப் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப, பாட்டாளி வர்க்கம் செயல்படுவதற்கான விஞ்ஞான சோஷலிசத்தின் கடமையாக சுட்டிக்காட்டுகிறார்.

"பாட்டாளி வர்க்கப் புரட்சி- முரண்பாடுகளுக்குத் தீர்வு ஏற்படுகின்றது. பாட்டாளி வர்க்கம் பொது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்கிறது. முதலாளி வர்க்கத்தின் கைகளில் இருந்து நழுவிக் கொண்டிருக்கும் சமூகமயமான உற்பத்தி சாதனங்களை இவ்விதம் அது பொதுச்சொத்தாய் மாற்றுகின்றது. இந்தச் செயலின் மூலம் பாட்டாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களை அவை இதுகாறும் தாங்கி இருந்த மூலதன இயல்பிலிருந்து விடுவித்து, அவற்றின்

சமூக இயல்பு செயல்படுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கின்றது. சமூகமயமான பொருளுற்பத்தி இனி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவது சாத்தியமாகிறது.

உலகளாவிய இந்த விடுதலைப் பணியினைச் செய்து முடிப்பது நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையாகும். இந்தச் செயலுக்கான வரலாற்று நிலைமைகளையும் அதோடு கூடவே இதன் தன்மையையும் தீர்க்கமாய்ப் புரிந்து கொண்டு, தற்போது ஒடுக்கப்பட்டதாய் இருக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்த நிலைமைகளையும் அது செய்து முடிக்க வேண்டிய சகாப்தகரச் சிறப்புடைத்த இந்தப் பணியின் முக்கியத்துவத்தையும் முழு அளவில் தெரியப் படுத்துவது தான் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவார்த்த வெளியீடாகிய விஞ்ஞான சோஷலிசத்தின் கடமை.'' (டூரிங்குக்கு மறுப்பு, பக்-500-501)

அதாவது முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையின் விளைவாகத்தான் தவிர்க்க முடியாத வகையில் சோஷலிசப் புரட்சி ஏற்படுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் துயரங்களுக்குத் தீர்வாக பாட்டாளிகள் தமது மூளையின் உதவியால் சிந்தித்து எடுத்த முடிவல்ல இது. பாட்டாளி வர்க்கத்தின் தன்மையும் பொறுப்பையும் முதலாளித்துவ பொருளாதார முரணில் இருந்தே பாட்டாளி வர்க்கம் கற்றுக் கொள்கிறது. முதலாளித்துவ பொருளுற்பத்தியில் காணப்படும் உள்முரண்பாட்டின் வெளிப்பாடுதான் வர்க்கப் போராட்டம்.

பாட்டாளி வர்க்கத்தின் விஞ்ஞானத் தன்மையிலான முடிவுகளை இளம் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோர்களிடம் இருந்து இல்லாமல் முதிர்ந்த மார்க்ஸ், எங்கெல்சிடமே காணமுடிகிறது. முதிய மார்க்சிடமே மார்க்சியம் முழு வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த மார்க்சியத்தை லெனின் சுருக்கமாகவும் எளிமையாகவும் எழுதியுள்ளார். குறிப்பாக, காரல் மார்க்ஸ் (மார்க்சியத்தைப் பற்றிய விரிவுரையுடன் அமைந்த வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்) என்கிற கலைக்களஞ்சியத்துக்கு லெனின் எழுதியது மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கிறது

"... உபரி மதிப்பு உற்பத்திச் சாதனங்களுக்கு ஒரு பங்காகவும், மாறும் மூலதனத்துக்கு மற்றொரு பங்காகவும் பிரிக்கப்படுகிறது. (மூலதனத்தின் மொத்தத் தொகையில்) மாறும் மூலதனத்தின் பங்கைவிட மாறா மூலதனத்தின் பங்கு அதிக வேகத்துடன் வளர்ச்சி பெறுவது முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கிலும், முதலாளித்துவம் சோஷலிசமாக மாறுவதற்கான இயக்கப் போக்கிலும் மகத்தான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்."

மாறா மூலதனத்தின் அதிக வேகத்துடன் வளர்ச்சியினையே செயற்கை நுண்ணறிவு காட்டுகிறது. இது முதலாளித்துவ வளர்ச்சியினை மட்டும் காட்டவில்லை, இதன் வளர்ச்சி முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசமாக மாறுவதற்கான இயக்கப் போக்கையும் காட்டுகிறது, இதுவே இதன் முக்கியத்துவமாகும் என்பதை லெனின் வழியில் அறிந்து கொள்ளலாம். லெனின் மேலும் கூறுகிறார்.

"......இன்றைய சமுதாயத்தின் பொருளாதார இயக்க விதியிலிருந்தே மார்க்ஸ், முதலாளித்துவச் சமுதாயம் சோஷலிஸ்டு சமுதாயமாக மாற்றமடைவது தவிர்க்க முடியாததாகும் என்ற முடிவுக்கு வருகிறார். உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது பல்லாயிரக் கணக்கான வடிவங்களிலே முன்னைவிட அதிக வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது; மேலும் மார்க்ஸ் மறைந்த பின் கழிந்துள்ள இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் பெருவீத உற்பத்தியின் வளர்ச்சியிலும், முதலாளிகளின் கார்டெல்கள், சிண்டிகேட்டுகள், டிரஸ்டுகளின் வளர்ச்சியிலும், நிதி மூலதனத்தின் அளவுகளிலும் சக்தியிலும் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான அதிகரிப்பிலும் இது-அதாவது, உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது - வெகு தெளிவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது, தவிர்க்க முடியாதபடி சோஷலிசம் வந்து சேருவதற்கு இதுதான் முதன்மையான பொருளாயத அடிப்படையாகும்."

செயற்கை நுண்ணறிவு என்பது மாறும் மூலதனத்தின் வளர்ச்சியாகவும் உழைப்பு சமூகமயமாதலையும் எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. இதன் வளர்ச்சி என்பது முதலாளித்துவ வளர்ச்சியாக மட்டும் பார்க்காமல், இந்த வளர்ச்சி ஏற்படுத்தும் முரணையும் அதற்குத் தீர்வாக முதலாளித்துவ உற்பத்தி முறையில் இருந்து சோஷலிச உற்பத்தி முறைக்கு மாற வேண்டியதின் அவசியத்தையுமே இந்தப் பொருளாதார அடிப்படை நமக்குக் காட்டுகிறது.


முதலாளித்துவ வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கம் ஆகியவற்றுக்கிடையே காணப்படும் வர்க்கப் போராட்டத்தை பொருளாதார அடிப்படையில் புரிந்து கொண்டால்தான், பாட்டாளி வர்க்கத்தை அதனடிப்படையில் வர்க்க உணர்வையும் வர்க்க அரசியலையும் ஊட்ட முடியும். அவ்வாறு வளர்க்கப்பட்ட பாட்டாளிகளே வர்க்கப் போராட்டத்தை நடத்தும் திறத்தைப் பெறுவர். முதலாளித்துவத்தை வீழ்த்தி சோஷலிசத்தை அமைப்பதற்கு இத்தகையத் திறம் தேவைப்படுகிறது.

எஸ்.பாலசந்திரன் எழுதிய 'செயற்கை நுண்ணறிவும் உழைப்பின் எதிர்காலமும்' என்கிற நூலை, அவர் குறிப்பிடுகிற அந்நியமாதல் என்பதின் தொடர்ச்சியாக பொருளாதார அடித்தளத்தையும் இணைத்துப் படிக்கும் போது நமது புரிதல் முழுநிறைவு அடைகிறது. இந்தப் புரிதலுக்கு இடமும் வாய்ப்பும் அளித்த இந்த நூலைப் படித்துப் பயனடைவோம்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

# நாவல் இலக்கிய ஆய்வில் விலகி வாசித்தலும் அமைப்புக்கோட்பாடும்






முனைவர் பா.ஆனந்தகுமார்

இலக்கிய ஆராய்ச்சிக்கான அணுகுமுறைகள் தொடக்கத்தில் இலக்கியத்திற்குள்ளிருந்தே பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. ஆயின், இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலக்கியத்தை ஆராய்வதற்குச் சமூகவியல், தொல்லியல், மொழியியல், வரலாற்றியல் எனப் பல்துறைகளை இணைத்து ஆராயும் முயற்சிகள் தொடங்கிவிட்டன. எண்பதுகளுக்குப் பிறகு, இலக்கியத்திற்கான தனி அணுகுமுறைகள் என்ற நிலைமை மாறி இலக்கியம், கலை, பண்பாடு, அரசியல் ஆகிய எல்லாத்துறைகளையும் ஆராய்வதற்குரிய பொதுவான திறனாய்வுக் கோட்பாடுகள்(Critical Theories) உருவாகின. அவ்வகையில் அமைப்பியல், பின் அமைப்பியல், பின்னை நவீனத்துவம், பின்னைக் காலனியம், பண்பாட்டு ஆய்வுகள், புதிய வரலாற்றியம் என்பன மனித அறிவுத்துறைகள் பலவற்றையும் அணுகி ஆராய்வதற்கான கோட்பாடுகளாக விளங்குகின்றன.

தொண்ணூறுகளுக்குப் பிறகு இலக்கிய ஆய்வு குறிப்பாக ஒப்பிலக்கிய ஆய்வு என்பது அதன் இலக்கிய எல்லைகளைக் கடந்து மார்க்சியம், அமைப்பியல், பெண்ணியம், பக்தீனின் உரையாடலியம் முதலான பிற துறை ஆய்வு அணுகுமுறைகளை இணைத்து ஆராய்வதாக வளர்ச்சி பெற்றுள்ளது. சூசன் பாசுனெட், காயத்ரி சக்கரவர்த்தி ஸ்பிவாக், செர்பிய ஒப்பிலக்கிய ஆய்வாளர் ஏத்ரீயானா மார்ஸெடக் ஆகியோர் புதிய ஒப்பிலக்கிய ஆய்விற்கான அடிப்படையாக பல்துறை ஆராய்ச்சி அணுகுமுறையை முன்மொழிந்துள்ளனர்.பல்துறை சார்ந்த புதிய ஒப்பிலக்கிய ஆய்வில் இத்தாலிய ஆய்வாளரான ஃபிராங்கோ மொரெட்டியின் விலகி வாசித்தலும் அமைப்புக்கோட்பாடும் (Distant Reading and System Theory) அண்மைக்காலத்தில் கவனம் பெறுகின்ற ஒன்றாக விளங்குகிறது. இக்கோட்பாட்டினை விளக்கி அதனைத் தமிழ் நாவல் வளர்ச்சியோடு பொருத்திக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைகிறது.

## ஃபிராங்கோ மொரெட்டியின் ஆய்வுகள்

ஃபிராங்கோ மொரெட்டி(Franco Moretti: B. 1950) இத்தாலி நாட்டைச் சேர்ந்த இலக்கிய வரலாற்றாய்வாளர்; இலக்கியக் கோட்பாட்டாளர். ரோம் பல்கலைக்கழகத்தில் நவீன இலக்கியங்களில் பட்டம் பெற்ற மொரெட்டி அமெரிக்காவில் உள்ள கொலம்பியா, ஸ்டான்போர்டு பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் மற்றும் ஒப்பிலக்கியம் கற்பித்தார். பல்வேறு ஐரோப்பிய அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றிய மொரெட்டி அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் நாவல் ஆய்வு மையத்தை(2010) உருவாக்கியவர். மொரெட்டி இருநூறு ஆண்டுகால உலக நாவல் இலக்கிய வளர்ச்சியை விரிவான ஆய்வுக்குட்படுத்தியுள்ளார். ஐரோப்பிய நாவல்களின் நிலப்படத்தொகுப்பு (Atlas of the European Novels:1800-1900: 1998), வரைபடங்கள், நிலப்படங்கள், மரங்கள் – இலக்கிய வரலாற்றின் சுருக்க மாதிரிகள் (Graphs, Maps, Trees – Abstract Models of Literary History:2005) இவ்விரண்டும் இவரது முக்கிய ஆய்வு நூல்களாகும். மட்டுமல்லாது இவரது விலகிவாசித்தல் கோட்பாட்டினை விளக்கும் உலக இலக்கியத்தின் மீதான யூகங்கள் (Conjectures on World Literature) என்னும் கட்டுரையும் இவரது ஆய்வுப்பங்களிப்பில் முதன்மையானது.

## விலகி வாசித்தல்

மொரெட்டி அமெரிக்கப் புதுத்திறனாய்வும் கட்டவிழ்ப்புக் கோட்பாடும் முன்மொழிந்த நெருங்கி வாசித்தல் (Close Reading) என்னும் உருவவியல் கோட்பாட்டிற்கு எதிராக விலகி வாசித்தல் என்னும் புதிய கோட்பாட்டினை முன்மொழிகின்றார். 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் நாவல்கள் 30,000 எண்ணிக்கை அளவில் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் ஐம்பது, அறுபதிற்கும் மேற்பட்ட நாவல்கள் குறித்து எவருக்கும் தெரியாது. எனவே, வாசிக்கப்படாத நாவல்கள் மிகப்பெரிய அளவில் இருக்கின்றன. எனவே, வாசிக்கப்படாத பெரும் இலக்கியப்பரப்பை(Great unread) வாசிப்பது தேவையாகிறது. ஒரு குறிப்பிட்ட பிரதியை நெருங்கி வாசிக்கும் பண்பியல்ரீதியான (Qualitative) ஆய்வுக்கு மாறாக பெரும் எண்ணிக்கை அளவினைக் கருத்திற்கொள்ளும் (Quantitative) ஆய்வுப்போக்கினை மொரெட்டி வற்புறுத்துகிறார். மேலும், உருவவியல் பார்வை இலக்கியத்தை வாழ்க்கையிலிருந்து பிரித்து விடுகிறது. இப்பார்வை இலக்கிய ஏற்புக்கும் மதிப்புக்கும் உதவுமே தவிர நடைமுறைப் பயனற்றது என்கிறார். விலகி வாசித்தலின் மூலம் பனுவலைவிட விரிவான அடிக்கருத்துகள், இலக்கிய வகைகள், அழகியற் கூறுகள் என்கிற இலக்கியத்தின் விரிவடைந்த பகுதிகளை நோக்கி ஆய்வினை நிகழ்த்துகிறார். இதன்மூலம், உலக இலக்கியம் என்ற ஒரு பேரமைப்பினை மொரெட்டி கட்டமைக்கின்றார். நெருங்கி வாசித்தலிலும் விலகி வாசித்தலிலும் ஒன்று போலவே பிரதி என்பது காணாமல் மறைந்து போகிறது. நெருங்கி வாசிப்பதைப் ‘புனிதப்பிரதி வாசிப்பாக’ பகடி செய்யும் மொரெட்டி, விலகி வாசித்தலின் மூலம் உலக இலக்கியம் என்ற ஒன்றை நோக்கி நம்மை அழைத்துச்செல்கிறார். ஒப்பிலக்கியத்தில் தேசிய இலக்கியம் பொருளற்றதாகி விட்டது. கோத்தேயும் எங்கல்சும் முன்மொழிந்த உலக இலக்கியம் இப்போது தேவைக்குரிய ஒன்றாகியுள்ளது. உலக இலக்கியத்தின் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு விலகி வாசித்தல் ஒரு முக்கிய அணுகுமுறையாக விளங்கும் என்கிறார்.


## உலக இலக்கியம் என்னும் அமைப்பு

மொரெட்டி இலக்கிய வரலாறு எழுதியலை மாற்றுப் பாதையில் திருப்பிவிடுகின்றார். இலக்கிய வரலாறு என்பது உலகளாவிய வரைச்சட்டகத்தைக் கொண்டதாக இருக்க வேண்டுமென வற்புறுத்துகிறார். உலக இலக்கியம் என்பது ஓர் அமைப்புதான்; ஆனால், அது சமச்சீரற்றதாக இருக்கிறது. உலக இலக்கியம் என்ற அமைப்பிற்குள் மையம்(Core), விளிம்பு(Periphery),அரைவிளிம்பு(Semi –Periphery) என்கிற மூன்று கூறுகள் செயல்படுகின்றன. மையம் என்பது சிறிய குழு; வளர்ச்சியடைந்த இலக்கியக் குழு. பெரும்பான்மையான புதிய இலக்கிய வடிவங்களை, வகைகளை, உத்திகளை இக்குழுவே உற்பத்தி செய்கிறது. விளிம்பு என்பது மிக விரிவடைந்த குழு. ஆனால், இக்குழுவில் உள்ள இலக்கியங்கள் மையக்குழு உற்பத்திசெய்த இலக்கியவகைகளை, வடிவங்களை, உத்திகளைத் தமது மொழிக்குள் போலச்செய்தலின் மூலமும் தழுவலின் மூலமும் கொண்டுவந்து சேர்க்கின்றன. விளிம்புக்குழு இலக்கியங்கள் தமக்கானவற்றை மையக்குழுவின் இலக்கிய மூலதனத்திலிருந்தே எடுத்துக்கொள்கின்றன. அரை விளிம்புநிலைக் குழுவைச்சார்ந்த இலக்கியங்கள் மையத்திலிருந்தும் விளிம்புகளிலிருந்தும் இலக்கியப்பண்புகளைப் பெற்று இலக்கியங்களை உற்பத்தி செய்கின்றன.

இவை கலவைத்தன்மை கொண்ட ஒட்டுநிலைக் கொத்து. ஸ்பானிஷ், இத்தாலி, பிரெஞ்சு, ஆங்கில இலக்கியங்கள் மையக்குழுவைச் சார்ந்தவை. ஆசிய, ஆப்பிரிக்க இலக்கியங்கள் விளிம்புநிலைக் குழுவைச் சார்ந்தவை. ருசிய இலக்கியம் விளிம்பிலிருந்து மையத்தை நோக்கிப் பயணிக்கும் அரை விளிம்பு நிலை இலக்கியமாக இருக்கிறது. இலக்கிய இணைப்புகளுக்கும் குறுக்கீடுகளுக்கும் இடையில் அதிகாரமும் அசமத்துவமும் நிலவுகிறது. உலக இலக்கியம் என்ற அமைப்பினை உலக மொழிகளிலுள்ள இலக்கியங்கள் தம்முடைய இடையீடுகளாலும் உறவுநிலைகளாலும் கட்டமைக்கின்றன.

### உலகப்பொருளாதார அமைப்பும் இலக்கிய அமைப்பும்

உலக இலக்கியம் என்பதனை ஓர் அமைப்பாகக் கருதும் அமைப்புக்கோட்பாட்டினைப் ஃபிராங்கோ மொரெட்டி அமெரிக்க சமூகவியல் பொருளாதார நிபுணர் இம்மானுவேல் மாரிஸ் வாலர்ஸ்டீனின்(Immanuel Maurice wallerstein) உலக அமைப்புகள் கோட்பாட்டிலிருந்து (World Systems Theory)உருவாக்குகிறார். மூன்றாம் உலக நாடுகள் என்ற கருத்தை நிராகரிக்கும் வாலர்ஸ்டீன், ஒரே உலகப் பொருளாதார அமைப்புதான் இருக்கிறது; அது நிதிமூலதனத்தை அடிப்படையாகக் கொண்டது. நிதிமூலதனத்தை மையக்குழு நாடுகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. அவைதான் பெரும்பாலான பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகின்றன. விளிம்புநிலையிலிருக்கும் நாடுகள் உற்பத்திக்கான மூலப்பொருட்களை அதிகாரம் மிக்க மைய நாடுகளுக்கு வழங்குவதோடு மலிவான உழைப்பையும் அவை வழங்குகின்றன. இதன்மூலம் மையம் அதிகாரம் மிக்கதாகவும் விளங்குகிறது. சில நாடுகள், விளிம்பு நிலையிலிருந்து மையத்திற்கு உற்பத்திகான மூலப்பொருட்களை வழங்குவதோடு சில பொருட்களை அவையே உற்பத்தியும் செய்கின்றன. இவை அரை விளிம்புநிலைக் குழுவைச் சார்ந்தவை. அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் மையக்குழுவைச் சார்ந்தவை. ஏனையவை விளிம்புநிலைக்குட்பட்டவை. தற்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா, பிரேசில், இந்தியா போன்ற நாடுகள் விளிம்புநிலையிலிருந்து மையத்தை நோக்கி முன்னேறி அரை விளிம்பு நிலையில் உள்ளன. இவ்வாறு, பொருளாதார அடிப்படையில் உலக அமைப்புகள் கோட்பாட்டை வாலர்ஸ்டீன் கட்டமைத்துள்ளார்.




உலகப் பொருளாதார அமைப்பு ஒன்றாக இருந்தாலும் அது சமச்சீரற்றதாகவும் அசமத்துவமானதாகவும் விளங்குகிறது. அதிகாரமும் அடிபணிதலும் இவற்றிற்குள் தொழிற்படுகின்றன. உழைப்பிற்கும் மூலதனத்திற்குமான போராட்டமும் தொடர்கின்றது. நிதி மூலதனம் அதிகாரம் மிக்கதாகவும் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சாராம்சம் மிக்கதாகவும் திகழ்கிறது. வாலர்ஸ்டீனின் உலக அமைப்புக் கோட்பாட்டின் போலச்செய்தலாகவே ஃப்ராங்கோ மொரெட்டியின் உலக இலக்கியங்கள் பற்றிய அமைப்புக்கோட்பாடு விளங்குகின்றது.

### வரைபடங்கள் – நிலப்படங்கள்– மரங்கள்

ஃப்ராங்கோ மொரெட்டியின் வரைபடங்கள், நிலப்படங்கள், மரங்கள் என்னும் நூல் நாவல் இலக்கிய வகையின் பரவலையும் எண்ணிக்கைப் பெருக்கத்தையும் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியையும் விரிந்த தளத்தில் கோட்பாட்டு நோக்கில் ஆராய்வதற்கான ஒரு புது தளத்தைச் சமைத்துள்ளது. 1750 முதல் 1950 வரை உலக இலக்கியங்களில் நாவல் வகை எவ்வாறு பயணம் செய்துள்ளது என்பதை இந்நூல் ஆராய்கிறது. ஸ்பானிஷ், இத்தாலி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மையக்குழுவிலிருந்து போலிஷ், துருக்கி, ருசியா, ஜப்பானிய இலக்கியங்களுக்கு நாவல் எவ்வாறு பரவியது என்பதை இந்நூல் விவரிக்கிறது. 1740களில் ஜப்பானிய

இலக்கியத்திற்குப் பரவிய நாவல் இலக்கியம் 1940களில் மேற்கு ஆப்பிரிக்க இலக்கியத்திற்குப் போய்ச் சேர்கிறது. நாவல் இலக்கியம் உலகத்தின் எந்த மொழியிலும் தன்னெழுச்சியாக உருவாகவில்லை. மேற்கத்திய மற்றும் உள்ளூர் யதார்த்தம் ஆகியவற்றிற்கிடையிலான சமரசத்தின் அடிப்படையிலேயே நாவல் இலக்கியம் உருப்பெற்றிருக்கிறது. அதுமட்டுமன்றி காலம், வெளி ஆகியவற்றின் அடிப்படையில் நாவல்வகை எவ்வாறு உலக மொழிகளில் வேறுபட்டிருக்கிறது என்பதையும் மொரெட்டி நிறுவுகிறார். இந்த நூலில் பிரிட்டன், ஜப்பான், ஸ்பெயின் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் முறையே கீழ்வரும் காலப்பகுதிகளில் நாவல் எழுச்சிபெற்றிருப்பதை எடுத்துரைக்கிறார்.

| | | |
|---|---|---|
| 1720 – 1740 | : | பிரிட்டன் |
| 1745 – 1765 | : | ஜப்பான் |
| 1820 - 1840 | : | இத்தாலி |
| 1845 - 1860 | : | ஸ்பெயின் |
| 1965 - 1980 | : | நைஜீரியா |

இந்த ஐந்து காலகட்டத்தில் நிகழ்ந்த நாவலின் எழுச்சியைப் பல்வேறு வரைபடங்களின் மூலம் துல்லியப்படுத்திக் காட்டியுள்ளார்.

மொரெட்டி வரைபடங்கள் வாயிலாக நாவலின் வெளியீட்டு எண்ணிக்கையையும் இந்த நூலில் அளவியல் ரீதியாக துல்லியப்படுத்திக் காட்டுகிறார். பிரிட்டனில் 1710-1850 காலகட்டத்தில் நாவலின் எண்ணிக்கை வளர்ச்சியை வரைபடத்தின் மூலம் விளக்கியுள்ளார். அதுமட்டுமல்லாமல் 1750 -1820 காலப்பகுதியில் பிரிட்டனைவிட ஜப்பானில் நாவல்கள் அதிகளவில் வெளிவந்துள்ளதாகச் சுட்டுகிறார். மேலும், 1820 - 1860 காலப்பகுதியில் பிரான்சு, இத்தாலி நாடுகளில் நாவலின் வெளியீட்டு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்திருப்பதையும் எடுத்துக்காட்டுகின்றார். இதேபோன்று 1800 - 1900 காலப்பகுதியில் பிரிட்டிஷ் ஆங்கிலத்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையையும் வரைபடமாக்கிக் காட்டுகிறார். மேலும் வட்டார நாவல், துப்பறியும் நாவல், புதிய பெண் நாவல், குடும்பநாவல், சமயநாவல், தொழிற்கள நாவல் என 160 ஆண்டுகளில் பிரிட்டனில் 44 நாவல் வகைகள் உருவாகி வளர்ச்சியடைந்திருப்பதாக எடுத்துக்காட்டுகின்றார். அத்துடன் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொடக்ககாலப் பெண் நாவலாசிரியர்களின் எண்ணிக்கையைப் புறந்தள்ளி ஆண் நாவலாசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் பாலின மடைமாற்றத்தையும் எடுத்துக்காட்டுகிறார்.

நிலப்படங்கள் என்னும் பகுதியில் பிரிட்டனில் 19ஆம் நூற்றாண்டின் முதல் கால்பகுதியில் புகழ்பெற்ற கிராமப்புறக் கதை நாவல்களின் வெளியை மிக நுணுக்கமாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். 1824 – 1832 காலப்பகுதியில் ஆங்கிலத்தில் வெளிவந்த கிராமப்புற நாவல்களின் நிலப்பின்னணியை அவற்றில் சித்திரிக்கப்பட்டிருக்கும் புவியியலைத் துல்லியப்படுத்திக் காட்டுகிறார். ஒரு குறிப்பிட்ட நாவல் எத்தனை மைல்பரப்பை எல்லையாகக் கொண்டு அமைந்திருக்கிறது; எத்தனை விதமான மக்களைப் பற்றிப் பேசுகிறது, எத்தனை தெருக்கள், தேவாலயங்கள், விளையாட்டு மைதானங்கள், விளைநிலங்கள் அவற்றுள் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன என்பதை வரைபடத்தைக் கொண்டு விளக்கிக்காட்டுகிறார். இதன்வழி நாவலின் நிலவியல் அமைப்பை அதன் உட்தொடர்புகளுடனும் சமூகப்புவியியலுடனும் (சான்றாக உழைப்பாளிகளின் உறைவிடமும் இயங்குதளமும்)இணைத்துக்காட்டுகிறார்.

டார்வினின் பரிணாமக் கோட்பாட்டின் அடிப்படையில் நாவலின் உள்ளார்ந்த வளர்ச்சிநிலையினை இந்நூலின் மரங்கள் என்னும் பகுதியில் விளக்குகிறார். மரம் நாவல் இலக்கிய வகைக்குக் குறியீடாகிறது. மரம் விதைநிலையிலிருந்து முளைத்து, கிளை பரப்பி, பூத்துக் குலுங்குவதைப் போல் நாவல் என்னும் இலக்கிய வகை பாத்திரப்படைப்பு, எடுத்துரைப்புத் தன்மையில் (கதைக்கூற்று முறையில்) எவ்வாறு தொடர் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதைச் சமூக வளர்ச்சியோடு இணைத்துக்காட்டுகிறார்.

## நாவலின் கதைக்கூற்று முறையில் மடைமாற்றங்கள்

சமூக அமைப்பின் மாற்றத்திற்கேற்ப நாவலின் கதைக்கூற்றுமுறை அமைப்பில் நிகழ்ந்த மாற்றங்களை மொரெட்டி தனது ஆய்வில் தொடர்புபடுத்தி விளக்குகிறார். சுதந்திரமான மறைமுக நடை (Free indirect style) என்கிற படர்க்கைக் கதைக்கூற்று முறை (எடுத்துரைப்பியல் கருவி) 19, 20ஆம் நூற்றாண்டு ஆங்கில, பிரெஞ்சு நாவல்களின் வாயிலாக பிற ஐரோப்பிய நாட்டிலக்கியங்களுக்கு புலம்பெயர்ந்து எவ்விதமான உள்ளார்ந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதைக் காட்டுகிறார். மேலும் இந்த எடுத்துரைப்பியல் கூறு பிற ஐரோப்பிய, உலக இலக்கியங்களில்

எவ்வாறு உள்ளூர் மரபுகளுக்கேற்ப மாற்றம் அடைந்துள்ளது என்பதையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இந்த ஒப்பீட்டு முறையியலை ஒப்பீட்டு உருபனியல் (Comparative Morphology) என்று அவர் அழைக்கிறார்.

19ஆம் நூற்றாண்டில் ஜேன் ஆஸ்டினால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த சுதந்திர மறைமுகக் கூற்றானது மேற்கு ஐரோப்பாவில் ஃப்ளாபர்ட், ஜோலா ஆகியோரின் நாவல்களில் மேலும் வளர்ச்சி பெற்றதாகச் சுட்டிக்காட்டுகிறார். எடுத்துரைப்பாளர்களும் கதைமாந்தர்களும் இணைந்துள்ள நேரடி மற்றும் மறைமுகச் சொல்லாடலைக் கொண்ட இந்தக் கூற்றுமுறையானது இருபதாம் நூற்றாண்டில் சார்லஸ் பாலியின் நாவல்களில் புதிய உத்திக்கூறுடன் மாறுபடுகிறது. அதாவது, புறவயமாகக் கூறுகின்ற மறைமுகக் கூற்று அகவயமாக உருமாறுகின்றது.

ருசிய நாவல் இலக்கியத்தில் தஸ்தயேவ்ஸ்கியின் எழுத்துகளில் இந்த மறைமுகக் கூற்று இன்னொரு மடைமாற்றத்தைப் பெறுகிறது. அங்கு பிற மக்களின் வார்த்தைகள்– குரல்கள் கவனப்படுத்தப்பட்டு நாவல் பல்குரல்தன்மை கொண்டதாக மாறுகிறது. முன்னிலைக் கூற்று முதன்மை பெறுகிறது. பக்தீனின் முன்னிலைக் கூற்றை முதன்மைப்படுத்தும் உரையாடலியம் தஸ்தயேவ்ஸ்கியின் குற்றமும் தண்டனையும் நாவலில் காணாமல் போய், ஆழ்மன அடுக்குகளின் உளவியல் வாழ்க்கைக்குள் தன்மைக் கூற்றுக்குள் போகிறது. இந்த தன்மைக் கூற்றை ஜேம்ஸ் ஜாய்ஸ் தனது யூலீசஸ் நாவலில் நனவோடை உத்தியாக மாற்றுகிறார். இறுதியான மாற்றமாக இலத்தீன் அமெரிக்க நாவல்களில் இந்த படர்க்கை எடுத்துரைப்பியல் தன்மைக்கூற்று அகமனக் குரலாக உருமாற்றம் பெறுகிறது. பிரெஞ்சு கயானாவில் நாவல் எடுத்துரைப்பாளர்கள் அவர்களது சொந்தச் சமூகத்திற்காகப் பேசுகிறார்கள். எடுத்துரைப்பு என்பது உள்நோக்கிப் பார்ப்பதாக இல்லாமல் கூட்டுச்சொல்லாடலாக அமைகிறது.

## அமைப்புக்கோட்பாடும் இந்திய நாவல் வளர்ச்சியும்

அமைப்புக் கோட்பாட்டின் வாயிலாக இந்தியச் சூழலில் நாவல் இலக்கிய வகையின் பரவலையும் வளர்ச்சியையும் ஆராய்கின்றபோது இந்திய நாவல்கள் இரண்டு மையக் குழுக்களிலிருந்து இலக்கிய மூலதனத்தைப் பெற்றுள்ளன. ஒன்று உலக இலக்கியங்களுக்கு இலக்கிய மூலதனத்தை வழங்கும் இத்தாலி, ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஆங்கிலம் உள்ளிட்ட ஐரோப்பிய மையக் குழு. மற்றொன்று மேற்கத்திய இலக்கிய மூலதனத்தின் வழி புதிய இலக்கிய வகைகளை இந்தியாவில் முதன்முதலில் உருவாக்கி முன்னோடியாகத் திகழும் வங்க இலக்கியம். இந்தியச் சூழலில் வங்க மொழியில்தான் முதன் முதலில் நாவல் மற்றும் சிறுகதைகள் உருப்பெற்றன. வங்க இலக்கியம் ஐரோப்பிய இலக்கியத்தோடு ஒப்பிடும்போது விளிம்புக் குழுவைச் சேர்ந்தது. ஆனால் இந்திய இலக்கியங்களைப் பொறுத்தவரை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் வங்க இலக்கியம் பிற இந்தியமொழி இலக்கியங்களுக்கு இலக்கிய மூலதனத்தை வழங்கும் மையமாகத் திகழ்ந்தது. பங்கிம் சந்திரரும் தாகூரும் புதிய இந்திய இலக்கிய வகைகளுக்கு, இலக்கிய வடிவங்களுக்குவும் முன்னோடிகளாகவும் களம் சமைத்தவர்களாகவும் விளங்குகின்றனர்.

இந்திய நாவல்களின் உருவாக்கத்திற்கு சர் வால்டர் ஸ்காட் மட்டுமின்றி பங்கிம் சந்திரரும் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறார். ஸ்காட்டின் சாகசக் கற்பனை நாவலும் பங்கிம் சந்திரரின் வரலாற்று சாகசக் கற்பனை நாவலும் இந்திய மொழிகளில் வெளியான தொடக்க நாவல்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும் இந்தியச் சூழலில் ஐரோப்பிய மையக் குழுவில் இருந்து நாவல் வடிவத்தைப் பெற்று அவர்தம் சொந்த மொழியில் எழுதாமல் மையக் குழுவில் உள்ள ஆங்கில மொழியில் எழுதியதை இந்தியச் சூழலில் காண முடிகிறது. இந்தியாவில் நாவல் இலக்கிய வகையினை முதலில் அறிமுகப்படுத்திய பங்கிம் சந்திரர் தனது முதல் நாவலை (Rajmohan's Wife -1864) ஆங்கில மொழியில் எழுதி ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்து (Indian writing in English) முறையைத் தொடங்கி வைத்தார். வங்க மொழியில் அதற்கடுத்த ஆண்டில் (1865) துர்க்கேச நந்தினி எனும் நாவலை எழுதி வெளியிட்டார். இந்திய மொழிகளில் முதலில் வெளிவந்த நாவல் இதுதான் என்று வைத்துக் கொண்டால் இந்திய மொழிகளில் நாவல் இலக்கியத்தின் பரவல் 1930ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. இந்த ஆண்டில் மணிப்பூரில் மெய்தி மொழியில் 'மாதவி' என்றொரு நாவல் வெளிவந்துள்ளது. இதனை லம்பம் கமல் என்பவர் எழுதியுள்ளார்.

தொடக்ககால இந்திய நாவல்கள் ஐரோப்பிய நாவல் வடிவத்தைத் திருத்தம் செய்தும் சீரமைத்துமே தம்மை வடிவமைத்துள்ளன; தகவமைத்துக் கொண்டுள்ளன. சான்றாக தசகுமார சரிதம், ஹர்ஷ சரிதம் முதலான சரித்திர கதைக்காவியங்களை நினைவூட்டும் வகையிலேயே பெரும்பாலான தொடக்ககால இந்திய நாவலின் தலைப்புகளும் உள்ளடக்கங்களும் அமைந்துள்ளன. சான்றாக இந்திய மொழிகளில் முதல் நாவல்களான துர்க்கேச நந்தினி, கபால குண்டலை (வங்கம்), குந்தலதா, மார்த்தாண்ட வர்மா(மலையாளம்) முதலியன பழைய வரலாற்றைக் கதைப்பொருளாகக் கொண்டவை. சரிதம் என்ற பழைய இந்திய வகையை நினைவூட்டும் வகையில் பல தொடக்ககால இந்திய நாவல்கள் சரித்திரம் என்ற பெயரைத் தாங்கி வெளிவந்துள்ளன. பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் (தமிழ்), ஸ்ரீரங்கராஜூ சரித்திரம், ராஜசேகர சரித்திரம் (தெலுங்கு). ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தொடர்ந்து ஆண்ட மன்னர்களின் வரலாற்றை நாவலாக எழுதுவதையும் இந்திய நாவல்களில் காணமுடிகிறது. இவ்வகையில், வங்க நாவலாசிரியரான ரமேஷ் சந்திரதத் எழுதியுள்ள மகாராஷ்டிர ஜீவன் பிரபாத்(1871), பங்க விஜதா(1874), மாதவி கங்கண்(1877) ஆகிய மூன்று நாவல்களும் தொடர்ச்சியாக இந்தியாவை ஆண்ட மூன்று மொகலாய அரசர்களான அக்பர், ஷாஜகான், அவுரங்கசீப் ஆகியோரின் வரலாற்றுப் பின்புலத்தை அவர்கள் ஆண்ட காலத்தைப் பதிவு செய்துள்ளன. இம்மூன்று நாவல்களும் பின்னர் சத வருஷம் (நூறாண்டுகாலம்) என்ற பெயரில் தொகுத்து வெளியிடப்பட்டன. இதேபோன்று திருவிதாங்கூரைத் தொடர்ந்து ஆண்ட மூன்று மன்னர்களின் வரலாற்றை சி.வி.ராமன்பிள்ளை மார்த்தாண்ட வர்மா(1891), தர்மராஜா (1913), ராம, ராஜபகதூர்(1919) ஆகிய நாவல்களில் தொடர்ச்சியாக எழுதியுள்ளார். எனவே, நாவல் என்ற நவீன இலக்கிய வடிவம் இந்தியச் சூழலில் பழைய வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் அதன்வழி தேசியவுணர்வை (இந்திய/வட்டார) எழுச்சி பெறச் செய்வதற்கும் உதவியுள்ளன. மேலும், நாவலைப் பிரபந்தம் என்ற பழைய இலக்கிய வகையோடு இணைத்துப் பேசுகிற தன்மையினைக் காண முடிகின்றது. தெலுங்கின் முதல் நாவலான ஸ்ரீரங்கராஜூ சரித்திரத்தை எழுதிய நரஹரி கோபால கிருஷ்ணம செட்டி தனது நாவலை ‘வசன பிரபந்தம்’ என்றே அழைத்தார்.

தொடக்ககால இந்திய நாவல்களின் தலைப்புகள் மிக நீண்டதாக இருப்பதை நாம் கவனிக்க முடிகிறது. அத்துடன் சில நாவல்கள் இரட்டைத் தலைப்புகள் கொண்டதாகவும் இருக்கின்றன. தமிழில் கமலாம்பாள் சரித்திரம், ஆபத்துக்கிடமான அபவாதம் என்று ஒரு துணைத்தலைப்பைப் பெற்றிருப்பதைப் போல தெலுங்கின் முதல் நாவல் ஸ்ரீரங்கராஜூ சரித்திரம் 1872, ஸோனாபாயி பரிணயம் என்ற மற்றொரு துணைத்தலைப்பையும் பெற்றுள்ளது. மேலும் இந்திய நாவல்கள் அவற்றுக்கான எடுத்துரைப்பு வடிவத்தை காப்பியங்களிலிருந்தும் கதைப்பாடல்களிலிருந்தும் பெற்றுள்ளன. சான்றாக தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தில் காப்பியங்கள் போல கிளைக்கதைகள் இடம் பெற்றுள்ளன. அற இலக்கியத்தைப் போன்று நீதியுணர்த்தும் பாங்கு மேலோங்கி நிற்கிறது. ஸ்காட்டின் சாகசக் கற்பனைப் பண்பு பிரதாப முதலியார் சரித்திரத்தில் இந்திய - தமிழ் வண்ணம் பெற்றுக் காட்சி அளிக்கிறது. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தில் காணப்படும் கதைக்கூற்று முறைக்கும் விடுதலைக்குப் பின்தோன்றிய நாவலான மலரும் சருகும் நாவலின் எடுத்துரைப்பிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கவனிக்கத்தக்கன.

இந்திய விடுதலைக்குப் பின்னர் இந்திய நாவல் தனக்கான இலக்கிய மூலதனத்தை ருசியமொழியிலிருந்து பெற்றுக்கொண்டுள்ளது. மக்ஸீம் கோர்க்கியின் தாய் நாவல் அறிமுகத்தின் காரணமாக சோசலிச யதார்த்தவாத நாவல் என்கிற புதிய நாவல் இலக்கியவகை இந்திய இலக்கியத்தில் உருப்பெற்றது. உலகநாவல் இலக்கிய உருவாக்கத்தில் விளிம்புநிலையில் இருந்த ருசிய நாவல் மையத்தை நோக்கி முன்னேறி விளிம்புநிலை இந்திய நாவல்களுக்கு இலக்கிய மூலதனத்தை வழங்கியுள்ளது. சோசலிச யதார்த்தவாத நாவல் வகையின் அறிமுகத்தின் காரணமாக இந்திய நாவல்களின் எடுத்துரைப்பு முறையில் அதாவது கதைக்கூற்று முறையில் மாற்றம் நிகழ்ந்தது. நாவலாசிரியர் நேரடியாகக் கதைசொல்லும் முறைமையில் இருந்து விலகி சுதந்திரமான மறைமுகப் படர்க்கைக்கூற்று முறை செல்வாக்குப் பெற்றது.

இந்தத் தேசம் இங்கிலீஷ் துரைத்தனத்தார் சுவாதீனமாகிச் சில காலத்திற்குப் பின்பு சத்தியபுரி என்னும் ஊரிலே, தொண்டை மண்டல முதலிமார் குலத்திலே நான் பிறந்தேன். என் பாட்டனாராகிய ஏகாம்பர முதலியார் இந்தத் தேசத்தை ஆண்ட நவாபுகளிடத்தில் திவான் உத்தியோகஞ் செய்து, அளவற்ற திரவியங்களையும் பூஸ்திதிகளையும் சம்பாதித்தார் (பிரதாப முதலியார் சரித்திரம்: மாயூரம் வேதநாயகம் பிள்ளை)

‘என்னலே, சுதந்திரம் வந்துட்டா மேல்குலம் கீழ்குலமிங்கிறது எல்லாம் இல்லாம போயிருமோ? காலை இணுங்கிக் கையிலே குடுத்துப்போடுவோம். எச்சரிக்கையா புழைச்சுக்கங்க’ மாடசாமிக் குடும்பனைப் பார்த்து இவ்வாறு உறுமிவிட்டு மீசையைத் தடவிவிட்ட வண்ணம் நின்றார் மூக்கையாத்தேவர். (மலரும் சருகும்: டி.செல்வராஜ்)

மேற்காட்டிய இரண்டு நாவல்களின் தொடக்கங்கள் அதன் கதை விவரணை முறையிலும் உள்ளடக்கத்திலும் மிகப்பெரிய மாற்றத்தைச் சுட்டி நிற்கின்றன. பிரதாப முதலியார் சரித்திரம் கதைத்தலைவனின் தன்மைக்கூற்றாக விரிந்துசெல்ல, மலரும் சருகும் இருவரின் உரையாடலாக விவரணை செய்யப்பட்டுள்ளது. கதைக்கூற்று முறையிலுள்ள இந்த மாற்றம் சமூக மாற்றத்தோடு இணைந்தே நிகழ்ந்துள்ளது. தொடக்ககால நாவல்களில் கருத்தியல் சார்பில்லாத கதைமாந்தர்களையும் விடுதலைப் போராட்ட காலகட்டத்திலும் அதற்குப் பின்னரும் கதைமாந்தர்கள் கருத்தியல் சார்பு கொண்டவர்களாகவும் பொதுமக்கள் மற்றும் நாவலாசிரியரின் அபிப்ராயங்களை வெளிப்படுத்துகின்றவர்களாகவும் திகழ்கின்றனர். தமிழ் நாவல்களின் கதைக்கூற்று முறையின் பரிணாம வளர்ச்சி தனித்த ஒரு ஆய்வுக்குரியது.

### முடிவுரை

ஃபிராங்கோ மொரெட்டியின் அமைப்புக் கோட்பாடு உலக இலக்கியங்களை விரிந்த தளத்தில் ஆராய்வதற்கான அடிப்படையை உருவாக்கியுள்ளது. தனிப்பட்ட இலக்கியப் பனுவல்களின் நுண்ணியக் கூறுகளின் ஆழங்களுக்குச் செல்லாமல் இலக்கியங்களின் மேற்பரப்பில் அதிகக் கவனம் செலுத்தும் விலகி வாசித்தலின்வழி ஒட்டுமொத்த உலக இலக்கியப் பரப்பு ஆய்வுக்குரிய களமாக மாறுகின்றது. இத்தகைய விசாலப் பார்வையில் இலக்கியங்களின் பொதுக்கூறுகளும் விரிந்த கட்டமைப்பும் கவனப்படுத்தப்படுகின்றன. இதன் வழியாக உலகப் பொதுவான இலக்கியக் கொள்கையை உருவாக்கவும் உலக இலக்கிய வரலாற்றை எழுதவும் முடிகிறது. அத்துடன் குறிப்பிட்ட இலக்கிய வகையின் உலகப் பயணத்தையும் பரவலையும் கண்டறிய முடிகிறது. ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையின் உலகப் பயணத்தில் உள்ளூர் மரபுகளின் குறுக்கீடுகளும் இணைப்புகளும் அவ் இலக்கிய வகை பண்பாட்டுமயமாக்கலுக்கு உள்ளாகி உள்ளூர் வண்ணம் பெறுவதையும் ஆராய இயலும். மொரெட்டியின் அமைப்புக் கோட்பாடு இலக்கியம் பற்றிய பெருங்கதையாடலாகத் திகழ்கிறது. விலகி வாசித்தல் மற்றும் அமைப்புக் கோட்பாடு வழி மொரெட்டி நாவல் எனும் நவீன இலக்கிய வகையின் சகல விதமான பரிமாணங்களையும் ஆராய்வதற்கான பெரும் வாயிலைத் திறந்து விட்டிருக்கிறார்.

### துணைநூற்பட்டியல் :


#### தமிழ்

1. செல்வராஜ், டி, மலரும் சருகும், சித்திரை நிலவு புத்தக வெளியீட்டாளர், மதுரை, 2023.
2. மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014
3. சுகுமார் சென், பெ.நா.அப்புஸ்வாமி(தமிழில்), வங்க இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 2019.
4. ஆனந்தகுமார், பா., டி.எஸ்.கிரிபிரகாஷ், தெலுங்கு இலக்கிய வரலாறு, பார்த்திபன் பதிப்பகம், மதுரை,1987.

#### மலையாளம்

5. எரிமேலி பரமேஸ்வரன் பிள்ளை, மலையாள சாகித்தியம் காலகட்டங்களினூடே, பார்த்திபன் புக்ஸ், மாவேலிக்கர, 2003.

#### ஆங்கில நூல்கள்

6. Adrijana Marcetic,After Comparative Literature, Institute for Literature and Art, Bangalore, 2018, Greta Goetz(in English).
7. Carolyn Lesjak, ‘‘All or Nothing: Reading Franco Moretti Reading’’ , A review of Distant reading and the Bourgeouis: Between History and Literature by Franco Moretti, Historical Materialism, 24.3(2016) pp.185- 205.
8. Frank Jacob,(ed.,) wallerstein 2.0, Transcript Verlag, Bielefeld, 2023.
9. Franco Moretti, Graphs, Maps, Trees – Abstract Models for Literary history, Verso, London, New York, 2007
10. Franco Moretti, “Conjectures on world literature’’, New left Review, Jan- feb 2000. pp.54-68


●


**கட்டுரையாளர்: முதுநிலைப் பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலம், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.**

## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக

# மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

## தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி

**கூர்மையான, பல அடுக்குத் திட்டமிடலுடன்**
**பல முறை பலரால் மதிப்பீடு செய்யப்பெற்று**
**'விழி' - இணைய அமர்வில் விவாதித்து மேம்படுத்தப்பட்ட**

**64 அறிஞர்களின் ஆய்வுரைகள் 1300 பக்கங்களில்**
**12 தொகுதிகளாக விரைவில் வெளிவருகின்றன**

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!




**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள்**
**தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற**
**புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**நவம்பர் மாதத்துடன் முடிவடையும்**
**சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1734 | 8569 | 373 | 5834 | 316 | 5835 | 3763 | 2398 |
| 2400 | 7993 | 2841 | 1136 | 2691 | 3110 | 2732 | 5765 |
| 2573 | 2800 | 2843 | 1135 | 2692 | 1728 | 4290 | 3764 |
| 6812 | 2799 | 2844 | 987 | 1735 | 317 | 3762 | |
| 374 | 2798 | 7928 | 1733 | 2845 | 989 | 1736 | |
| 7774 | 2842 | 988 | 2080 | 8976 | 4289 | 5764 | |
| 2076 | 5378 | 2729 | 2081 | 4284 | 4285 | 7995 | |
| 2077 | 5379 | 2840 | 2078 | 4283 | 4286 | 2736 | |
| 7930 | 371 | 3111 | 314 | 5381 | 4287 | 6470 | |
| 8574 | 372 | 1924 | 315 | 5380 | 4288 | 5833 | |

தனி இதழ் ₹ **45.00 /** ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**, / ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

**நூல் அறிமுகம்**

# பட்டுக்கோட்டையாருக்கான கவிதாஞ்சலி




**பட்டுக்கோட்டை தமிழின் பாட்டுக்கோட்டை / கவிஞர் ஜீவி / தமிழ் திசை / சென்னை – 2 / விலை ரூ 150/-**



**இரா.காமராசு**

மக்கள் கவிஞர் எனப் போற்றப்பட்டவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். பாரதி, பாரதிதாசன் வழியில் வெகுமக்கள் கவிஞராக விளங்கினார். 13.04.1930 ல் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே 'செங்கப்படுத்தான்காடு' எனும் சிற்றூரில், எளிய குடும்பத்தில் பிறந்தவர். பள்ளிப் படிப்பை மட்டுமே எட்டிய இவர், இளமையிலேயே கவிபாடும் திறன் பெற்றிருந்தார். இவரின் தந்தையாரும் பாட்டுக் கட்டும் பாவலர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்யாணசுந்தரம் எளிய மக்களோடு வாழ்ந்தார். வாழ்க்கைப்பாட்டிற்காகப் பல்வேறு தொழில்களைச் செய்தார். விவசாயி, மாட்டு வியாபாரி, மாம்பழம் விற்பவர், இட்லி விற்பவர், முறுக்கு விற்பவர், தேங்காய் வியாபாரி, கீற்று வியாபாரி, மீன், நண்டு பிடிக்கும் தொழிலாளி, உப்பளத் தொழிலாளி, மிஷின் டிரைவர், தண்ணீர் வண்டிக்காரர், அரசியல்வாதி, பாடகர், நடிகர், நடனக்காரர், கவிஞர் என அவரின் 'அவதாரங்கள்' நீளும். பதினேழு தொழில்கள் செய்ததாகச் சுட்டுவர்.

உதிரி வாழ்வில் அடித்தள மக்கள் மீதான கரிசனம் பிறந்தது. பொதுவுடைமை இயக்கத்தின் மீது ஈர்ப்பு

எழுந்தது. பட்டுக்கோட்டைப் பகுதியில் களமாடிய வாட்டாக்குடி இரணியன், சாம்பவானோடை சிவராமன் ஆகியோரின் தாக்கமும் காரணமாக அமைந்தன. கம்யூனிஸ்ட் கட்சித் தொடர்பில் புதுச்சேரித் தலைவர் வ.சுப்பையா மூலம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு நெருக்கம் ஏற்படுகிறது. இவர் 'பாரதிதாசன் வாழ்க' என்று எழுதிவிட்டே தன் பாடல்களை எழுதுவாராம். அந்தப் பாடல் புனையும் திறன், கலை ஆர்வம் காரணமாக 'சக்தி நாடக சபா'விலும் இணைகிறார். பின்னர் திரைத்துறையில் நுழைகிறார். 1956 ஆம் ஆண்டு 'படித்த பெண்' திரைப்படத்தில் இவரின் முதல் திரையிசைப் பாடல் வெளிவந்தது.

ஓரிரு ஆண்டுகளிலேயே நூற்றுக் கணக்கானப் பாடல்களை எழுதிப் புகழ் பெற்றார். 08.10.1954இல் தன் இருபத்தொன்பதாம் வயதில் காலமானார். இவரின் பொது வாழ்வு சுமார் பத்தாண்டுகள். கலை உலக அனுபவம் சுமார், ஐந்தாண்டுகள். கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஜீவா, ஐ.மாயாண்டி பாரதி, மாசிலாமணி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், திரைப்பட இயக்குநர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் தொடர்பு... என மக்கள் கவிஞரின் வாழ்வும் வரலாறும் சுருக்கமானதுதான். ஆனால் அவரின் வீச்சு பெரிது.

பாரதி, பாரதிதாசன் புகழ்பரப்பியோர் போல மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் புகழ் பரவச் செய்தோர் பலர் உள்ளனர். கவிஞர் ஜீவபாரதி முதன்மையானவர். பட்டுக்கோட்டையில் நிறுவப் பெற்ற மக்கள் கவிஞர் திருவுருவச்சிலை முக்கியமானது. ஆண்டுதோறும் இங்கு நடக்கும் விழாக்களும் குறிப்பிடத்தக்கவை. சிங்கப்பூரில் செயல்படும் 'மக்கள் கவிஞர் மன்றம்' கவிஞரை அயலகச் சூழலில் கொண்டாடி மகிழ்கிறது. பட்டுக்கோட்டையார் குறித்த ஆவணப்படமும் முக்கியமானது.

தமிழகத்தில் மக்களிடம் கவிஞரைக் கொண்டு சேர்த்த பெருமையில் கவிஞர் நா.முத்துநிலவன், கவிஞர் மதுக்கூர் ராமலிங்கம், கவிஞர் ஜீவி ஆகியோருக்குப் பெரும்பங்கு உண்டு.

இதன் தொடர்ச்சியாக கவிஞர் ஜீவி 'பட்டுக்கோட்டை தமிழின் பாட்டுக்கோட்டை' எனும் புதுக்கவிதை நூலை எழுதியுள்ளார். ஜீவி பல கவிதை நூல்களுக்குச் சொந்தக்காரர். எளிமையாகவும், இனிமையாகவும் மக்கள் விரும்பும் வண்ணம் பேசும் ஆற்றல் மிக்கவர். எழுத்து, மேடைப் பேச்சு எனத் தொடர்ந்து இயங்கி வருபவர்.

பட்டுக்கோட்டையாரை உணர்ந்து உள்வாங்கிய கவிஞர், அவரின் வாழ்வியல் நிகழ்வுகள் சிலவற்றை அழகாகக் கவிதைகளாக்கி உள்ளார். உண்மையிலேயே இது பட்டுக்கோட்டைக்கு சிறந்த 'கவிதாஞ்சலியாக' அமைந்துள்ளது.

பட்டுக்கோட்டையாரை, 'தஞ்சைத் தரணிதந்த / கவிதை ஊருணி' என்கிறார். மேலும், "வயிறு பசிக்கிறவன் / விடமாட்டான் / மூலதனம் / கூலி ஜனம் / வாழ்க்கைப் பாடு மாற / அவன் சொன்ன வாய்ப்பாடு" என்று பட்டுக்கோட்டையின் அகத்தைச் சுட்டுவார்.

"வெற்றிலையும் வாயும் / விளையாடும் வேளையிலே / நெற்றியிலே சிந்தை / நிழலோடி நின்றிருக்கும் / கற்ற தமிழ் வழியில் / கவியாக வந்திருக்கும் / அண்ணே! என அழைத்தால் / அதில் ஒரு சுவை இருக்கும்" எனக் கவிஞரின் புற அழகைச் சுட்டுகிறார்.

பட்டுக்கோட்டையின் பாட்டுப் பிரவேசத்தை, "வரிகள் திரிகளாயின / திசையெட்டும் தீப்பற்ற வைத்தன", "அழகியலும் சமூக / அக்கறையும் கொண்ட / பாட்டு வரிகள் / பட்டுக் கோட்டையின் / அடையாளம் ஆயின" என மிகச் சரியாகச் சுட்டுகிறார். மேலும்,

"வஞ்சிப்பா பாடிய / கவிஞர்களுக்கு மத்தியில் / ஏழைகளை வஞ்சிப்போர் பற்றிப் / பாடியவன் பட்டுக்கோட்டை"

"சொல்லுக்குள் வார்த்தைகளைச் /சுருக்கி வைக்கும் வித்தகர் கல்யாணசுந்தரம்"

"பட்டுக் கோட்டையாரின் / சொல் வெட்டு கவிதைக் / கல்வெட்டாக இன்று வரை / நிலைத்து விட்டது"


"சாணக்கியர் எழுதியது / அர்த்த சாஸ்திரம் நம் / பட்டுக்கோட்டை எழுதியதோ / வர்க்க சூத்திரம்" என்றெல்லாம் கவிஞர் ஜீவி, மக்கள் கவிஞருக்கு கவிதை மகுடம் சூடி இருக்கிறார்.

குறுகிய வாழ்வில் எளிய மக்களின் வாழ்வியலை வெகு மக்கள் ஊடகமாம் திரைக்கலையில் பதியமிட்டவர் பட்டுக்கோட்டை. கொள்கை வழி நின்ற மக்கள் கவிஞருக்கு ஜீவி படைத்திட்ட கவிதைத் தோரணமாக இந்நூல் விளங்குகிறது.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர் – தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

கட்டுரை



# பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் வடமொழி கலவா தமிழ் நூல்

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இராமேச்சுரத்தை அடுத்த திருத்தேவை எனும் பாம்பனில் (1850) பிறந்தவர். இவர் முருகனை வழிபட்டு வந்த தமிழ்த் துறவி. இயற்பெயர் அப்பாவு. திருஞான சம்பந்தர், அருணகிரிநாதர் வழியில் சித்திரக் கவிகள் எழுதியுள்ளார். பதின்மூன்று வயதில் குமரகுருவைப் பற்றி கவிதைகள் 100 நாட்களுக்கு மதிய உணவுக்கு முன் ஒவ்வொரு நாளும் ஒரு கவிதை எழுதினார். இவரியற்றிய சண்முகக் கவசம், பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம், குமாரஸ்தவம் போன்ற பாடல்கள் புகழ்பெற்றவை, முருகனின் வழிபாடாக இவர் இயற்றிய பாடல்கள் 6666. கோயில் பூசாரி சேது மாதவ ஐயர் மூலம் சமஸ்கிருதத்திலும் தேர்ச்சி பெற்றார்.

இவருக்கு 25 வயது எட்டியபொழுது 1878ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் இராமநாதபுரத்தில் காளிமுத்தம்மாளைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு முருகையா பிள்ளை, சிவஞானம்மாள், குமரகுருதாச பிள்ளை என மூன்று மகவுகள் பிறந்தனர். 1894ஆம் ஆண்டு பிரம்பன்வலசை என்ற ஊரில் அருந்தவம் புரிந்த பின்பு துறவுநெறி மேற்கொண்டு சென்னையை வந்தடைந்தார்.

அப்போது அவருடன் பழகிய "திரு.வி.க அவர்கள் இவ்வாறு கூறுவார். 'குமரகுரு திருவல்லிக்கேணியில் தங்கியிருந்தபோது நாடோறும் மாலை வேளையில் கடற்கரை செல்வார். அவருடன் யானும் போவேன், அடிகள் வடமொழி உபநிடதக் கருத்துகளைத் தமிழில் விளக்குவார். சாத்திர நுட்பங்களை எளிதில் வெளியிடுவார்." (திரு.வி.க வாழ்க்கைக் குறிப்பு பக்.127).



டாக்டர் சு.நரேந்திரன்

*தமிழ் மீது கொண்ட அன்பின் காரணமாக வேறு எந்த மொழியிலிருந்தும் எந்த வார்த்தைகளும் இல்லாமல் தூய தமிழில் முருகனைப் பற்றி 50 பாடல்களைக் கொண்ட நூலை உரையுடன் இயற்றிய ஒரே துறவி பாம்பன் சுவாமிகள் மட்டுமே. இவர் இயற்றிய ஆறு செய்யுள்கள் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றுடன் நான்காவது மண்டலத்தைச் சேர்ந்ததுதான் தூய தமிழ் நூல், 'சேந்தன் செந்தமிழ்'. இந்நூலின் முதல் பதிப்பு 1906இல் பாம்பன் சுவாமிகளாலே பதிப்பிக்கப் பெற்றது. அப்பதிப்பில் நூலின் முன்னுரையும் அமைதி ஐம்பது என்னும் செய்யுட்களின் மூலமும் மட்டும் வெளியிடப் பெற்றன. நாற்பத்தெட்டுப் பக்கங்களைக் கொண்ட இந்நூலில் பத்துப் பக்கங்களே மூலநூல், எஞ்சிய முப்பத்தெட்டுப் பக்கங்களில் ஆசிரியர் முன்னுரை உள்ளது.*




*இதன் இரண்டாம் பதிப்பு 1915இல் நூலாசிரியரின் சீடர்களில் ஒருவராக, தா.வேங்கடாசல முதலியாரால் பதிப்பிக்கப் பெற்றது. இதுபோல மூன்றாம் பதிப்பு 1996இல் மதுரை பாம்பன் மெர்க்கண்டைல்ஸ் உரிமையாளரினாலும், 4ஆம் பதிப்பு மகாதேஜோ மண்டல சபையினாலும் வெளியிடப் பெற்றுள்ளன.*

*இந்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி பாம்பன் சுவாமிகள் முதல் பதிப்புக்கு எழுதிய நீண்ட ஆராய்ச்சி முன்னுரை. இரண்டாம் பகுதி 'சேந்தன் செந்தமிழ்ப் புலன்வனப்பு' எனப்படும் வடசொல் – தமிழ் அகரமுதலி; மூன்றாம் பகுதி 'அமைதி ஐம்பது' மூலமும் உரையும், இந்நூலின் உரையாசிரியர் சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான மா.துரைசாமி முதலியார். இவ்வுரையை சுவாமிகளிடம் நேரில் கேட்டுத் தெரிந்து அவர் ஆணைப்படி வடசொல் புகாத தனித்தமிழ்ச் சொற்களால் இயற்றப்பட்டது.*

"….இவ்வளவில் வந்த மொழிகளிலெல்லாம் மொழியேனும் புகாமல் தென்மொழி நூலொன்று மின்றா மெனவும், இன்னும் வேண்டியவாறாகவும் வடமொழி கற்றாருட் சிலர் கூறுதல்' கூறுங்கொல் இதுகாறும் காட்டப்பட்ட சொற்களெல்லாம் வட மொழியேயாயினும், தென்மொழியேயாயினும் சிலச்சில பலப்பல அவ்வாறாயினும் அவர் கூற்றுப்படி இவற்றுட் பலசில புகாமல் தென்மொழி நூலொன்று மின்றென்றல் உறுதியேயாம். ஆகலின் இச்சொற்களுள்ளும் ஒன்றேனும் புகாமலே 'சேந்தன் செந்தமிழ்' எனுமிந் நூலென்னாலமைக்கப்படுவதாயிற்று."

*இவ்வாறு பல சொற்கள் "நீங்குழியுந் தமிழ்ச் செய்யுள் தன் மொழியானே நடைபெறா உமெனும் ஆற்றலு மிதனால் வெளிப்படுத்தப்பட்டது". (பாம்பன் சுவாமிகள் முன்னுரை பக்-28)*

"வடமொழி கலவாத் தமிழ் நூல் ஒன்றேனும் இல்லை என வடமொழி கற்றார் கூறக்கூடும், அக்கூற்று உண்மையே" எனக் கருதிய பாம்பன் சுவாமிகள் வடசொல் ஒன்றும் கலவாத 'சேந்தன் செந்தமிழ்' நூலை எழுத விரும்பினார்; எழுதினார். இலக்கணக் கொத்தின் ஆசிரியர் சாமிநாத தேசிகன் கூற்றினைக் கருத்திற் கொண்டு பாம்பன் சுவாமிகள் இந்நூலைப் படைத்திருக்கலாம்.

*வடசொற்களை முற்றாக நீக்கிய பிறகும் தமிழ் தன் சொற்களாலே இயங்கும் ஆற்றலை நிலை நாட்டலே பாம்பன் சுவாமிகளின் நோக்கம் என்பது தெளிவாகின்றது.*

ஊரும் பெயரும் (மந்த்ரம்) மறையும் ஓரொலிக் குறிப்பும், ஈரொலிக் குறிப்பும், எம்மொழியினும் ஏற்பட்டபடி கோடல் கூடுமாயினும், முருகப் பிரானெனுஞ் சேந்தன் மீது பாடுந்தூய தமிழாம் இச்செந்தமிழில், அந்தப் பிரான் பெயராக வடநூலிழை வரூஉம் கார்த்திகேயன், மஹாஸேனநன், சரஜன்மன், ஷடாநநன், பார்வதி நந்தனன், ஸ்கந்தன், யேநாநீ, அக்நிபூ, குஹன், பாஹூலேயன், தாரகஜித் விசாகன், சிகிவாகநன், ஷான்மாதுரன், சக்திதரன், குமாரன், க்ரௌஞ்ச, தாரணன், வல்லீசன், குக்குடதாரன், ஸீப்ரஹ் மண்யன், த்விஷட்புஜன், சூரன், ஸ்வாமி, கஜாமுகாநுஜன், சரவணபவனென வருவனம், இவற்றிற்கு வேறாக வடமொழி ஆயிரம் பெயரில் வரும் பெயர்களும் புகவில்லை. பிராட்டிகளின் பெயராகிய தேவஸேனா வல்லீயெனுஞ் சொற்களும் புகவில்லை. தெய்வயானை என்பதில் தெய்வம்

என்பது வடசொல்லென்ப. அதனோடு சிவணிய 'யானை' என்பதையும் சிலர் வடசொல்லெனக் கூறுதல் மேலே விளக்கப்பட்டது. தெய்வயானையென்பது 'கடவுட்பிடி' எனவும், வல்லீ (வள்ளி) என்பது 'கொடிச்சி' எனவுஞ் செந்தமிழ் வழக்காக இந்நூற்கண் நிற்றல் காண்க. அங்ஙனம் குஹனென்பது உள்ளிடத்தான், கடவுள் என நிற்பன பலவென்க.

யானை, வல்லி முதலிய சொற்களைக் கூட வட மொழியாளர் சிலர் தமிழன்றென்று என கூறுதலின் அச்சொற்களையும் கூட விலக்கி பாம்பன் சுவாமிகள் தூய தனித்தமிழ் நூல் எழுதினார் என்பது இம் முன்னுரைப் பகுதியால் தெரிகிறது.

இச்சிறந்த ஆராய்ச்சி நூல் சொற்பிறப்பு, ஆராய்ச்சி நெறிமுறை (ETYMOLOGICAL DERIVATION) பற்றியறிந்து கொள்ள இஃது ஒரு சிறந்த வழிகாட்டி நூல் எனலாம்.

இந்நூலின் பல அரிய பொருள் நுட்பங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. எடுத்துக்காட்டாக உடம்புக்கு, மெய் என்ற பெயர் அமையக் காரணம் பற்றி (செய்யுள் 20) விளக்குமிடத்து, "பார்வைக்குப் புலப்படா உயிரைப் புலப்படுமாறு காட்டி நிற்பது உடம்பேயாகலின் அதற்கு மெய் என்னும் பெயர் போந்தது" எனக் குறிப்பிடும் பொருள் புதுமையும், நுட்பமுமுடையதாதல் காணலாம். மேலும், இதுவரையில் பலரும் கூறிவந்த கருத்தினை, 'பொய்யான உடம்பை, மெய் என்று கூறுதல் மங்கல வழக்கு' என்னும் கருத்தினை மறுத்திருத்தலும் காணலாம். "பொய்யுடம்பினை மெய்யென்பது நல்வழக்கென்பார் கூற்றுத் தள்ளற்பாலதாமன்றிக் கொள்ளற்பாலதாகாது" என்னும் தம் கொள்கையை வற்புறுத்தியுள்ளதும் காணலாம். இத்தகைய நுண்மாண் நுழைபுலக் கருத்துகள் பல ஆங்காங்கே உரையில் அமைந்துள்ளன.

மேற்குறித்த உரைப்பகுதியில், 'மங்கல வழக்கு' என்னும் மரபான சொற்றொடரைக் கையாளாமல் 'நல் வழக்கு' என்று குறிப்பிட்டிருத்தல் கருதத்தக்கது. 'மங்கலம்' என்பது வடசொல். வடமொழியின், சொற்கள் கலவாமலே 'சேந்தன் செந்தமிழ்' என்ற நூலும் அதன் உரையும் அமைய வேண்டும் என்று விரும்பியது அடிகளின் திருவுளம். அதற்கேற்பவே மங்கலம் என்ற வடசொல்லை நீக்கி, 'நல்' என்ற சொல்லை அமைத்து, 'நல் வழக்கு' என்று எழுதியுள்ளார். இந்நோக்கம், அடிகளின் முன்னுரையைக் கற்போருக்குத் தெளிவாகும். இவ்வாறு ஒரு நூலும் உரையும் அமைந்த அமைப்பு, இதுவரையில் தமிழ்மொழி வரலாற்றில் இல்லை எனலாம்.

நடுநிலைமை இன்றி, தவறானதொரு பற்றுக்கொண்டு, வடமொழியே உயர்ந்தற என்றும், தெய்வத் தன்மை உடையது என்றும், சிலர் மயங்கித் தடுமாறி எழுதியும் பேசியும் வந்த போக்கை உணர்ந்த அடிகள், அவர்களைத் திருத்தவும், அவர்களின் மயக்கத்திற் சிக்காமல் பிறரைக் காக்கவும் விழைந்து முன்வந்து செய்த புலமைத் தொண்டு இது. உண்மையை உணராமல், தாய்மொழியுணர்வும் இல்லாமல், தமிழ்மொழியைத் தாழ்த்தியும் புறக்கணித்தும் பேசிய அவர்களின் போக்கைத் திருத்த விரும்பினார். 'எல்லாம் மாயை' என்றும், எவ்வகையான வேறுபாடும் கடந்த பரம்பொருளே உண்மை என்றும் வாயளவில் கூறித் திரிந்தும், ஒரு மொழியை உயர்த்தியும் மற்றொரு மொழியைத் தாழ்த்தியும் பேச அவர்களுக்கு எவ்வாறு மனம் வந்ததோ? அந்தக் குறையைத் தீர்க்க முயன்ற அடிகள், "இச்சொற்களுள்ளும் இவற்றிற்கு வேறான வடசொற்களுள்ளும் ஒன்றேனும் புகாமலே சேந்தன் செந்தமிழ் எனுமிந்நூல் என்னாலமைக்கப்படுவதாயிற்று. இவ்வாறு பல சொற்கள் நீங்குழியுந் தமிழ்ச் செய்யுள் தன் மொழியானே நடைபெறூஉமெனும் ஆற்றலுமிதனால் வெளிப்பட்டது" என்று முன்னுரையில் எழுதியுள்ளமை காணலாம்.

யானை, திரு, தோள், நீர், காலம், தாய், நிலம், பூ, மாது, வாள், விண், ஓடம், பழம், பிட்டு, மீன், நேயம், ஐயன் முதலான பழைய தமிழ்ச் சொற்களையும் வடசொற்கள் என்று நிறுவுவதிலே சிலர் 'மாயை' கொண்டு மயங்கிய காலம் அது. அந்த மயக்கம் எல்லாம் இன்று மொழியியல் அறிஞர்கள் - வெளிநாட்டு அறிஞர்களான பேராசிரியர்கள் பாரோ, மெனோ முதலானவர்களின் அரிய ஆராய்ச்சியின் பயனாகத் தீர்ந்து வருகிறது. இந்த ஆராய்ச்சி வளராத காலத்திலேயே அடிகள் அத்தகைய தெளிவு பெற்று இவை முதலானவற்றைத் தமிழ்ச்சொற்களே எனக் காட்ட முயன்றுள்ளார் எனக் கூறுகிறார் தன் முன்னுரையில் டாக்டர் மு.வரதராசனார்.

**முடிவுரை**

பாம்பன் சுவாமிகளின் சேந்தன் செந்தமிழ்ப் படைப்பு, மறைமலையடிகள் தனித்தமிழைச் செயற்படுத்த முனைவதற்கும் பத்தாண்டுகட்கு முன்னரே நிகழ்ந்து தனித் தமிழியக்கத் தோற்றத்திற்கு முன்னோடியாக அமைந்தது எனலாம்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்,**
**சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்**
**பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்**

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

# இறையன்பு

## ஓராண்டு உரைகள்

4 தொகுதிகள்




1800 பக்கங்கள் ரூ 1750/–

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

கட்டுரை

# முஸ்லிம் – இந்து – பாகிஸ்தான் :


## நிகழ்வுகள், விளைவுகள் குறித்து

## அம்பேத்கரின் உரையாடல்கள்




இந்தியாவை ஆட்சி புரிந்த பிரித்தானிய அரசு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் தனது முழு அதிகாரத்தையும் செயல்படுத்தியது. பின்னர் 1909 முதல் அவர்களது ஆட்சி முறைகளில் அதிகாரப் பகிர்வை சிறிது சிறிதாக நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். 1905 இல் பிரித்தானிய அரசு நிகழ்த்திய வங்கப் பிரிவினை இந்தியாவில் செயல்பட்டு வந்த காங்கிரசுக் கட்சியில் உள்ளார்ந்த எழுச்சிகளை உருவாக்கத் தொடங்கியது. மிதவாத காங்கிரசு, தீவிரவாதக் காங்கிரசு எனும் பிரிவுகள் உருப்பெறத் தொடங்கின. உள்நாட்டில் உருவான எழுச்சிகளால் நெருக்கடிகளைச் சந்தித்த பிரித்தானிய அரசுக்கு, உலகளவிலும் முதல் உலகப் போர் போன்ற நிகழ்வுகளால் நெருக்கடிகள் உருவாயின. இந்தப் பின்புலத்தில் இந்தியாவில் ஆட்சி செய்யும் முறைகளில் படிப்படியான மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

1909 இல் மின்டோ-மார்லி சீர்திருத்தம் எனும் சட்டத்தைக் கொண்டுவந்தனர். 1919 இல் மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தச் சட்டம் வந்தது. இதன் தொடர்ச்சியாக இந்தியர்களுக்கும் ஆட்சி நடத்தும் அதிகாரம் வழங்க பிரித்தானிய அரசு முடிவு செய்தது. இதனால் ‘இரட்டையாட்சி முறை’ நடைமுறைக்கு வந்தது. மாகாணங்களில் ஜனநாயக வாக்குமுறை சார்ந்த சட்டமன்றங்கள் உருவாயின. வட்டார மொழிகளில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசிய இனமும் தங்களுக்கான உரிமைகளைக் குறித்து பேசத் தொடங்கின. மதம் சார்ந்து செயல்பட்ட தேசிய இனங்களும் தங்களது அடையாளங்கள், உரிமைகளை முன்னெடுக்கத் தொடங்கின. தமிழ்நாட்டில் உருவான தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம் முதலியவற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.



வீ.அரசு

பிரித்தானிய அரசு, சைமன் ஆணையம், வட்டமேசை மாநாடுகள் போன்ற நடவடிக்கைகளால் இந்தியர்களின் பல்வேறு சிக்கல்கள் குறித்த உரையாடல்களைத் தொடங்கி வைத்தது. இதில் முதன்மையாக மதம் சார்ந்த சிறுபான்மையோர், ஒடுக்கப்பட்ட தீண்டப்படாத மக்களின் வாழ்நிலை முதலிய பிற முன்னெடுக்கப்பட்டன. இந்தப் பின்புலத்தில்தான் முஸ்லிம் மக்கள் தங்களது உரிமைகளை முன்னெடுக்கத் தொடங்கினர்.

பல்வேறு தேசிய இனங்களையும் ஆட்சி அதிகாரத்தில் ஒருங்கிணைத்து இந்தியா என்ற பல்மொழி, பல்தேசிய இன, பல்பண்பாடு கொண்ட நாட்டை பிரித்தானியர்கள் கட்டமைத்திருந்தனர். இதில் பெரும்பான்மைச் சமூகமாக இந்துக்கள் உருவாகியிருந்தனர். பல்வேறு சமயக் குழுக்களையும் இணைத்து ‘இந்து’ எனப் பெயரிடும் மரபு பதினெட்டாம் நூற்றாண்டில் நிறைவேறியது. அவர்கள் பெரும்பான்மையினர். பிற மதக் குழுக்கள் சிறுபான்மையினர்.

இந்தியா என்று அழைக்கப்படும் இந்த நிலப்பகுதியில் பொ.ஆ. 700 முதல் முஸ்லிம் அரசர்களின் படையெடுப்பு நிகழ்ந்தது. பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டு அளவில் கணிசமான வட இந்தியப் பகுதி, முஸ்லிம் அரசர்களின் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டதாக உருவானது. இதன் தொடர்ச்சியாக, இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் முஸ்லிம் மக்கள் கணிசமான அளவில் இந்தியாவை வாழ்விடமாகக் கொண்டவர்களாக உருப்பெற்றனர். பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டு முதல், பார்ப்பன மதம் என்ற அடையாளத்தில், பின்னர் இந்து மதமாக உருவான அமைப்பை சங்கராச்சாரி கட்டமைத்தார். இதற்கு அரசர்களின் முழு ஆதரவு இருந்தது. ஆக, இந்திய மண்ணில் இந்து மதம், இஸ்லாம் மதம் எனும் இருமை நிலை உருவானது. கிறித்தவம், சீக்கியம் போன்ற வேறு சில மிகச் சிறுபான்மையான மதப்பிரிவுகளும் உருவாயின. இந்தப் பின்புலத்தில் முஸ்லிம் மக்கள் (முசல்மான்கள் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டனர்) பேசுபொருளாக இந்தியச் சமூகத்தில் உருவாயினர்.

மேற்குறித்தப் பின்புலத்தில் பிரித்தானியர்கள் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களிலும் முஸ்லிம் மக்களின் நிலைபாடு என்பது கவனத்துக்குரியதாக வடிவம் பெற்றது. 1919 இல் காங்கிரசுக் கட்சியில் முதன்மையான தலைவராக உருவான காந்தியாரின் செயல்களால், இந்தியா பிரித்தானியர்களின் ஆட்சி அதிகாரத்திலிருந்து விடுபடுதல் எனும் பேசுபொருள் புதிய பரிமாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு பிரித்தானியர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைமாற்றினால் இங்குள்ள ஒவ்வொரு மத மற்றும் தேசிய இனப் பிரிவுகளும் தங்களின் அரசியல் வகிபாகம் என்னவாக இருக்க வேண்டும் என்ற சிந்தனைக்குள் சென்றனர். இதில் 1940 ஆம் ஆண்டு லாகூரில் முஸ்லிம் லீக்கின் மாநாடு நடைபெற்றது. இதில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களைத் தனியாகப் பிரித்து 'பாகிஸ்தான்' என்ற நாடு உருவாக வேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்குறித்த சூழலில் அம்பேத்கர் முஸ்லிம்கள், இந்துக்கள் என்ற இருமை சார்ந்து இருந்த பேசுபொருளை அக்கறையுடன் உரையாடலுக்குட்படுத்தத் தொடங்கினார். அந்தப் பின்புலத்தில் பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை எனும் விரிவான நூலை எழுதினார். இந்தியாவில் வாழும் மக்கள் மீது அக்கறை கொண்ட மனிதரான அம்பேத்கர் இந்து-முஸ்லிம் என்பது பெரிய சிக்கலாக உருவாகும் எனும் களநிலையைப் புரிந்து கொண்டு, அதில் தனது நிலைபாட்டை முன்வைக்கும் ‘சமூக அறிவியல் அறிஞராகச்’ செயல்பட்டு, இந்த ஆவணத்தை உருவாக்கியுள்ளார். ஒடுக்கப்பட்ட தீண்டப்படாத மக்களின் சமூக விடுதலையை முதன்மையாகக் கொண்டு போராடிய அம்பேத்கர், இந்தச் சிக்கலில் அக்கறை செலுத்தாமல்கூட இருந்திருக்கலாம். ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலையில் எவ்வளவு தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களை எழுதினாரோ, அதில் கொஞ்சம் கூட குறையாமல் முஸ்லிம் மக்கள், இந்துக்கள் குறித்த ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார். இந்திய மக்கள் அனைவரின் விடுதலைக்கும் உழைத்த மனிதர் அம்பேத்கர் என்பதைப் புரிந்து கொள்ள, இந்த நூல் அடிப்படைத் தரவாக அமைந்துள்ளது. இந்நூல் பற்றிய அம்பேத்கரின் பதிவு பின்வருமாறு அமைகிறது.

> “இந்த நூல் இந்துக்களின் வெறுப்பையும் அதேபோன்று முஸ்லிம்களின் வெறுப்பையும் ஈட்டிக் கொண்டுள்ளது. ஆனால், இந்துக்களின் வெறுப்புக்கான காரணங்களும் முஸ்லிம்களின் வெறுப்புக்கான காரணங்களும் வெவ்வேறானவை; முற்றிலும் முரண்பட்டவை. என் நூலுக்குக் கிட்டியுள்ள எதிர்ப்புக்காக நான் வருந்தவில்லை. இந்த நூலை இந்துக்களும் மறுதலிக்கின்றார்கள். முஸ்லிம்களும் ஏற்க மறுக்கிறார்கள் என்றால் அது எதைக் காட்டுகிறது? அச்சமின்றி, அசைக்க முடியாதபடி உண்மை விவரங்களை எடுத்துரைக்கும் இந்நூல் பக்கச்சார்பற்று, எந்த ஒரு தரப்பையும் ஒருசார்பாக முட்டுக்கொடுத்து ஆதரிக்காதது என்பதையே உள்ளங்கை நெல்லிக்கனி போல் பறைசாற்றுகிறது.” (தொ. 24, பக். 40)

❑❑❑

அம்பேத்கரின் உரையாடலைச் சார்ந்து இந்நூலில் பேசப்படும் செய்திகளை, எவ்வகையில்

உரையாடலுக்குட்படுத்தலாம் என்பதற்கான வரையறைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்வோம்.

- பாகிஸ்தான் என்ற தனிநாடு தொடர்பான கோரிக்கையை முஸ்லிம் மக்கள் முன்வைப்பதை எப்படிப் பார்ப்பது? மொழி, பண்பாடு, வாழ்விடம் சார்ந்து ஒருபடித்தான தன்மையைக் கொண்டுள்ள மக்கள், தங்களுக்கான தாயகமாக, ஒரு தேசத்தை உருவாக்கிக் கொள்ள விரும்புவதை எந்த முறையில் புரிந்து கொள்ள வேண்டும். மேற்குறித்தக் கண்ணோட்டத்தில் அம்பேத்கர் இந்நூலின் முன்பகுதியில் பேசுகிறார். அதை நாம் புரிந்து கொள்ளும் தேவையுண்டு.
- இந்தியாவில் இணைந்து வாழும் ஒரு தேசிய இனம், பிரிந்து தனியே தனி நாடாக உருவாகும்போது, இந்தியாவின் ஒருமைப்பாடு, இந்தியாவின் பாதுகாப்பு முதலிய பிற சிக்கலுக்குட்படுத்தப்படும் சூழல் உருவாகுமா? அப்படி உருவாவதைத் தவிர்க்க இயலுமா? முதலியவை குறித்தும் அம்பேத்கர் பேசுகிறார். இதன் மூலம் வகுப்புப் பிரிவினை கூர்மையடைந்து சீரழிவு உருவாகும் எனில், அதனை எப்படி எதிர்கொள்வது என்ற உரையாடலையும் முன்வைக்கிறார்.
- பாகிஸ்தான் உருவாகவில்லை எனில் அந்த இடத்தில் இந்துக்களே ஆதிக்கம் செலுத்துவது மாற்றாக அமையலாமா? அல்லது முஸ்லிம் மக்கள் அதிகாரம் உடையவர்களாக இருக்க முடியுமா? இப்படியான தேசிய இனச் சிக்கல்கள் உலகின் பல இடங்களில் நிகழ்ந்துள்ளன. அவற்றிலிருந்து நாம் பெறவேண்டிய பாடம் எத்தகையவை என்பது குறித்தும் அம்பேத்கர் பேசுகிறார்.
- முஸ்லிம் மக்களின் வாழ்நிலை எவ்வாறு உள்ளது? மூட நம்பிக்கைக்கு அந்த மக்கள் ஆட்பட்டிருப்பது ஏன்? முஸ்லிம் மக்களிடம், சமூகச் சீர்திருத்த மனநிலை எவ்வாறு உள்ளது? அதனால், அந்த மக்களிடம் காணப்படும் சமூகத் தீமைகள் எவ்வாறு செயல்படுகின்றன? அதை நீக்குவதற்கான வழிமுறைகள் எவையெவை என்பதையும் அம்பேத்கர் முன்வைக்கிறார்.
- பாகிஸ்தான் என்ற ஒரு நாடு உருவாவதற்கான புவியியல் தகுதி, இந்து-முஸ்லிம் மக்களின் முரண்பாட்டுத் தன்மைகள் பாகிஸ்தானை எப்படி உருவாக்குகின்றன; இந்துக்களின் ஆட்சி முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பாக அமைய முடியுமா முதலிய பிற குறித்தும் அம்பேத்கர் பேசுகிறார்.

❑❑❑

தேசிய இனம், தேசிய இனங்களுக்குள் உள்ள முரண்பாடுகள், தேசிய இன ஆதிக்கம், முஸ்லிம் மக்களின் வாழ்நிலை, தவிர்க்க இயலாமல் பாகிஸ்தான் உருவாகப் போவதன் பல்வேறு விளைவுகள் முதலியவற்றை அம்பேத்கர் விரிவான உரையாடலுக்குட்படுத்தியுள்ளார்.

அம்பேத்கர் தாம் உரையாடலுக்குட்படுத்தும் அனைத்து விவரணங்கள் தொடர்பான விரிவானத் தரவுகளை பின்னிணைப்பாக இணைத்துள்ளார். ஒரு சிக்கல் குறித்து ஆய்வு மேற்கொள்ளும்போது அதற்கானத் தரவுகளை முன்வைப்பதன் தேவையை அம்பேத்கர் நிறைவுசெய்துள்ளார். மிகவும் நுண்ணியதாக ஆய்வு செய்யும் சமூகவியல் அறிஞராக அம்பேத்கர் செயல்பட்டிருப்பதை இந்த இணைப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

❑❑❑

"சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் பலனை முஸ்லிம்களுக்கு மறுக்கமுடியாது. ஏனென்றால், இதே சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைத்தான் இந்து தேசியவாதிகள் தங்களுக்கு ஆதாரபலமாகக் கொண்டிருக்கிறார்கள். மிகச் சின்னஞ்சிறு ஐரோப்பிய தேசங்களுக்கு எல்லாம்கூட உலக மனச்சாட்சி இந்த உரிமையை வழங்கியிருக்கும்போது, இந்தியாவுக்கு மட்டும் பிரித்தானியர் எவ்வாறு இந்த உரிமையை மறுக்கமுடியும் என்று கேட்கிறார்கள். அப்படியிருக்கும்போது, இந்த உரிமையை ஏனைய சிறுபான்மையினருக்கு மறுக்க வேண்டும் என்று அவர்கள் பிரித்தானியரை எவ்வாறு கேட்க முடியும்.

பாகிஸ்தானைக் கைவிடும்படி முஸ்லிம்களைப் பிரித்தானிய அரசு கட்டாயப்படுத்த வேண்டும் என்று இந்திய தேசியவாதிகள் எதிர்பார்க்கின்றனர். ஆனால், இங்கு அவர்கள் ஒரு பொருட்கூறை மறந்துவிடுகின்றனர்; அதாவது, ஆதிக்கவெறிகொண்ட ஓர் அந்நிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு தேசியத்திற்குள்ள உரிமையும் ஆதிக்க மனப்பான்மை கொண்ட பெரும்பான்மையினரின் தேசியத்திலிருந்து சுதந்திரம் பெறுவதற்கு சிறுபான்மையினருக்குள்ள உரிமையும் இரண்டு வெவ்வேறான பொருட்கூறுகளல்ல என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர்; முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட உரிமை, இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உரிமையை விடவும் எவ்வகையிலும் மிகவும் புனிதமானதல்ல என்பதையும் அவர்கள் மறந்துவிடுகின்றனர். இவை இரண்டுமே சுதந்திரப் போராட்டத்தின் இரு கூறுகளாகும்.

இவ்வகையில் இவை இரண்டும் அவற்றின் தார்மீக உட்பொருளில் சமத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆதிக்க

வெறிகொண்ட ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறும் பொருட்டு போராடிவரும் தேசியவாதி, ஆதிக்க மனநிலை கொண்ட பெரும்பான்மையினரது தேசியத்தின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு சிறுபான்மையினருக்குள்ள உரிமையைக் குலைப்பதற்குப் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் உதவியை நாடமுடியாது.

எனவே, இந்தச் சிக்கலுக்கு முஸ்லிம்களும் இந்துக்களும்தான் தங்களுக்குள் தீர்வு காண வேண்டும். அவர்களுக்காகப் பிரித்தானியர் இச்சிக்கலுக்கு முடிவு காணமுடியாது. இது கவனத்திற் கொள்ளவேண்டிய முதன்மையானச் செய்தி'' *(தொ. 24, பக். 54-55)*.

மேற்குறித்த பகுதியில் முஸ்லிம் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை, சிறுபான்மை மக்களைப் பெரும்பான்மையினர் அணுக வேண்டிய முறை, பிரித்தானியர்களிடம் சுதந்திரத்திற்காகப் போராடும் பெரும்பான்மையினரான இந்துக்கள் கைக்கொள்ள வேண்டிய அறம் ஆகியவை பற்றி அம்பேத்கர் பேசுகிறார். பிரித்தானிய ஆட்சியின்கீழ் இருந்தால் இவ்விரு இனங்களிடையில் உருவாகும் சிக்கலை, ஏகாதிபத்தியம் சரிசெய்ய வாய்ப்பில்லாத சூழலில் இந்த இரு தேசிய இனங்களே தமக்குள் சரி செய்து கொள்ள வேண்டும் என்று அம்பேத்கர் கூறுவதை உணர முடிகிறது. இது தொடர்பாக, அவர் முன்வைக்கும் பல்வேறு கருத்துகளைத் தொகுக்கலாம்.

- இந்துக்கள் வாழும் மாகாணங்களில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. இவ்வகையான முரண்பாடுகளில் ஒன்றாகவே இந்து-முஸ்லிம் முரண்பாட்டைக் கருதுதல் அவசியம். இந்துக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதாகவும் முஸ்லிம் மக்களிடம்தான் முரண்பாடாகச் செயல்படுகின்றனர் என்பதும் உண்மையல்ல. முரண்பாடுகள் பலதரப்பிலும் செயல்படுவதை அம்பேத்கர் விரிவாகப் பதிவுசெய்கிறார்.
- பிரித்தானியர்கள் ஆட்சிக்குப் பின் இந்தியாவிற்கென புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படுதல் நிகழும். அப்போது முஸ்லிம் மக்களுக்கான தனி தேசம் என்று உருவாகும் சூழல் நேர்ந்தால், இந்தியா பல்வேறு முரண்களை எதிர்கொள்ள நேரிடும். எனவே, பிரித்தானிய ஆட்சிக் காலத்திலேயே பாகிஸ்தான் உருவாவதற்கான அடிப்படை அரசியல் அமைப்புகளைத் தீர்மானிப்பது நல்லது.
- முஸ்லிம் மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் தனித்த நிருவாக அமைப்புகளை உருவாக்க விரும்புகின்றனர். அதுவே அவர்கள் தனித்தேசமாக உருப்பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும். காலப் போக்கில் முஸ்லிம்களுக்கான தனி அரசு உருப்பெறுவதை முஸ்லிம் மக்கள் விரும்புகின்றனர்.
- இந்தியாவில் முஸ்லிம் மக்கள் வாழும் மாகாணங்களை மறுசீரமைப்பு செய்து அப்பகுதிகளை முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் மாகாணங்களாக அறிவிக்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.
- இந்தியா என்பது பல்வேறு மொழிபேசும் மாகாணங்களாக உள்ளது. இந்த உண்மையை காங்கிரஸ் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்த எதார்த்தத்தைக் காங்கிரசு புரிந்துகொள்ளவில்லை. இந்தப் பின்புலத்தில் முஸ்லிம் மக்களும் தங்களுக்கான மொழிவாரி மாகாணம் எனும் அடையாளத்தை முன்னிறுத்துவதை அம்பேத்கர் கவனப்படுத்துகிறார். இதன் மூலம் பாகிஸ்தான் பிரிவினையை முஸ்லிம் மக்கள் முன்னிலைப்படுத்துகின்றனர் என்பதை அம்பேத்கர் பதிவு செய்கிறார்.
- முஸ்லிம் தேசம் உருப்பெறுவதற்கு முஸ்லிம் மக்கள் உரையாடல்களை முன்னெடுக்கின்றனர். இதற்கான நியாயப்பாடுகளை அம்பேத்கர் பின்வருமாறு வரையறை செய்கிறார்.

“தேசியத்தன்மை என்பது ஒரு சமூக உணர்வு. அது ஒத்தத் தன்மையை, இணக்கத்தை வெளிப்படுத்தும் கூட்டு உணர்ச்சிப் பாங்காகும்; இத்தகைய மெய்ப்பாட்டு உணர்வுக்கு ஆட்பட்டவர்கள் தங்களை உற்றார் உறவினர்களாகப் பாவிக்கின்றனர்.

இந்தத் தேசிய உணர்வை இருபுறமும் கூருள்ள ஒரு வாள் எனலாம். இது ஒரு பக்கம் தனது உற்றார் உறவினர்களிடம் தோழமை பாராட்டுகிறது; இன்னொரு பக்கம் உற்றார் உறவினர்கள் அல்லாதவர்களிடம் தோழமை கொள்வதில்லை. இதனை ஒரு வகையான ‘தனி உணர்வு நிலை’ எனலாம். இத்தகைய உணர்வுநிலை உள்ளவர்கள் அனைவரையும் இது ஒருபுறம் மிக வலுவாக ஒன்றிணைக்கிறது; பொருளாதார முரண்பாடுகளாலும் சமூகப் படிநிலைகளாலும் எழக்கூடிய வேறுபாடுகள் அனைத்தையும் எதிர்கொள்ள இது துணைபுரிகிறது. இன்னொருபுறம், இத்தகைய உணர்வுநிலை இல்லாதவர்களிடமிருந்து இவர்களைப் பிரிக்கிறது. வேறு எந்தக் குழுவுடனும் இணைந்திருக்காத விருப்பத்தையே இது குறிக்கிறது. தேசியத்தன்மை மற்றும் தேசிய உணர்வு என்பதன் கருப்பொருள் இதுதான்.

இப்போது முஸ்லிம்களின் கோரிக்கையை இந்த உரைகல்லில் உரசிப் பார்ப்போம். இந்தியாவின் முஸ்லிம்கள் தனித்த ஒரு பிரிவினரா, இல்லையா?

அவர்களுக்கென ஒரு தனி உணர்வுநிலை இருப்பது உண்மையா, இல்லையா? ஒவ்வொரு முஸ்லிமும் தனது சொந்தக் குழுவினருடன் இணைந்திருக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டிருப்பது உண்மையா, இல்லையா?

இந்தக் கேள்விகளுக்கான விடை 'ஆம்' என்பதாக இருக்குமானால், அப்போது இந்தக் கேள்விக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; முஸ்லிம்கள் ஒரு தேசம் என்ற வாதத்தை எத்தகைய மறுப்புமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.'' *(தொ. 24, ப. 86-87)*

இந்த உரையாடல் மூலம், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே தேசமாக வாழ இயலுமா என்பதை கேள்விக்குட்படுத்துகிறார் அம்பேத்கர்.

- இனம், மொழி, தேசம் சார்ந்து மக்கள் கூட்டம் தங்களுக்குள் உருவாக்கிக் கொள்ளும் பல்வேறு உறவுகளை முன்னெடுக்கும் அம்பேத்கர், அவ்வகையான நிலைகளும் நிலைத்தவை அல்ல; அதற்குள்ளும் முரண்பாடுகள் உருப்பெறுகின்றன. இனம், மொழி, தேசம் என்பதற்கான வரையறைகள் முழுமையாக நடைமுறையில் இல்லை என்றும் அம்பேத்கர் பேசுகிறார். இவ்வகையில் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் பேசுவதாக அம்பேத்கரின் உரையாடல் அமைகிறது.
- காங்கிரசு அமைப்பிற்கும் முஸ்லிம் மக்களுக்குமான தொடர்புகள் குறித்தும் அம்பேத்கர் பேசுகிறார். காங்கிரசின் கருத்துநிலைகளிலிருந்து முஸ்லிம் மக்கள் முரண்படும் புள்ளிகள் குறித்தும் விரிவாகப் பேசுகிறார்.
- பிரித்தானிய அரசோடு, காங்கிரஸ், முஸ்லிம் மக்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகளில் உள்ள முரண்பாடுகளையும் அம்பேத்கர் முன்வைக்கிறார்.

இந்தியாவில் வாழும் இந்துக்களும் முஸ்லிம்களும் இனம், மொழி, தேசம் எனும் கருத்தமைவுகளில் எவ்வாறெல்லாம் முரண்படுகின்றனர் என்பதை விரிவாகப் பேசும் அம்பேத்கர், அதன் மூலம் பாகிஸ்தான் என்ற நாடு உருப்பெறுவது தவிர்க்க இயலாதது என்ற கருத்துருவை முன்வைக்கிறார்; ஆனால், இவ்வகையான இனம், மொழி, தேசம் எனும் கருத்தமைவுகளில் உருப்பெறும் நாடுகளுக்குள்ளும் முரண்பாடுகள் உலக அளவில் உருப்பெற்றுள்ளன என்பதையும் பேசுகிறார். இதன்மூலம் முஸ்லிம் தேசம் உருப்பெறுதலையும் அது உருப்பெறுவதால் ஏற்படும் சிக்கலையும் தராசின் இரு தட்டுக்களாக உரையாடலுக்குட்படுத்துவதைக் காண்கிறோம். ஆனால், தனி தேசம் உருப்பெறுவது தவிர்க்க இயலாது எனும் கருத்துருவைச் சார்ந்த தராசுத் தட்டு கீழே இறங்குவதை இந்த உரையாடல் மூலம் நம்மால் உணர முடிகிறது. அம்பேத்கரின் இவ்வகையான உரையாடல் ஒரு நிகழ்வின் பல பரிமாணங்களையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

❑❑❑

பாகிஸ்தான் என்ற நாடு உருவாவதன் மூலம் இந்தியா என்ற நாட்டுக்கு உருவாகும் பல்வேறு சிக்கல்கள் குறித்து அம்பேத்கர் பேசுகிறார். இந்திய தேசத்தின் ஒருமைப்பாடு உடையும்; இந்திய தேசப் பாதுகாப்புக்குச் சிக்கல் உருவாகும்; வகுப்புவாரி முரண்பாடுகள் மேலும் கூர்மைப்படும் என்னும் கருத்துகளை அம்பேத்கர் உரையாடலுக்குட்படுத்துகிறார். தராசின் இரு தட்டுகளில் முஸ்லிம்கள், இந்துக்கள் என்ற கருத்துநிலைகள் உள்ளன. தராசுத் தட்டின் ஒரு பக்கம் ஒரு சில நிலைகளில் கீழே போகிறது. இன்னொரு பக்கம் மேலே போகிறது. இதற்கு நேர் மாறாகவும் சில வேளைகளில் தட்டுகள் மேல் கீழ் போகின்றன. இந்தத் தராசை நிறுக்கும் நீதிபதியாகவும் தட்டுகளில் உள்ளவை குறித்து வழக்காடும் வழக்கறிஞராகவும் அம்பேத்கர் செயல்படுகிறார். இந்து – முஸ்லிம் – பாகிஸ்தான் என்ற கருத்துநிலைகளின் பல பரிமாணங்களையும் சார்பற்றுப் பேசும் வழக்கறிஞராக அம்பேத்கர் இந்த உரையாடலில் பங்கேற்றுள்ளார்.

பொ.ஆ. 700 முதல் பொ.ஆ. 1600 வரையிலான காலங்களில் இன்று இந்தியா என்று கட்டப்பட்டிருக்கும் நிலப்பகுதியில் இஸ்லாமிய அரசர்கள் படையெடுப்பு தொடர்ந்து நிகழ்ந்தது. இது குறித்த மிக விரிவான பதிவுகளை அம்பேத்கர் செய்துள்ளார். கீழ்க்காணும் சொற்கள், இத்தன்மை குறித்த அம்பேத்கரின் மனநிலையைப் புரிந்து கொள்ள உதவும்.

> “படையெடுப்பாளர்கள் கடைப்பிடித்த ஆட்சிமுறைகள் பல பின்விளைவுகளை இங்கு விட்டுச் சென்றுள்ளன. இவ்விளைவுகளில் ஒன்றே இந்து, முஸ்லிம்களுக்கிடையே நிலவும் கசப்புணர்வு. ஒரு நூற்றாண்டுகாலம் இணைந்து உருவான அரசியல் வாழ்க்கைக்குப் பின்னரும் தணியவோ மறக்கவோ இயலாத அளவுக்கு இக்கசப்புணர்வு ஆழமாக வேரூன்றியுள்ளது. படையெடுப்புகளின்போதெல்லாம் நடைபெற்ற கோயில்களை இடித்தல், கட்டாய மதமாற்றம், சொத்துகளைச் சூறையாடி மக்களைக் கொன்று குவித்தல், ஆண் பெண் குழந்தைகளை அடிமைப்படுத்திப் பல வகையில் இழிவுசெய்தல் போன்ற நிகழ்ச்சிகள் தலைமுறை தலைமுறையாய் நினைவில் நிற்பதன் வாயிலாகச் செருக்கடைந்துள்ள முஸ்லிம்களுக்கும் அவமான உணர்வில் மூழ்கிய இந்துக்களுக்குமிடையே நல்லுணர்வு நிலவ வாய்ப்பேதும் இல்லையன்றோ?'' *(தொ 24. ப 141)*

இந்தப் பின்புலத்தில் பாகிஸ்தான் உருவாக்கத்தின் மூலம், எல்லைச் சிக்கல்கள், ஆதார வளங்கள்

குறித்தச் சிக்கல்கள், போருக்காகப் படைகளைக் கட்டமைப்பதில் உருவாகும் நடைமுறைச் சிக்கல்கள் எனப் பல பரிமாணங்களில் பேசுகிறார். இதில் வகுப்பு நல்லிணக்கம் என்பது பெரிய அளவிலான முரணாக உருப்பெற வாய்ப்புண்டு என்று அம்பேத்கர் கருதுகிறார். பாகிஸ்தான் முஸ்லிம், இந்துஸ்தான் முஸ்லிம் என இரு பிரிவுகள் உருவாவது குறித்து இரஹமத் அலி என்பவரின் கருத்தை அம்பேத்கர் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

“இந்துஸ்தானப் பகுதியில் வாழும் நாலரைக் கோடி முஸ்லிம்களின் நிலைமையை பாகிஸ்தான் பிரிவினை எவ்வாறு பாதிக்கும்?

உண்மையைக் கூறப்போனால் அவர்களைப் பற்றிய சிந்தனையே, கிடுக்கிப்பிடி போன்று என்னை நெருக்குகிறது. அவர்களும் நமது குருதி, சதை மட்டுமன்றி உயிரோடு உயிராகவும் ஒன்றியவர்களே. நாம் அவர்களை மறந்துவிடுவதென்பதோ நம்மை அவர்கள் மறந்து விடுவதென்பதோ ஒருக்காலும் நடவாது. அவர்களது இன்றைய நிலையும் வருங்காலப் பாதுகாப்பும் இன்று மட்டுமன்றி என்றைக்கும் எமக்கு முக்கியமானவையே. இப்போதைய நிலையில் பாகிஸ்தான் பிரிவினையால், அவர்களது நலன்கள் பாதிக்கப்பட மாட்டா. அவர்களது மக்கள்தொகையின் அடிப்படையில் (நான்கு இந்துக்களுக்கு ஒரு முஸ்லிம்), இப்போதிருப்பதைப் போன்றே சட்டமன்றங்களிலும் ஆட்சிப் பொறுப்புகளிலும் அவர்களது பிரதிநிதிகள் இடம்பெறுவர். வருங்காலத்தில் அவர்களது நலன்களுக்கு ஒரேயொரு வகையில்தான் நாம் உறுதிகூற முடியும்; அதாவது, பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினரின் உரிமைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க மனதார உறுதியளித்துக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்துஸ்தானின் முஸ்லிம்களுக்கும் அதேபோன்ற உரிமைகளைப் பெற்றுத் தருவதுதான்.

ஆனால், எங்கள் நலன்களை எது உறுதியாகக் காக்குமெனில், நாங்கள் பாகிஸ்தான் நாட்டை உருவாக்க விரும்புவது எங்கள் மக்களின் நல்வாழ்வை நிலைநாட்டுவதற்காகவே என்பதை இந்துக்களும் அறிந்துள்ளனர் என்பதே. இதுவே எங்களது தேசிய அரண் என்றால், அவர்களுக்கும் இதுவே அறநெறி-நங்கூரம் எனலாம். இந்த நங்கூரம் உறுதியாகப் பற்றியிருக்கும்வரை, எல்லா நலன்களையும் நாம் எய்துவோம்; அது தளர நேர்ந்தால் அனைத்தையும் இழக்க நேரிடும்.” *(தொ. 24, பக் 215-216)*

அம்பேத்கர் உரையாடலுக்குட்படுத்தியிருக்கும் இந்நிகழ்வுகள் 1947-க்குப் பின் நிகழ்ந்த வரலாற்றைப் பார்க்கும்போது, பின்னர் வரும் நிகழ்வுகளை அம்பேத்கர் முன்னரே ஊகித்து அது குறித்த பதிவுகளைச் செய்திருப்பதைக் காண முடிகிறது.

❑❑❑

பாகிஸ்தான் எனும் நாடு உருவாவதன் பல்வேறு பரிமாணங்கள் குறித்துப் பேசிய அம்பேத்கர், அவ்வாறு நிகழாது போனால், எத்தகைய நிகழ்வுகள் எதார்த்தத்தில் அரங்கேற வாய்ப்பளிக்கும் என்பது குறித்தும் பேசுகிறார். இதில் இந்துக்களே பெரும்பான்மையினராக ஆட்சி செலுத்தும் வாய்ப்பு உருவாகலாம். அல்லது முஸ்லிம்களே ஆட்சி செய்யும் வாய்ப்பும் வரலாம். இவ்வகை நிலைகளில் ஏதேனும் நிகழ்ந்தால், என்னென்ன விளைவுகள் நிகழும் என்பதையும் முன்வைக்கிறார். உலக அளவில் நடந்த இத்தகைய தன்மைகளை எடுத்துக் காட்டிப் பேசுவதையும் காண்கிறோம்.

இந்துக்களின் கருத்தைப் பேசும் லாலா ஹர்தயாள் கருத்தையும் முஸ்லிம்களின் கருத்தை முன்னிலைப்படுத்தும் மௌலானா முகமது அலி அவர்களின் கருத்தையும் மேற்கோளாக அம்பேத்கர் தருகிறார். இவ்விரு மதங்களின் அமைப்பும் தம்முள் இணைவதற்கான வாய்ப்பைப் பெரிய அளவில் தடுக்கும் சக்தியாக, இந்துக்களின் சாதி அமைப்பு இருப்பதை அம்பேத்கர் தெளிவுபடுத்துகிறார். அப்பகுதி பின்வருமாறு:

“இந்துச் சமூகம் தனது சாதி அமைப்பை உருவாக்கிய காலத்திற்குப் பின்னர், பரவும் மதமாக இருந்த இந்து மதம், பரவாத மதமாகிவிட்டது. ஏனெனில், சாதி என்பது மத மாற்றத்திற்கு ஒவ்வாததாகும். வேற்று மதத்தவரைத் தனது மதத்திற்கு மாறச்செய்வதற்கு ஒரு சமுதாயம் தனது மதக் கோட்பாடுகளை மட்டுமே வழங்குவது போதாது. வேற்று மதத்தவரை இந்து மதத்திற்கு மாறச் செய்வதற்கு ஒரு முனைப்பான மதப் பரப்பாளர் முயன்றாரேயானால், அவரை யாரும் தடுக்கமுடியாது. ஆனால், அவ்வாறு ஒரு வேற்று மதத்தவரை இந்து மதத்தவராக மாற்றுவதற்கு முன் அவர் எதிர்கொள்ளும் கேள்வி இதுதான்: மதம் மாறுபவரின் சாதி என்னவாக இருக்கும்? இந்துக்களின் நம்பிக்கையின்படி, ஒருவர் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமெனில், அந்த நபர் அந்தச் சாதியில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். மதம் மாறுபவர் அந்தச் சாதியில் பிறந்தவரல்ல. ஆகவே, அவர் எந்தச் சாதியையும் சாராதவராகிறார். இதுவும்கூட ஒரு முக்கிய சிக்கலாகும்.

அரசியல் விலங்காகவோ மத விலங்காகவோ இருப்பதைவிட கூடுதலாக மனிதன் ஒரு சமூக விலங்காகத்தான் இருக்கிறான். அவன் மதத்தைச் சாராதவனாக இருக்கலாம்; அவனுக்கு மதம் தேவையற்றதாகவும் இருக்கலாம்: அவனுக்கு

அரசியல் இல்லாமல் இருக்கலாம்; அது அவனுக்கு தேவையற்றதாகவும் இருக்கலாம். ஆனால், அவன் ஒரு சமூகத்தைச் சார்ந்தவனாகத்தான் இருக்க முடியும்; சமூகம் இல்லாமல் அவனால் இருக்கமுடியாது. ஓர் இந்துவைப் பொறுத்தவரை சாதியில்லாமல் இருப்பது என்பது சமூகம் இல்லாமல் இருப்பதைப் போன்றதாகும். மதம் மாறுபவருக்கு சமூகமே இல்லாதிருக்கும்போது, எப்படி மதமாற்றம் நிகழும்? இந்துச் சமூகம் தனிப்பட்ட உரிமைகளையும் தானாகவே வளரும் சாதி அமைப்புகளையும் கொண்டு சிதறிக் கிடக்கும்வரை இந்து மதம் பரவும் மதமாக மாறமுடியாது.'' (தொ 25, பக் 225-226).

இவ்வகையில் இந்துக்களிடம் உள்ள பல்வேறு கூறுகள், இந்து-முஸ்லிம் இணைவு அல்லது மதம் மாறுதல் என்பதற்கான வாய்ப்புகள் இல்லாதிருப்பதை விரிவான உரையாடலுக்குட்படுத்துகிறார். இந்தப் பின்புலத்தில் இந்து மகாசபையின் திட்டங்களைப் பேசும் வி.டி. சாவர்க்கரின் பல்வேறு கருத்துகளை விரிவான மேற்கோள்களாக அம்பேத்கர் தருகிறார். இந்து மகாசபை மற்றும் சாவர்க்கர் பதிவுகள் என்பவை இந்துக்களை முதன்மைப்படுத்தி முஸ்லிம் மக்களை இரண்டாம்தர குடிமக்களாகவே பேசுவதையும் இந்துக்களின் அதிகாரத்தின் கீழ் முஸ்லிம் மக்கள் வாழ வேண்டும் என்பதை முன்னிருத்துவதையும் அம்பேத்கர் விரிவாகப் பதிவு செய்துள்ளார். 1939 டிசம்பரில் நடைபெற்ற இந்து மகாசபையின் கல்கத்தா கூட்டத் தொடரில், சாவர்க்கர் ஆற்றிய உரையின் விரிவான பதிவை அம்பேத்கர் தந்துள்ளார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

> ''போலிஷ் மக்களின் நாடு போலந்து என்றும் கிரேக்கர்களின் நாடு கிரேக்கம் என்றும்தான் தொடர்ந்து அழைக்கப்படுகிறது. அங்குள்ள முஸ்லிம்கள், அந்நாட்டுப் பெயர்களை மாற்றியமைக்க முயன்றதில்லை, அவ்வாறு செய்யவும் முடியாது. ஆனால், அவர்கள் தேவைப்படும்போது தங்களை போலிஷ் முஸ்லிம்கள் அல்லது கிரேக்க முஸ்லிம்கள் அல்லது சீன முஸ்லிம்கள் என்று வேறுபடுத்திக் காட்டுவதில் மனநிறைவடைந்துகொள்கின்றனர். அதேபோல, நமது நாட்டு முஸ்லிம்களும்கூட அவர்கள் விரும்பும்போது தங்களது மதம் அல்லது பண்பாட்டுத் தனித்தன்மையை விட்டுக்கொடுக்காது, 'இந்துஸ்தானின் முஸ்லிம்கள்' என்று வேறுபடுத்திக் கூறிக்கொள்ளலாம். ஆனால், இந்தியாவில் தாங்களாகவே காலடி எடுத்துவைத்தது முதல், முஸ்லிம்கள் தங்களை 'இந்துஸ்தானிகள்' என்று ஒருபோதும் கூறிக்கொண்டதில்லை.
>
> ஆனால், இவையெல்லாவற்றையும் மீறி நமது நாட்டு மக்களிடையே உள்ள சில மூர்க்கத்தனமான முஸ்லிம் பிரிவினர், நமது நாட்டின் இப்பெயரையே கூட எதிர்க்கின்றனர் எனும்போது, நமது சொந்த உள்ளுணர்வையே நாம் ஏன் புறக்கணிக்க வேண்டும். ரிக் வேத காலத்தில் வாழ்ந்த சிந்துக்கள் முதல் இன்றைய நமது தலைமுறையினரான இந்துக்கள் வரை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'இந்துஸ்தான்' என்ற நமது தாய்நாட்டுப் பெயரின் தொடர்ச்சியைத் துண்டாடவோ அதற்குத் துரோகமிழைக்கவோ இந்துக்களாகிய நாம் ஒருபோதும் உடன்படக் கூடாது. ஜெர்மானியர்களுடைய நாடு ஜெர்மனி, ஆங்கிலேயர்களுடைய நாடு இங்கிலாந்து, துருக்கியர்களின் நாடு துருக்கி, ஆப்கன் மக்களின் நாடு ஆப்கானிஸ்தான் என்பது போல் புவியியல் வரைபடத்தில், இந்துக்களின் நாடு 'இந்துஸ்தான்' என்பதை காலத்தால் அழியாதவாறு பதித்திட வேண்டும்.'' (தொ. 25, பக். 24-25)

மேற்குறித்த உரையாடல் சார்ந்தும் மேலும் நூலில் அம்பேத்கர் கொடுத்துள்ள சாவர்க்கரின் விரிவான பதிவுகள் அடிப்படையிலும் இந்துப் பெரும்பான்மை சமூகத்தில் முஸ்லிம் சிறுபான்மை சமூகம் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்புகள் உருவாகுமா? என்பதை அம்பேத்கர் உரையாடலுக்குட்படுத்தியுள்ளார். இன்றைய நிகழ்வுகளைக் கணக்கில் கொண்டு பார்க்கும்போது, அம்பேத்கரின் நுண்ணிய அரசியல் புரிதலை அறிந்து கொள்ள முடிகிறது. இந்திய சமூகம் குறித்த ஒப்பற்ற சமூக அறிவியலாளராக அம்பேத்கர் செயல்பட்டிருக்கிறார் என்பதற்கு இந்நூல் அரிய எடுத்துக்காட்டாக இருக்கிறது.

காந்தியார், முஸ்லிம் மக்கள் குறித்தும் பாகிஸ்தான் குறித்தும் மேற்கொண்ட நிலைபாடுகளையும் அம்பேத்கர் ஆய்வுக்குட்படுத்தியுள்ளார். 'கிலாபத் இயக்கம்', 'மாப்ளா கலகம்' முதலியவற்றை காந்தி எவ்வாறு மதிப்பீடு செய்தார் என்பதையும் அம்பேத்கரின் பதிவில் காண்கிறோம். இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 1924 ஆம் ஆண்டு 21 நாட்கள் காந்தி உண்ணாநோன்பு இருந்தார். காந்தியாரின் செயல்பாடுகளை அம்பேத்கர் எவ்வாறு மதிப்பிடுகிறார் என்பதை கீழ்வரும் பகுதி மூலம் அறியமுடிகிறது.

> ''இந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் திரு காந்தி வகித்த பங்கைப் பற்றிய இந்தச் சிறு வரலாற்றுக் குறிப்பை, வகுப்புத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் திரு காந்தியின் அணுகுமுறையை மேற்கோள் காட்டி முடித்துக்கொள்ளலாம். முஸ்லிம்களுக்கு அவர்களே நிரப்பிக்கொள்ளக்கூடிய வெற்றுக் காசோலையை வழங்கினார்; அதாவது, அவர்கள்

விரும்பிய சலுகைகளை எல்லாம் வழங்கினார். அது தட்டிக்கழிக்கும் செயல் என்று முஸ்லிம்கள் கருதிய காரணத்தால் அச்சலுகைகள் அவர்களைக் கோபமடையச் செய்தன. வட்டமேசை மாநாட்டில் தனி வாக்காளர் தொகுதிகளை அவர் எதிர்த்தார். வகுப்புவாரி தீர்ப்பு முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகளை வழங்கியபோது திரு காந்தியும் காங்கிரசும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அது தொடர்பாக வாக்கெடுப்பு என்று வந்தபோது, அதை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ செய்யாமல் ஒரு விந்தையான அணுகுமுறையை மேற்கொண்டனர்." (தொ. 25, பக். 71-72)

இவ்வகையில் இந்து மகாசபை சார்ந்த சாவர்க்கர், இந்து - முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்க முனைந்த காந்தியார் ஆகியோரின் கருத்துகளை உரையாடலுக்குட்படுத்திய அம்பேத்கர், இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த பிரித்தானிய அரசினர், இந்த நிகழ்வு தொடர்பாக எவ்வகையான அணுகுமுறையை மேற்கொண்டனர் என்பதையும் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். உலகத்தின் பல நாடுகளில் மதம் சார்ந்த தேசிய இனங்களுக்குள் நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகளை விரிவாகப் பதிவுசெய்துள்ளார். இந்தப் பின்புலத்தில் இந்து-முஸ்லிம் இணைந்த வாழ்முறை சாத்தியப்படும் என்ற நம்பிக்கையை அம்பேத்கர் முன்வைக்கவில்லை. இது குறித்த அவரது பதிவு பின்வருமாறு அமைகிறது.

"சமூக ஒற்றுமையின்றி அரசியல் ஒற்றுமையை எய்துவது இடரானது. அப்படியே எய்தினாலும்கூட, அது கோடைக்கால மரக் கன்றைப்போன்று நிலையற்றதாக, பெருங்காற்றடித்தால் வேருடன் சாயக்கூடியதாக இருக்கும். வெறும் அரசியல் ஒற்றுமையுடன் இந்தியா ஓர் அரசாகத்தான் இருக்கமுடியும். ஆனால், ஓர் அரசு ஒரு தேசமாகாது. ஆகவே, ஒரு தேசமல்லாத ஓர் அரசு, உயிர் வாழ்வதற்கான போராட்டத்தில் உயிர் பிழைத்திருக்கும் வாய்ப்புகள் மிகக்குறைவே. எல்லாக் கலப்பு நாடுகளின் அழிவிலிருந்தும் தகர்விலிருந்தும் எல்லா இடங்களிலும் தன்னை விடுவித்துக்கொள்ள, நவீன காலத்தின் இயக்காற்றல் மிக்க சக்தியான தேசியத்தன்மை விழைந்து கொண்டிருக்கிறது. ஆகவே ஒரு கலப்பான, ஒன்றிணைந்த அரசுக்கு வெளியிலிருந்து வரும் கைப்பற்றுதலால் ஏற்படும் அபாயத்தைவிட, உள்நாட்டில் துண்டு துண்டாக்கப்பட்ட, அடக்கி ஒடுக்கி ஒரே கொட்டடியில் தங்களது விருப்பத்துக்கு மாறாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தேசிய இனங்கள் புத்தெழுச்சி பெறுவதில் உள்ள ஆபத்தே அதிகம். பாகிஸ்தானை எதிர்ப்பவர்கள் இந்த ஆபத்தை மனத்தில் கொள்வதுடன் மட்டுமல்லாது, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் ஒரு கலப்பு அரசைக் குலைத்து தங்களுக்கென்று தனியாக ஒரு தூய அரசு உருவாக்கிக்கொள்வதைக் கண்டிப்பதற்கு மாறாக, அது சுய நிர்ணயம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நியாயமானது என்பதையும் உணர வேண்டும்." (தொ 25, பக். 122)

இந்துக்கள், முஸ்லிம் மக்கள் மீது கொண்டிருந்த பல்வேறு கருத்துநிலைகள் குறித்து விரிவாக விவாதித்த அம்பேத்கர், அதன் மறுதலையாக முஸ்லிம்கள், இந்துக்கள் சார்ந்து கொண்டிருக்கும் கருத்துகளையும் ஆய்வுக்குட்படுத்துகிறார். மேலும், முஸ்லிம் சமூகத்தில் ஒரு பிரிவினர் பாகிஸ்தான் உருவாக்கத்தை எதிர்ப்பது குறித்தும் அம்பேத்கர் பதிவு செய்கிறார். துருக்கி, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்த இவ்வகையான மதம் சார்ந்த தேசிய இனங்களின் எழுச்சி பற்றிய விரிவான பதிவைச் செய்துள்ளார். அந்த எழுச்சி பின்னர் தோற்றுப் போனதையும் விரிவான தரவுகளோடு சொல்கிறார். எவ்வாறு இந்து ஆதிக்கம் என்று நினைக்கிறோமோ, அதற்கு முஸ்லிம் மாற்று என்பதிலும் பல்வேறு சிக்கல்கள் உருப்பெற்றுள்ள உலக நிகழ்வுகளை அம்பேத்கர் அறிமுகம் செய்கிறார். இவ்வகையில் இந்தியா என்ற நாட்டின் உருவாக்கத்தில் இந்துக்களின் பங்கு, பாகிஸ்தான் என்ற நாட்டின் உருவாக்கத்தில் முஸ்லிம்களின் பங்கு குறித்த உரையாடலின், எழுச்சி, வீழ்ச்சி ஆகியவை குறித்தப் பதிவுகளை அம்பேத்கர் செய்துள்ளார். இருப்பினும் தனது இறுதி முடிபாக பாகிஸ்தான் பிரிந்து செல்வதே சரியாக இருக்க முடியும் என்றும் பதிவு செய்கிறார். அப்பகுதி பின்வருமாறு:

"தனித்தனியாக இருக்கும்போது, ஒவ்வொன்றும் ஒரு வலுவான நன்கு பிணைக்கப்பட்ட அரசுகளாக மாறமுடியும். இந்தியாவுக்கு ஒரு வலுவான மத்திய அரசு வேண்டும். ஆனால், இந்தியாவின் ஒரு பகுதியாகப் பாகிஸ்தான் இருக்கும்வரை இந்தியா ஒரு வலுவான மத்திய அரசைக் கொண்டிருக்க முடியாது. 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளபடி கூட்டாட்சி அரசாங்கத்தின் கட்டமைப்பை ஒப்பிட்டுப் பார்த்தால், அதன்படி உருவாக்கப்பட்ட மத்திய அரசாங்கம் வலுவிழந்த, கலகலத்துப்போன, உயிர்ப்பற்ற அரசாங்கம் என்பது தெரியவரும். ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டது போல மத்திய அரசாங்கத்தை வலுவிழக்கச் செய்வது, தன்மையிலும் அமைப்பிலும் மத்திய அரசாங்கமானது பெரும்பான்மையினராக இந்துக்களைக் கொண்டிருக்கும் என்ற அடிப்படையில், மத்திய அரசாங்கத்தின் அதிகார வரம்பிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக இருக்க விரும்பும் முஸ்லிம் பிரதேசங்களை இணைக்கச்

செய்யும் ஆர்வத்தினால் ஏற்பட்டதாகும். பாகிஸ்தான் உருவாகும்போது இந்தக் கருத்துகள் வலுவிழந்துபோகும். அப்போது இந்துஸ்தான் ஒரு வலுவான மத்திய அரசாங்கத்தையும் இணக்கமான மக்களையும் கொண்டிருக்க முடியும். இவை அரசின் நிலையான தன்மைக்கு இன்றியமையாத கூறுகளாகும். இந்துஸ்தானிலிருந்து பாகிஸ்தானைப் பிரிக்காத வரையில் இந்த இரண்டுமே சாத்தியமில்லை." (தொ 25. பக். 165-166)

அம்பேத்கர் பாகிஸ்தான் என்ற பிரிவினை உருவாக்கம் சார்ந்த பல பரிமாணங்களையும் குறித்துப் பேசியுள்ளார். பிரித்தானியர் ஆட்சி செய்த இந்தியா என்ற நிலப்பகுதியை இரண்டாக்குவதன் விளைவுகள், மதம் சார்ந்த தேசிய இன உரிமைகள், அதில் இந்துக்களின் வகிபாகம், முஸ்லிம்களின் வகிபாகம், இந்த இரு குழுக்களிடையே உள்ள பல்வேறு பாரதூரங்கள், அதன் இறுதிக் கட்டமாக பாகிஸ்தான் பிரிவினை தவிர்க்க இயலாத ஒன்று என்ற கருத்துநிலையை முன்னெடுப்பவராக அம்பேத்கர் உரையாடலைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு தனித்த தேசத்தை உருவாக்க விரும்பும் முஸ்லிம் மக்களிடம் உள்ள பலவீனங்கள் குறித்தும் அம்பேத்கர் பதிவு செய்திருக்கிறார்.

முஸ்லிம் மக்கள், சமூக அடிப்படையில் தேக்க நிலையில் இருப்பதாகக் கூறுகிறார். குறிப்பிட்ட இனக்குழுவினரிடம் சமூகத் தீமைகள் இடம் பெற்றிருப்பதாகக் கருதுகிறார். குழந்தைத் திருமணங்கள், சாதியப் பாகுபாடு, முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா முறை முதலியவற்றை 'சமூகத் தீமைகள்' என்று அம்பேத்கர் கருதுகிறார். இத்தீமைகளைப் போக்குவதற்கான சமூகச் சீர்திருத்தம் முஸ்லிம் மக்களுக்குத் தேவை என்றும் கூறுகிறார். இந்து சமூகத்தில் இதனைப் போன்ற தீமைகளை அகற்றுவதற்கென்று சமூகச் சீர்திருத்தவாதிகள் உருவாகியுள்ளனர். அவ்வகையான சமூகச் சீர்திருத்த ஆளுமைகள் முஸ்லிம் சமூகத்தில் உருவாகவில்லை எனும் குற்றச்சாட்டை முன்வைக்கிறார். முஸ்லிம் மக்கள் முற்போக்கான கருத்துநிலையை உள்வாங்குவதில் பின்தங்கியே இருப்பதாகவும் அம்பேத்கர் பேசுகிறார். இஸ்லாம் மதம் பல்வேறு முற்போக்குச் சிந்தனைகளை முன்னெடுத்தாலும், அதனை உள்வாங்கிச் செயல்படுபவர்களாக முஸ்லிம் மக்கள் இருக்கிறார்களா? எனும் அய்யம் எழாமல் இல்லை. புதிய அறிவியல் மாற்றங்களையும் உள்வாங்குவதில் முஸ்லிம் மக்கள் பின்தங்கியிருப்பதாக அம்பேத்கர் கருதுகிறார். முஸ்லிம் மக்களிடம் உள்ள பிற்போக்குத் தன்மைகள் எந்த அளவிலும் குறைச்சல் இல்லாமல் இந்துக்களிடமும் இடம் பெற்றிருப்பதையும் விரிவாகப் பேசியுள்ளார்.

திலகர், காந்தி முதலியவர்களின் சீர்திருத்தங்கள் குறித்து அம்பேத்கர் செய்துள்ள பதிவு பின்வருமாறு:

"திரு காந்தியின் தலைமையில் இந்துச் சமூகம் ஒரு மனநோய் மருத்துவமனை ஆகாவிட்டாலும் அரசியலுக்குப் பின்னால் மனம் பிறழ்ச்சியடைந்து ஓடிற்று என்று நிச்சயமாகக் கூறலாம். இந்துக்களின் மனத்தில் ஒரு நேரத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த சமூகச் சீர்திருத்தத்தின் இடத்தை ஒத்துழையாமை, சட்டமறுப்பு போன்றவையும் தன்னாட்சி முழக்கமும் ஆக்கிரமித்துக் கொண்டன. அரசியல் கிளர்ச்சியின் இரைச்சலில், சந்தடியில், குழப்பத்தில், தங்கள் சமூகத்தில் தீர்வு காணவேண்டிய, கழுவாய் தேடவேண்டிய ஏதேனும் தீமைகள் இருக்கின்றனவா என்றுகூட அவர்கள் அறியாதவர்களாக இருந்தனர். இதை அறிந்தவர்களோ, அரசியல் சீர்திருத்தத்தைப் போன்றே சமூகச் சீர்திருத்தமும் முக்கியமானது என்பதை நம்ப மறுத்தனர். சமூகச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்ளும் கட்டாயத்துக்கு ஆளானபோது, அரசியல் அதிகாரத்தை முதலில் பெற்றாலொழிய சமூகச் சீர்திருத்தம் சாத்தியமில்லையென வாதிட முற்பட்டனர். சமூகச் சீர்திருத்தப் பரப்புரையில்கூட பொறுமை காட்டமுடியாத அளவுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெறுவதில் அவர்கள் அடக்கமுடியாத ஆவல் கொண்டிருந்தனர். (தொ. 25, பக். 195)

இவ்வகையில் பல்வேறு பிற்போக்குத்தனங்களைக் கொண்டுள்ள இந்த இரு சமூகங்களும், தனித்தனியாகப் பிரிவதன் மூலமே, மாற்றங்களை உள்வாங்க முடியும். இல்லையேல் தங்கள் மதப் பெருமையில் மூழ்கி, சமூக முன்னேற்றம் சார்ந்த கருத்துநிலை, நிலைபெற இயலாமல் போவார்கள் என்றும் அம்பேத்கர் கூறுகிறார். தங்களுடைய தேசிய இனம் சார்ந்த விடுதலையை மட்டும் கவனத்தில் கொள்ளும் சமூகத்திற்கு, விடுதலை தருவதன் மூலம் முற்போக்கான சிந்தனை மரபை வளர்த்தெடுக்கலாம். இல்லையேல் அவர்கள் உளவியல்ரீதியாக மாறும் வாய்ப்பில்லை. இதற்கு அம்பேத்கர் தரும் பெர்னாட்ஷா மேற்கோள் பின்வருமாறு அமைகிறது:

"வெற்றிகொள்ளப்பட்ட ஒரு தேசம், புற்றுநோய் கண்ட ஒரு மனிதனைப் போன்றது; அவனால் தனது நோயைத் தவிர வேறு எதைப் பற்றியும் நினைக்கமுடியாது. ஒரு நலமுள்ள மனிதன் தன்னுடைய எலும்புகளைப் பற்றிக் கவலைப்படாதது போன்றே கேடுகள் அற்ற ஒரு தேசமும் தனது தேசியப் பண்பு குறித்துக் கவலைப்படுவதில்லை. ஆனால், ஒரு தேசத்தின் தேசியப் பண்பை நீங்கள் சிதைத்தால், தகர்த்தால், அதனை மீண்டும் பெற வேண்டும் என்பதைத் தவிர, அதுவேறு எதைப் பற்றியும் சிந்திக்காது. அந்தத் தேசியவாதியின் கோரிக்கை நிறைவேற்றப்படாதவரை அது எந்தச்

*சீர்திருத்தவாதி கூறுவதையும் செவிமடுக்காது. எந்தத் தத்துவஞானி மொழியும் தத்துவத்தையும் அது ஏறெடுத்தும் பார்க்காது; எந்த மதப் போதகரின் போதனையையும் அது காதில் வாங்கிக்கொள்ளாது. ஒருங்கிணைவும் விடுதலையும் பெறும் கடமையில் தவிர, வேறு எந்தக் கடமையிலும் அது எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததாயினும் கவனம் செலுத்தாது, நாட்டம் கொள்ளாது" (தொ. 25, பக். 213-214).*

சீர்திருத்த மனநிலை இல்லாமல் வாழும் சமூகத்திற்குள், வகுப்புவெறி வடிவம் பெறும் என்றும் அதனை மாற்றுவது அவசியம் என்றும் அம்பேத்கர் பேசுகிறார். முஸ்லிம் வகுப்புவெறி தொடர்பான விரிவான விவரணங்களை அம்பேத்கர் பதிவுசெய்கிறார். முஸ்லிம் லீக் கட்சியின் பல்வேறு தீர்மானங்களை அதற்குச் சான்றாக எடுத்துக் காட்டுகிறார். இத்தன்மைகளால், தேசிய அளவிலான மாற்றங்கள் சாத்தியப்படாமல் போகிறது. இதற்கு முஸ்லிம், இந்து ஆகிய இரு பிரிவினரும் காரணமாக அமைவதாக அம்பேத்கர் வருந்துகிறார்.

மேற்குறித்த இந்து-முஸ்லிம் செயல்களுக்கு காங்கிரசு அமைப்பின் செயல்கள் எவ்வாறு காரணமாக அமைகின்றன என்பதையும் அம்பேத்கர் பேசுகிறார். இவ்வகையான, சூழலில் இந்து–முஸ்லிம் இணைந்த அரசு என்பது சாத்தியமாகுமா? என்ற கேள்வியை அம்பேத்கர் முன்வைக்கிறார். இது தொடர்பாக, ஏராளமான நிகழ்வுகளை ஆவணப்படுத்துகிறார். இந்து- முஸ்லிம் தோல்விக்கு ஜின்னாவின் கருத்துகள் எவ்வகையான வாய்ப்பளித்தன என்பதையும் விரிவான மேற்கோளை எடுத்துத் தருகிறார். இந்தப் பின்புலங்களின் அடிப்படையில் இந்து-முஸ்லிம் ஒற்றுமைகள் என்பது அனைத்து நிலைகளிலும் சாத்தியமற்றுப் போவதைக் கூறுகிறார்.

அம்பேத்கர் தனது உரையாடல்கள் மூலமாக இந்து, முஸ்லிம் ஆகிய இருபிரிவினரிடையே உருப்பெற்று வளர்ந்திருக்கும் உளவியல் சார்ந்த கருத்துநிலை, அவர்களுக்குள் ஒற்றுமை எனும் சமூகச் சூழலை உருவாக்குமா? என்று கேள்வி எழுப்புகிறார். அது சாத்தியப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்கிறார். தவிர்க்க முடியாமல் பாகிஸ்தான் உருவாகும் என்கிறார். இதுவே பின்னர் வரலாறாகியதை நாம் கண்முன் காண முடிந்தது. இரு தரப்பினரின் அனைத்துவிதமான செயல்களையும் ஆய்வு செய்து அம்பேத்கர் செய்துள்ள உரையாடல் 1940-களில் இந்தியச் சூழலைப் புரிந்து கொள்ள உதவுகிறது. 1947 இல் பாகிஸ்தான் பிரிவினை; 1948 இல் காந்தியின் கொலை; இன்றுவரை இந்திய-பாகிஸ்தான் முரண்கள், வெறுப்பு அரசியல், இத்தன்மைகள் சார்ந்து உருவாகிய இந்துத்துவா ஆகியவற்றைப் புரிந்துகொள்ள அம்பேத்கரின் ஆய்வு உதவுகிறது.

❑❑❑

பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை என்ற நூலின் இறுதிப் பகுதியில், இதற்குமுன் அவர் பேசியது தொடர்பான பிறருடைய விமர்சனங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, சுயவிமர்சனமாக எழுதுகிறார். இதில் இதுவரை பேசிய பாகிஸ்தான் பிரிவினை தொடர்பான மூன்று செய்திகளை உரையாடலுக்குட்படுத்துகிறார். அவை வருமாறு:

- பாகிஸ்தான் என்ற நாடு உருவாக வேண்டும் என்பதன் நியாயப்பாடுகள்.
- அவ்வாறு உருவாகும்போது, எவ்வகையான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும்.
- பாகிஸ்தான் உருவாவதைத் தீர்மானிப்பவர்கள் யாராக இருக்க வேண்டும்.

பாகிஸ்தான் உருவாவதில் 'புவியியல் தொகுதி' என்பது முதன்மையாக அமைகிறது. இத்தன்மை சார்ந்து பாகிஸ்தான் உருவாவதை யாரும் தடுக்க முடியாது. ஆனால், இப்போது இருப்பது போல் ஒற்றுமையாக இருக்க முடியாதா? எனும் கேள்வியை எழுப்புகிறார்கள். அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், உலக வரலாற்றில் அவ்வாறு நடைபெறவில்லை. வகுப்புவாதம் சார்ந்த மனநிலையில் மக்கள் பிரிந்து தனித்தனியாக வாழ்ந்திருக்கிறார்கள். இதற்கான எடுத்துக்காட்டுகளை உலக அளவில் அம்பேத்கர் எடுத்துக்காட்டுகிறார். எனவே, புவியியல் தகுதி என்பதை முதன்மையாகக் கருத வேண்டும் என்கிறார்.

பாகிஸ்தான் பிரிக்கப்பட்டால் உருவாகும் சிக்கல்களில் முதன்மையாக, அப்போது செயல்பட்ட இந்தியாவின் நிருவாகம் சார்ந்த பொறுப்புகள், கடன்கள் இவற்றை எப்படி முறைப்படுத்துவது என்ற சிக்கல் உருவாகும். அடுத்த நிலையில் எல்லைகளை உருவாக்குவதில் முரண்கள் வரும். இந்த முரணை எப்படி எதிர்கொள்வது என்ற உரையாடல் தேவை. இவ்வகையான சிக்கல்களில் சுயநிர்ணயம் என்பதை எவ்வாறு கண்டறிவது; பெரும்பான்மையை மட்டுமே தகுதியாகக் கொள்ள முடியுமா? இரண்டு தேசிய இனங்களும் சமமான அளவில் வாழும் பகுதிகளை எப்படிப் பங்கிடுவது? இவை அனைத்திற்குமான உரையாடல்களை நிகழ்த்துவது பற்றியும் அம்பேத்கர் பேசுகிறார். இதில் மக்கள்தொகை பரிமாற்றம் என்பது முதன்மையான சிக்கலாக அமைவது குறித்து எச்சரிக்கிறார். அம்பேத்கரின் இந்த எச்சரிக்கையை 1947 இல் இந்தியா பிரிக்கப்பட்ட போது உருவான அவலங்களின் வரலாற்றிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

பாகிஸ்தான் உருவாகும்போது எதிர்வரும் சிக்கல்களை எதிர்கொள்ள நான்கு வழிகளை அம்பேத்கர் கூறுகிறார். அதாவது, பிரித்தானிய அரசே தீர்மானிக்கும் சக்தியாக அமைதல்; இந்துக்களும்

முஸ்லிம்களும் பிரித்தானிய அரசின் முடிவை ஏற்றுக் கொள்ளல்; பன்னாட்டு நடுவர் மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தல்; மேற்குறித்த செயல்களை நடைமுறைப்படுத்த முடியாத சூழலில் உள்நாட்டுப் போர் மூலம் இதனைத் தீர்த்துக் கொள்ளலாம் என்கிறார் (தொ. 27, ப. 726-727). இவ்வகையான செயல்கள் அயர்லாந்து போன்ற நாடுகளில் நடைபெற்றதை முன்மாதிரியாகக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார். இந்தியப் பிரிவினை நடைபெற்றதற்கு ஏழு ஆண்டுகள் முன்பாக, அம்பேத்கர் முன்வைத்துள்ள இவ்வுரையாடலை பிரிவினை நடந்தபோது எப்படி நிகழ்ந்தது என்ற வரலாற்றோடு இணைத்துப் பார்க்கும் தேவையுண்டு.

❑❑❑

அம்பேத்கர் இந்த நூலின் முன்னுரையில் பதிவு செய்திருக்கும் கருத்தும் அதே போல முடிவுரையில் பேசியிருப்பதும் ஒரு சமூகவியல் ஆய்வாளரின் நேர்மையான அணுகுமுறையைக் காட்டுகிறது. முன்னுரை பகுதி வருமாறு:"

"எங்கெல்லாம் என் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறேனோ அங்கெல்லாம் அவற்றை வினை-விளைவுகளோடு விளக்கியிருக்கிறேன். இரண்டாவதாக, அந்தக் கருத்துகள் எத்தகையனவாயினும் அவை ஒருதலைச் சார்பாக தெரிவிக்கப்பட்டவை அல்ல. அவை உண்மையில் பரிந்துரைகளே தவிர, இறுதிக் கருத்துகள் அல்ல. வேறுவகையாகச் சொன்னால், நான் திறந்த மனமுடையவன், வறண்ட மனமுடையவனல்ல. திறந்த மனமுடையவன் எப்போதுமே பாராட்டுதலுக்குரியவன். இது உண்மையாயினும் அதே நேரம், ஒரு திறந்த மனம் வறண்ட மனமாகவும் இருக்கக்கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது. இத்தகைய ஒரு திறந்த மனம் ஒருவனை மகிழ்ச்சிகரமான நிலைமைக்கும் அதே நேரத்தில், அபாயகரமான நிலைமைக்கும் உள்ளாக்கலாம். வறண்ட மனதுடையவனைப் பேரிடர் எளிதாகச் சூழ்ந்துகொள்ளும். இத்தகையவன் எடைப்பாரமும் சுக்கானும் இல்லாத ஒரு கப்பலைப் போன்றவன். அது திசைவழி தெரியாது தத்தளிக்கும். அக்கப்பல் நீரில் மிதந்துசெல்ல முடியும். ஆனால், திசை தெரியாது ஏதேனும் ஒரு பாறையில் மோதி கவிழ்ந்துவிடக்கூடும்." (தொ 24, பக். 67).

இந்த முன்னுரைப் பகுதியோடு, அவரது முடிவுரைப் பகுதியையும் இணைத்து வாசிப்பது அவசியம். அப்பகுதி வருமாறு:

"நான் இங்கு நிறுத்திக்கொள்ள எண்ணுகிறேன். ஏனெனில், நான் சொல்லவேண்டிய பொருள் குறித்து அனைத்தையும் சொல்லிவிட்டேன். சட்டமொழியில் கூறுவதானால் நான் இருதரப்பு வாதங்களையும் விவரங்களுடன் முன்வைத்திருக்கிறேன். இதைப் போதுமான அளவு விரிவாக நான் செய்துவிட்டேன். இதற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியப் பேரரசி விக்டோரியா காலத்து வழக்கறிஞர்கள் பெரிதும் பயன்படுத்திய மிக நீண்ட வாக்கிய மொழிநடையைப் பயன்படுத்தியுள்ளேன். அவர்களது அணுகுமுறையைப் போலவே, ஒருவரை ஒருவர் வினாவுதல், விடைமொழிதல், கண்டனம் தெரிவித்தல், மறுப்புரை கூறல், எதிருரைக்கு எதிருரை, மறுப்புரைக்கு மறுப்புரை முதலிய அனைத்தும் இதில் அமைந்துள்ளன. பாகிஸ்தானுக்கு ஆதரவான வழக்கையும் எதிரான வழக்கையும் பற்றிய ஒரு முழுமையான அறிக்கையை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்டே நான் இந்த முறையைக் கைக்கொண்டேன். முந்தைய பக்கங்கள் வாதங்களைத் தருகின்றன. இப்பக்கங்களில் காணப்படும் உண்மைகள் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை. என் முடிவுகளையும் நான் தந்துள்ளேன். இனி இந்துக்களும் முஸ்லிம்களும் அவர்களுடைய கருத்தைக் கூறவேண்டும்." (தொ 27, பக். 67)

அம்பேத்கரின் இந்த நூலின் உரையாடல் முறையை உள்வாங்காமல், முஸ்லிம்கள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறார் என்று இந்துத்துவ சக்திகள் அம்பேத்கரை தங்களுடன் அடையாளப்படுத்தும் அவலம் நடைமுறையில் உள்ளது. இன்னொரு பக்கம் அம்பேத்கர் முஸ்லிம்கள் பற்றிச் சொல்வதை முழுமையாக ஏற்க இயலாது என்று முஸ்லிம் ஆதரவாளர்களும் பதிவு செய்வதைக் காணமுடிகிறது. இந்துத்துவா சக்திகள், அம்பேத்கர் பேசுவதை முழுமையாக எடுத்துக் கொள்ளாமல் பகுதி பகுதியாக எடுத்து மேற்கோள் காட்டி, அவரை இந்துத்துவா ஆதரவாளர் போலச் சித்திரிக்கும் மோசடியைக் காணமுடிகிறது. இந்த வகையில் இந்த நூல் அம்பேத்கர் ஆய்வு முறை சார்ந்து சிறந்த ஒன்றாகவே அமைகிறது. அவரது ஆய்வு முறை, ஆய்வு நடை, ஆய்வுகளை முன்வைக்கும் முறை பற்றிய சித்திரங்களைக் காண விரும்புவோர், இந்நூலை வாசிப்பது அவசியம். மிக முக்கியமான ஒரு சிக்கலை எப்படி விவாதிப்பது என்பதற்கு அடிப்படையான தரவு நூலாக இதனைக் கருத முடியும்.

***சான்றாதாரம்: அம்பேத்கர் மக்கள் பதிப்பு – தொகுதிகள் 24 முதல் 27 வரை.***

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர், ஓய்வு பெற்ற பேராசிரியர்.**




27.09.2025 அன்று அண்டனூர் சுரா சிறுகதைகள் -100 இரு தொகுதிகள் வெளியீட்டு விழா புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெற்றது. இதில் புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் தங்கம் மூர்த்தி, கவிச்சுடர் கவிதைப்பித்தன், அருண் சின்னப்பா, முருகராஜ், கவிஞர் ஒட்டடை பாலச்சந்தர், க.அஜய்குமார் கோஷ், மு. சிவானந்தம், மு.கருப்பையா, ராசி. பன்னீர்செல்வம், வெ.சந்திரமோகன், ஸ்டாலின் சரவணன், ஜோ. டெய்சிராணி மற்றும் புதுக்கோட்டை என்சிபிஎச் கிளை மேலாளர் ந.வெங்கடேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.


# என்சிபிஎச் கோவை கிளை இடமாற்றம்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**


No.138, டேங்க்ரோடு,

டாடாபாத் சிவானந்தா காலனி,

கோயமுத்தூர் – 641012

தொடர்புக்கு: 9047571857, 9442764286


கட்டுரை





# தி.மு.க. நாவலாசிரியர்களின் நாவல்கள் சித்திரிக்கும் அரசியல் சொல்லாடல்கள்

கடந்த பல நூற்றாண்டுகளாக வைதிக சமய மேலாதிக்கம் காரணமாகப் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் கற்பித்துத் தீண்டாமை நிலவிய தமிழர் வாழ்க்கை, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சீரழிந்த நிலைமையிலிருந்தது. விளிம்பு நிலையினரின் வாழ்க்கை விலங்கைவிடக் கேவலமாக இருந்தது. வறுமை, பஞ்சம், கல்வி மறுப்பு, பால் சமத்துவமின்மையினால் துயருற்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், உலகமெங்கும் கூலிகளாகப் பயணமாயினர். ஆங்கிலேயரின் ஆட்சியில் சில சமூக சீர்திருத்தங்கள் அமல்படுத்தப்பட்ட போதிலும் அன்றாட வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் நிகழவில்லை. பார்ப்பனர் தங்கள் பூர்வீகத் தொழிலான வேதம் ஓதுவதைக் கைவிட்டுக் காலனியாதிக்க அரசாங்கத்தில் உயர் அலுவலர்களாயினர்; அதிகார மையமாயினர். தமிழகமெங்கும் பஞ்சம் அடிக்கடி ஏற்பட்டபோதிலும் ஆங்கிலேயரும் அவர்தம் அடிவருடிகளும் வசதிகளாக வாழ்ந்து கொண்டிருந்தனர். இன்னொருபுறம் மூடப்பழக்க வழக்கங்களும் ஆசாரங்களும் சாஸ்திரங்களின் பெயரால் மக்களிடையே ஆழமாக ஊடுருவியிருந்தன. இத்தகைய சூழலில் 1857-இல் நிறுவப்பெற்ற சென்னைப் பல்கலைக்கழகமும், ஆங்கிலேயக் கல்வி முறையும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட அடித்தளமாக விளங்கின. சமூகக் கொடுமைகளுக்கு எதிராக விழித்தெழுந்தவர்களின் கூட்டு முயற்சியினால் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இயக்க அடிப்படையில் முக்கியமானவை. 1949 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட திராவிடர் முன்னேற்றக் கழகம், 1967இல் தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் சமூக அரசியல்ரீதியில் செய்த சீர்திருத்தங்களும் மாற்றங்களும் அளவற்றவை.



ந.முருகேசபாண்டியன்

வைதிக சநாதனத்தின் ஆதிக்கமும் வருணாசிரமமும் இன்றைக்கும் தொடர்ந்திடும் சூழலில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுவிப்பிற்கான போராட்டங்களைத் தொடர்ந்திட வேண்டியுள்ளது

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயரின்

காலனிய ஆதிக்கத்திலிருந்து, நாட்டை மீட்கப் போராடுவதைவிட, வருணாசிரம அடிப்படையிலான சமூக அமைப்பை எதிர்த்துப் போராடுவது முதன்மையானது என்ற கருத்து, பார்ப்பனர் அல்லாமல் புதிதாகக் கல்வி கற்றவர்களிடம் நிலவியது. பார்ப்பனர் அல்லாதாரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் தென்னிந்திய நல உரிமைச்சங்கம் சென்னையில் 1916-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. அதே காலகட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட நீதிக்கட்சி, தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றியபோது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பெண்களுக்கு வாக்குரிமை, தேவதாசி முறை ஒழிப்பு, பஞ்சமர்களுக்கு நிலப்பட்டா வழங்கல் போன்றவை சட்டரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டன. அந்த அமைப்பு சேலம் மாநாட்டில் பெரியாரின் தலைமையில் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றப் பெற்றுப் புதிய அமைப்பாகத் தோற்றுவிக்கப்பட்டது. திராவிடர் நாடு, திராவிடர் இன விடுதலை போன்ற கருத்துகள் திராவிடர் கழகத்தினரால் முன்வைக்கப்பட்டன. வடவர் ஆதிக்க எதிர்ப்பு, சமஸ்கிருத மேலாதிக்க எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, விதவை மறுமணம், சுயமரியாதைத் திருமணம், சமூகநீதி, குழந்தை மணம் எதிர்ப்பு, பெண்களுக்குச் சமஉரிமை, தேவதாசி முறை ஒழிப்பு, இந்தி எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற சீர்திருத்தக் கருத்துகளுக்காகத் திராவிடர் கழகத்தினர் பிரச்சாரம் செய்து நடைமுறைப்படுத்திட போராடினர். அந்த வழியில் திராவிடர் முன்னேற்றக் கழகம் சமூக சீர்திருத்தப் போராட்டங்களை முன்வைத்துச் சமூக நீதிக்கான கருத்தியல் பிரச்சாரத்தை இன்றுவரை தொடர்கின்றது. தமிழ்நாட்டின் முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று முன்வைத்திருக்கிற திராவிட மாடல் அரசு என்ற கருத்தியலின் பின்புலத்தில் திராவிட இயக்க அரசியல் பொதிந்துள்ளது.

ஐம்பதுகளில் திராவிடக் கருத்தியல், ஒருபுறம் அச்சு ஊடகங்களான பத்திரிகைகள், கட்டுரைப் புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் இன்னொருபுறம் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள் போன்ற இலக்கியப் படைப்புகள் வழியாகவும் பரப்பப்பட்டன. அதேவேளையில் மேடைப்பேச்சுகள் நாடகங்கள், திரைப்படங்கள்மூலம் கல்வியறிவு இல்லாதவர்களிடம் திராவிடக் கருத்தியல் வீச்சாகப் பரவியது. மேடைப் பேச்சுகளும் ஊடகங்களும் தமிழரிடையே கருத்தியல்ரீதியாகச் சமூக மாற்றங்களை ஏற்படுத்தின. தமிழ்நாட்டின் அரசியல், கலை, இலக்கியம். ஊடகம் ஆகியவற்றில் திராவிட இயக்கத்தின் தாக்கம் ஆழமானது. சாஸ்திர சம்பிரதாயம் என்று ஆகமக் கோவில்களை முன்வைத்த சமஸ்கிருதத்திற்கு மாற்றாகத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

திராவிட இயக்கக் கருத்துகளைக் கருவாகக்கொண்டு எழுதப்பட்ட படைப்புகள், கட்டுரைகளின் எண்ணிக்கை அளவற்றவை. நடுத்தர வர்க்கத்தினரிடையே புத்தகம் வாசித்தல், புத்தகங்கள் சேகரித்தல், மணவிழாவில் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்குதல் போன்ற புதிய பழக்கங்களைப் பரப்பியதில் திராவிட இயக்கத்தாரின் பங்கு முதன்மையானது. சாதி, சமய வேறுபாடற்ற புதிய சமுதாயம் படைத்திட முயன்ற திராவிட இயக்கத்தினர் தம்முடைய கொள்கைகளை முன்வைத்திடும் படைப்புகளைப் படைத்தனர். தமிழ் மரபில் இலக்கியம் என்பது புனிதமானது என்று உருவாக்கப்பட்டிருந்த புனைவைத் தகர்த்து மக்கள் மனதில் படிந்திருந்த மூடநம்பிக்கைகளைப் போக்கிட இலக்கியத்தைப் பயன்படுத்தினர். திராவிட இயக்க எழுத்தாளர்கள் இலக்கிய வடிவம், உத்திகள் பற்றிய அக்கறை இல்லாமல் ஏராளமாக எழுதிக் குவித்தனர். அன்றைய காலகட்டத்தில் புதிதாகக் கல்வியறிவு பெற்றிருந்த இளம் தலைமுறையினரிடையே திராவிட இயக்கப் படைப்பாளர்களின் படைப்புகள் வீச்சாகப் பரவின; கருத்துரீதியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தின.

முன்னர் பரவலாகக் கவனம் பெற்றிருந்த திராவிட இயக்கப் படைப்புகள் பற்றிய சொல்லாடல்கள், இன்று இலக்கிய வரலாற்றுத் தகவல்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. எனவே கடந்த 75 ஆண்டுகள் காலகட்டத்தில் தமிழரிடையே வீச்சாகப் பரவியிருக்கின்ற இலக்கியப் படைப்புகள் பற்றி மீளாய்வு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்று திராவிட இயக்கத்தினரின் அரசியல் செயற்பாடுகள், அதிகாரம் காரணமாக ஏற்பட்டுள்ள எதிர்மறையான விளைவுகள் பரிசீலனைக்குரியன. 'புனிதம் என்றோ, இழிவானது என்றோ எதுவுமில்லை' என்ற பின்நவீனத்துவக் காலகட்டத்தில் பல்வேறு வாசிப்பு முறைகளின் வழியாகத் திராவிட இயக்கப் படைப்புகளை அணுகவேண்டியது அவசியம்.

நாற்பதுகளில் தேவாரம், புராணங்கள், பிரபந்தம் வாசிப்பதுதான் இலக்கியம் என்ற பொதுப்புத்தி தமிழ்ச்சூழலில் நிலவியது. தமிழ்ப் பண்டிதர்கள் யமகம், அந்தாதி, சித்திரக்கவி போன்ற மொழி விளையாட்டுகளில் சிக்கியிருந்தனர். இத்தகைய சூழலில் பண்டிதர்களாலும், பக்தர்களாலும் போற்றப்பட்ட சமயம் சார்ந்த இலக்கியப் படைப்புகளை எல்லாம் 'குப்பை' என்று

பெரியார் புறக்கணித்த, கலகக்குரல், காலத்தின் தேவையும்கூட. ஏனெனில் உயர்சாதியினர் மட்டும் செய்யுள் வழியாகக் கருத்துக்களை வெளியிட்டு அவற்றைப் பேரிலக்கியம் எனக் கருதினர். உரைநடையில் எழுதுவது கேவலமானது என்று கருதப்பட்டது. விளிம்புநிலையினர் படைப்பு முயற்சியில் ஈடுபடுவதிலிருந்து தடை செய்திட முயன்ற உயர்சாதியினரின் தந்திரங்களைப் பெரியாரின் தடாலடியான அணுகுமுறை, தகர்த்தது. புராண, இதிகாசங்கள் வலியுறுத்திய அடிமைத்தனத்தையும் சநாதனத்தினையும் கேள்விக்குள்ளாக்கிய பெரியாரின் குரல், காலத்தின் தேவையாக ஒலித்தது.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் பண்பாட்டு அடையாளமாக வைதிக சநாதனம், பார்ப்பனர்களால் முன்வைக்கப்பட்டது. பாரதியார், வ.வே.சு. ஐயர் போன்ற இலக்கியவாதிகள் கொண்டாடிய ஆரிய வேதம், ஆரிய தேசம், புண்ணிய பூமி, சம்ஸ்கிருதக் கல்வி போன்ற கருத்தியல்கள், சநாதனத்தின் வெளிப்பாடுகள்தான். மனிதர்களிடையில் பிறப்பு, பால் அடிப்படையில் பேதங்களைக் கற்பித்திடும் சநாதன மரபு முன்னிறுத்தும் வருணாசிரமக் கொள்கையைப் போற்றுகின்ற ஆரிய மரபை எதிர்த்துத் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் உள்ளிட்ட திராவிட இயக்க எழுத்தாளர்கள் எழுதிய எழுத்துகள், காத்திரமான அரசியல் பிரதிகள். நவீனத் தமிழிலக்கியப் படைப்புகளின் ஆக்கத்தில் தொடக்கக்காலத்திலேயே சநாதனப் போக்கு ஊடுருவியிருந்தது. மணிக்கொடி பத்திரிகை தொடங்கிய இலக்கியப் படைப்பாக்கங்களை மறுவாசிப்பிற்குட்படுத்தினால் பார்ப்பனியத்திற்கு ஆதரவான குரல்கள் இடம் பெற்றிருப்பதை அவதானிக்க முடியும். இலக்கியம் புனிதமானது என்று புனிதப் பிரதியாக்கி உன்னத இலக்கியம் பற்றிய பேச்சுகளை உருவாக்கிய எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்சாதியினர்தான். 'எழுத்து' போன்ற சிறுபத்திரிகைகள்மூலம் உருவான நவீனப் படைப்பாளர்களில் சிலர் சமகால அரசியல் மீது வெறுப்பையும் தீண்டாமையையும் அழுத்தமாக உருவாக்கினர். ஒருவகையில் திராவிட இயக்கப் படைப்புகள் குறித்து ஒவ்வாமைக்குள்ளாயிருந்தனர். எல்லாப் படைப்புகளும் ஒருவகையில் அரசியல் பிரதிகள் என்ற புரிதல் இல்லாமல் உன்னத இலக்கியம் என்று கொண்டாடுகின்ற பேச்சுக்குப் பின்னர் காத்திரமான சநாதன அரசியல் பொதிந்திருப்பதைக் கண்டறிந்திட முடியும்.

உன்னத இலக்கியப் படைப்புகள், ஐம்பதுகளில் பரவலாகிய திராவிடம், பொதுவுடைமைக் கருத்தியல்களுக்கு எதிரான அரசியலை முன்வைத்தன. எல்லா இலக்கியப் படைப்புகளும் பிரச்சாரங்கள்தான் என்ற அரசியலை மறைத்துவிட்டு அரசியலற்ற புனிதப் பிரதிகளை உருவாக்கிட முயன்ற பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதியினரின் இலக்கியக் கொள்கைகளைத் தி.மு.க. படைப்பாளர்கள் கேள்விக்குள்ளாக்கினர். கலை இலக்கியத்தில் சாதியின் ஆதிக்கத்தை ஒழித்து உயர்சாதி இலக்கியப் படைப்பாளர்களின் சாதிய முகத்தை அம்பலப்படுத்தியதில் திராவிட இயக்கத்தினரின் பங்களிப்பு கணிசமானது. இலக்கியமும் வாசிப்பும் உயர் சாதியினருக்கானவை என்ற நிலையை மாற்றியமைத்துப் பரந்துபட்ட வாசகர் பரப்பை உருவாக்கியது திராவிட இயக்கப் படைப்பாளர்கள்தான்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேலை இலக்கியத் தாக்கம் காரணமாக நவீனத் தமிழ் இலக்கியம் மெல்ல வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. மிட்டாமிராசுகள், புரோகிதர்கள், ஜமீன்தார்கள் நிலக்கிழார்களின் அதிகாரத்தினால் ஒடுக்கப்பட்டிருந்த பெரும்பான்மைத் தமிழர்களின் சீரழிந்த வாழ்க்கைச் சூழலில், இலக்கியம் என்பது பகல் கனவு. இத்தகு சூழலில் 1936-ஆம் ஆண்டு வெளியான மூவலூர் ராமாமிர்தத்தம்மாள் எழுதிய 'தாஸிகளின் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர்' நாவல் குறிப்பிடத்தக்க படைப்பாகும். நாவலாசிரியை சுயமரியாதை இயக்கப் போராளி, மேடைப் பேச்சாளர், குடியரசு இதழின் கட்டுரையாளர். பெண்ணைத் தெய்வமாக்கிப் போற்றிக்கொண்டு அன்றாட வாழ்வில் அடக்கியொடுக்கிடும் தமிழர் வாழ்க்கையில் கோயில் சாஸ்திரங்களின் பெயரால் பெண்களைத் தேவரடியாராக்கி- விலைமகளிராக்கி - இழிவுபடுத்தும் சூழலின் கொடுமையை எதிர்த்து நாவல் புனையப்பட்டுள்ளது. பொதுத்துய்ப்பிற்கான உடல்களாகப் பெண்களை மாற்றி அதிகார வர்க்கத்தினர் இன்பம் அடைவதற்குத் தளமாக்கிய சாஸ்திர சம்பிரதாயங்களைக் கேள்விக்குள்ளாக்கியுள்ள நாவல், இன்றைய வாசிப்பில் சமூக ஆவணமாக வெளிப்படுகிறது. 'பிரிட்டானியத்தையும் பார்ப்பனியத்தையும்கூட எளிதில் எதிர்க்கலாம். இது தேவதாஸி முறையை எதிர்ப்பது சாமானிய வேலை அன்று' என்ற முடிவுக்கு வந்தோம் என்று நாவலின் பதிப்புரையில் நாவலாசிரியை குறிப்பிட்டுள்ளது, தற்செயலானது அல்ல. "தேவதாஸிகள் இருக்க வேண்டும். தேவதாஸி முறையை ஒழிப்பது தெய்வ விரோதம் - சட்ட விரோதம்" என்று கூப்பாடு போட்ட

சத்தியமுர்த்தி சாஸ்திரியின் எதிர்ப்புக்குரல் சநாதனத்தின் வெளிப்பாடு.

பெண்ணுடலை வெறும் போகப்பொருளாக மாற்றிய தேவதாஸி முறைக்கு மூலம் வைதிக சமயமும் கோவிலும்தான் என்ற விமர்சனம் கதைப்போக்கில் பதிவாகியுள்ளது. "பிராமணனும் தாஸியும் நாட்டைக்கெடுக்கும் ஜாதியர்கள். பாவம், புண்ணியம் என்பது இவ்விடத்திலிருந்து உற்பத்தியான ஒரு போக்கிரித்தனமான வார்த்தை" என குணபூஷணி குறிப்பிடுவது அன்றைய கேவலமான தமிழ்ச் சமூகத்துக்கு விடப்பட்ட சவால். இளம் ஜமீன்தாரின் மனைவி ஆணாக மாறுவேடமிட்டு தாசி வீட்டில் தங்கியிருத்தல், திருச்சி மைனர் மாமா ஆகவும் மலையாள மாந்திரிகன் ஆகவும் உருமாறுதல் போன்ற சம்பவங்கள் நம்பும்படியாக இல்லையெனினும் கதைப்போக்கில் சுவாரசியத்தை ஏற்படுத்துகின்றன. பல்லாண்டுகளாகத் தமிழர் வாழ்வில் ஆழமாக ஊடுருவியிருந்த தேவதாசி முறையைப் பற்றிய சொல்லாடலைத் தொடங்கி வைப்பதில் நாவலாசிரியையின் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. தாஸிகளின் பேச்சுகள், முயற்சிகள் பற்றிய சித்திரிப்புகள் உளவியல் அடிப்படையில் நுட்பமாக அமைந்துள்ளன. தாஸிகள் இசை நாட்டியம் ஆகிய கலைகளின் வழியே ஆண்களை விபச்சாரத்திற்குள்ளாக்கும் செயலானது கலை பற்றியும் கேள்வியை எழுப்புகிறது. மாமாக்கள் உள்பட பலருடன் உடலுறவு கொண்டாலும், தன்னைக் கன்னிப்பெண் போல தாஸி கூறுவதும் அதை உண்மை என மைனர்கள் நம்புவதும் வேடிக்கை.

தேவதாஸி முறை பற்றி இன்று யாருக்கும் எதுவும் தெரியாது. கடந்த காலத்தில் தமிழகத்தில் பரவலாக அங்கீகாரம் பெற்றிருந்த நிலை பற்றியும் அதற்கான சமூகப் பின்புலம் பற்றியும் விரிக்கும் நாவலில் கலையம்சம் குறைவெனினும் வாசிப்பில் வியப்பை ஏற்படுத்துகின்றது. ராமாமிர்தத்தம்மாளின் புனைவு புதிய போக்கினை அறிமுகப்படுத்தியுள்ளது; பெண்ணைச் சமூக இழிவிலிருந்து மீட்டு அவளுடைய இருப்பினை அடையாளப்படுத்த முயன்றுள்ளது.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 1949-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது இலக்கிய அணுகுமுறையை மாற்றிக்கொண்டது. பண்டைய இலக்கியப் படைப்புகள், இராமாயணம், மகாபாரதம் உள்ளிட்ட புராணங்கள் போன்றவற்றை முழுக்கப் புறக்கணித்த பெரியாரின் அணுகுமுறையிலிருந்து விலகிய தி.மு.க.வினர் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்றவற்றை முன்னிறுத்தித் தமிழ் அடையாளத்தையும் பேச்சுகளையும் உருவாக்கிட முயன்றனர். தமிழரின் பண்பாட்டுப் பெருமையையும் வரலாற்றுப் பழமையையும் ஆரிய மரபுக்கு எதிராக முன்வைத்தல் துரிதமாக நடைபெற்றது. தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் சமூக மாற்றங்களை உருவாக்குவதன் மூலம் நிலவும் சமூக மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கிய செயல்பாடு, தி.மு.க.வினரின் தனித்துவமாகும். கலை, இலக்கியப் படைப்பாக்கத்தில் பெரிதும் அக்கறைகொண்ட தி.மு.க.வினரின் நோக்கில் பரந்துபட்ட மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவது பொதிந்திருந்தது. தி.மு.க.வைத் தோற்றுவிப்பதில் முதன்மைக் காரணமாக விளங்கிய சி.என். அண்ணாதுரை என்ற அறிஞர் அண்ணா தொடங்கி இயக்க முன்னணித் தலைவர்களில் பலர் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட்டனர். திராவிட நாடு, தனியரசு, மன்றம், தென்றல், முரசொலி, திராவிடன், அறப்போர், இனமுழக்கம், குடியரசு, நம்நாடு, மாலை மணி போன்ற பல்வேறு இதழ்கள் திராவிட இயக்கக் கருத்துகளுக்குச் சார்பான படைப்புகளை வெளியிட்டன. அன்றைய காலகட்டத்தில் நடுத்தர வர்க்கத்தினர் நாவல்களை விரும்பி வாசித்துக் கொண்டிருந்தனர். இத்தகையோரைக் கவர்ந்திட நாவல் ஆக்க முயற்சிகளில் தி.மு.க. இயக்கத்தினர் முனைந்து செயல்பட்டனர்.

தி.மு.கழகத்தில் இணைந்து அரசியல்ரீதியாகவும் நாவல்கள் எழுதுவதிலும் செயல்பட்ட முக்கியமான நாவலாசிரியர்கள் பின்வருமாறு: அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, பேராசிரியர் க.அன்பழகன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கே.ஜி. இராதாமணாளன், எஸ்.எஸ். தென்னரசு, டி.கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணன், தில்லை வில்லாளன்... இப்பட்டியல் இன்னும் நீளும்.

தமிழை முன்னிறுத்தி அரசியல் நடத்திய தி.மு.க.வினரின் நாவல் ஆக்கங்களில் தனித்தமிழுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. சமஸ்கிருதச் சொற்கள் கலந்த நடையில் புனைவெழுத்துகள் எழுதப்பட்டன. தமிழ்ப் பண்டிதருக்கு மட்டுமே புரியும் மொழியைக் கைவிட்டு, ஏற்கெனவே மக்களுக்கு அறிமுகமான மொழியைச் செழுமைப்படுத்திக் கையாண்டதில் தி.மு.க.வின் அரசியல் நோக்கம் பொதிந்துள்ளது. நாவல் கருத்து வெளிப்பாட்டுக் கருவி என்பது அன்றைய காலகட்டத்தில் தி.மு.க. சார்புப் படைப்பாளர்களின் நம்பிக்கை. இதனால் உணர்ச்சி பொங்கிடும் அடுக்கு மொழியின் வீச்சுகளுடன் வெளியான நாவல்கள் வாசிப்பில் மகிழ்வூட்டின. பெரும்பாலான நாவல்கள், இதழ்களில் தொடராக

வெளிவந்தமையால் வாசகரை முன்னிறுத்திய பிரதியானது, வாசகருடன் நேரடியாகவும், நெருக்கமாகவும் உறவாடியது; வாசிப்பின் மூலம் விவாதத்தைத் தூண்டியது. வைதிக சநாதன மதம், காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த தமிழர் வாழ்க்கையில் மாற்றத்தினை உருவாக்கிட தி.மு.க. எழுத்தாளர்கள் நாவல் வடிவத்தைப் பெரிதும் பயன்படுத்தினர்.

அறிஞர் அண்ணா என அழைக்கப்பட்ட சி.என். அண்ணாதுரை எழுதியுள்ள நாவ்ல்கள் மிகை யதார்த்தமான விவரிப்பில் உணர்ச்சி பொங்கிடும் இயல்புடையன. வகைமாதிரியான கதைமாந்தர்கள், செயற்கையான சம்பவங்கள், திடுக்கிடும் திருப்பங்கள், அலங்காரமான மொழிநடை, அடுக்குச் சொற்கள் என விரித்திடும் நாவல்கள், ஓரளவு இலக்கிய அறிமுகமான வாசகரையும் கவர்ந்திழுக்கும் வல்லமை படைத்தவை. அண்ணா உருவாக்கிய கதைசொல்லல், பெரும்பான்மையான திராவிட இயக்கப் படைப்பாளர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியது.

கணவனால் மனப்பிறழ்வு நோயாளியாக மாற்றப்பட்ட தங்கம், அதே கணவனுக்காகக் கொலைப் பழியை ஏற்று வீட்டைவிட்டு வெளியேறுதல் (ரங்கோன் ராதா), சமூக மாற்றத்தினுக்காகப் போராட முன்வரும் பார்வதி எதிர்கொள்ளும் சிக்கல்கள் (பார்வதி பி.ஏ), குடும்ப வறுமைச்சூழல் காரணமாகச் சீரழிந்த வாழ்க்கை வாழ்ந்திட்ட காந்தா (குமாஸ்தாவின் பெண்), கிழவனைத் திருமணம் செய்து துயரமடையும் இளம் பெண்ணின் அவல வாழ்வு (கபோதிபுரக் காதல்) எனப் பெரும்பாலான அண்ணாவின் நாவல்கள் பெண்களை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. தனித்து இயங்கமுடியாத நிலையில், ஆணின் மேலாதிக்கத்தினை ஏற்று ஆணைச் சார்ந்து இயங்கிடும் பெண்பற்றிய சித்திரிப்பில் தனித்து அடையாளம் எதுவுமில்லை. இளவயதுப் பெண்ணுக்கும் வயதான ஆணுக்குமான திருமண எதிர்ப்பு, விதவை மறுமண ஆதரவு, சாதி மறுப்புத் திருமண ஆதரவு போன்ற அம்சங்களுக்கு நாவல்களில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளன.

அரசியல் பிரசாரத்திற்காக நடத்தப்பட்ட 'திராவிட நாடு' இதழில் அறிஞர் அண்ணா எழுதிய பரபரப்பூட்டும் நாவல்கள் வாசகர்களுக்கு ஈர்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டன. மூடநம்பிக்கை எதிர்ப்பு, சநாதன எதிர்ப்பு, கைம்பெண் மறுமணம் போன்ற சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து அண்ணா எழுதிய நாவல்கள் திராவிடக் கருத்தியலை அழுத்தமாகப் பிரச்சாரம் செய்தன.

அறிஞர் அண்ணா எழுதிய நாவல்கள் பின்வருமாறு: பார்வதி பி.ஏ, ரங்கோன் ராதா, என் வாழ்வு, தசாவதாரம், கலிங்க ராணி குடியரசு, திராவிட நாடு, காதல் ஜோதி. கபோதிபுரக் காதல்.

மூடநம்பிக்கைகளை ஒழித்துப் பகுத்தறிவை வளர்ப்பதும் சாதி, சமய வேறுபாடுகளை நீக்கி, மனிதச் செயல்பாடுகளின் போலித்தனத்தை அம்பலப்படுத்துவதும் சமத்துவத்தை முன்னிறுத்துவதும் தமிழரின் பெருமையைப் பேசுவதும் கலைஞர் எழுதிய நாவல்களின் நோக்கங்களாக உள்ளன. 1951 ஆம் ஆண்டு திராவிட நாடு இதழில் கலைஞர் எழுதிய 'இரத்தக் கண்ணீர்' நாவல் தொடர்கதையாகப் பிரசுரமானது. 'பாயும் புலி பண்டாரக வன்னியன்' நாவல் 1991 ஆம் ஆண்டில் தொடர்கதையாகக் குங்குமம் இதழில் வெளியானது. ஓய்வறியா அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த கலைஞர் நாற்பதாண்டுகள் தொடர்ந்து நாவல் எழுதியது சாதனைதான். தமிழ்ச் சமூகத்தில் மாற்றங்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்திட கலைஞருக்கு நாவல்கள் பெரிதும் உதவியுள்ளன.

கலைஞர் நாட்டில் நிலவுகின்ற சாதிய ஏற்றத்தாழ்வுகளைக் கேள்விக்குள்ளாக்கித் தமிழ் அடையாளத்துடன் தமிழர் அனைவரும் ஒன்றிணைந்திட வேண்டுமென்ற நோக்கில் பாயும் புலி பண்டாரக வன்னியன் நாவலை எழுதியுள்ளார். வரலாற்றையும் புனைவையும் கலந்து எழுதப்பட்டுள்ள நாவலில் இடம்பெற்றுள்ள பட்டியல் இனத்தைச் சார்ந்த சுந்தரலிங்கக் குடும்பன் கதைமாந்தர் தனித்துவமானது.

கரிகால் பெருவளத்தான் காலத்தில் சோழ, பாண்டிய நாடுகளின் வரலாற்றையும் பாண்டிய நாட்டுத் தூதர் ரோமாபுரியில் அகஸ்டஸ் சீசர் காலத்தில் பொறுப்பேற்றிருந்த பின்புலத்தில் விரிந்திடும் 'ரோமாபுரிப் பாண்டியன்' நாவலை வரலாற்றை மீட்டுருவாக்கிக் கலைஞர் எழுதியுள்ளார். பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டிற்கும் ரோமாபுரிக்கும் இடையில் நிலவிய உறவு என்ற கதையாடல் தமிழரின் தொன்மைக்கு அடையாளமாக விளங்குவதை நாவலாக்கியுள்ளதில் அரசியல் பொதிந்துள்ளது.

'பொன்னர் சங்கர்' நாவல் நாட்டார் வரலாறு, புராணியத்தன்மையுடன் அதியற்புத நிகழ்ச்சிகள் புனைவாக உருவாகி, வீரக் கதையாடலாக மாறியுள்ளதை விவரிக்கிறது. மனிதப் பண்புகளின் மாண்புகளை விளக்கிடும் கலைஞரின் நாவலாக்க முயற்சி, ஒருவகையில் வரலாற்றை மீட்டுருவாக்கிட முயன்றுள்ளது.

சாதி வேறுபாடுகளைக் கடந்து சமத்துவத்தைப் பேணிட வேண்டுமென்ற கருத்தை வரலாற்றுப் பின்புலத்தில் கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' நாவல் பதிவாக்கியுள்ளது.

அழகும் இளமையும் மிக்க கைம்பெண் எதிர்கொள்கின்ற அவலங்களையும் அவர்கள் மீது சுமத்தப்படும் கயமைகளைப் போக்கிட வேண்டுமென்றும் 'ஒரு மரம் பூத்தது' நாவல் சித்திரித்துள்ளது. சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்ட நிலையில் ஏற்படுகின்ற சிக்கல்களைத் திவாகர்- தேவகி கதையாடல்மூலம் கலைஞர் விவரித்துள்ளார்.

'வெள்ளிக்கிழமை' நாவலில் மூடநம்பிக்கை காரணமாகத் துயரமடையும் சராசரி மனிதர்கள், வெள்ளிக்கிழமை அன்று பெண் பார்க்க வரும் அழகப்பன் எதிர்கொள்ளும் அனுபவங்கள் தொடங்கி விரியும் நாவலில் மர்மங்களும் திடுக்கிடும் திருப்பங்களும் நிரம்பியுள்ளன. வெள்ளிக்கிழமை நாள் புனிதமானது; நல்ல செயல்கள் செய்திட ஏற்றது என்ற மூடநம்பிக்கையைத் தகர்த்திட வெள்ளிக்கிழமை நாவலைக் கலைஞர் எழுதியுள்ளார். கடவுள் நம்பிக்கை தேவையற்றது; உருவ வழிபாடு ஒழிக்கப்பட வேண்டியது; நாள் நட்சத்திரம் பார்த்தல் கூடாது போன்றவற்றை வலியுறுத்துகிற கலைஞரின் மூடநம்பிக்கைக்கு எதிரான குரல் நாவலில் பதிவாக்கியுள்ளது.

மூடநம்பிக்கையை எதிர்க்கும் வகையில் நிகழ்வுகள் அடங்கிய 'சுருளிமலை' நாவலில் சுவாரசியத்திற்காகச் சேர்க்கப்பட்ட செயற்கையான சம்பவங்கள் நிரம்பியுள்ளன.

'ஒரே ரத்தம்' நாவல் இன்றைய நவீன வாழ்க்கையில் சாதிக் கலவரங்களுக்குக் காரணமான சாதி வெறியின் பின்புலத்தில் விரிந்துள்ளது.

கலைஞரின் 'புதையல்' நாவல் பணத்தைத் தேடி அலையும் மனித மனங்களின் விநோதங்களையும் கொடூரங்களையும் பதிவாக்கியுள்ளது.

கலைஞர் எழுதிய சமூக நாவல்கள்: புதையல், சுருளிமலை, வெள்ளிக்கிழமை, இரத்தக்கண்ணீர், வான்கோழி, ஒரே ரத்தம், ஒரு மரம் பூத்தது.

கலைஞர் எழுதிய வரலாற்று நாவல்கள்: ரோமாபுரி பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம், பாயும்புலி, பண்டாரக வன்னியன், பொன்னர் சங்கர்.

தி.மு.கவின் அரசியலை மேடைகளில் முழங்கிய ஏ.வி.பி.ஆசைத்தம்பி நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். வாலிபப் பெரியார் என்று போற்றப்பட்ட ஆசைத்தம்பி அன்றைய காலகட்டத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளுக்கு எதிராக நாவல்களை எழுதினார். கேளிக்கைக்காகவும் பொழுதுபோக்கினுக்காகவும் வெகுஜன இதழ்களில் எழுதப்பட்ட நாவல்களுக்கு மாற்றாக நாவல்களைப் படைத்த ஏ.வி.பி.ஆசைத்தம்பிக்குப் பருண்மையான அரசியல் நோக்கமிருந்தது. 'கசந்த கரும்பு' நாவல், பராசக்தி திரைப்படத்தின் தொடர்ச்சியாக விரிந்துள்ளது. 'டாக்டர்' நாவலின் கதையாடலில் வடவர் தமிழகத்தைச் சுரண்டுதல், பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றம், மூடநம்பிக்கை எதிர்ப்பு, பாலியல் புரிதல் அற்ற கணவன் மனைவிக்கிடையே பிரிவு போன்றவை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏ.வி.பி.ஆசைத்தம்பி எழுதிய நாவல்கள் பின்வருமாறு: மனித தெய்வம், கசந்த கரும்பு, தந்தையின் ஆணை, காதலும் கண்ணீரும், சிலந்திக்கூடு, முள், கொலைகாரி, கேட்கவில்லை, டாக்டர், நினைவுச் சுழல், நடமாடுங் கல்லூரி, வெயிலும் நிழலும், காதல் மாளிகை, விந்திய வீரன், அரசகுமாரி, தியாகச்சுடர், அவள் வாழ்வு, ஆண்களை நம்பலாமா?, மனைவி கட்டிய தாலி, வறண்ட வாழ்க்கை, வாழ்வில் இன்பம், வாழ்க மணமக்கள், இரவில் வந்தவன், என் மாமி, கசப்பும் இனிப்பும், கிழக்கும் மேற்கும்.

கே.ஜி. இராதா மணாளன், பொது வாசிப்புக்குரிய, பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கொண்ட நாவல், நாடகங்களை எழுதினார். தி.மு.க. கட்சிக் கூட்டங்களில், மாநாடுகளில், இலக்கிய விழாக்களில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய இராதாமணாளனின் படைப்புகள் பரந்துபட்ட நிலையில் திராவிடக் கருத்தியலைப் பிரச்சாரம் செய்தன.

கே.ஜி. இராதாமணாளனின் 'அன்னம்' நாவலில் சாதிவெறி பின்புலமாக இருப்பினும் தமிழக குடும்ப அமைப்பில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலநிலை பதிவாகியுள்ளது. கன்னிப் பருவத்தை அடைந்த பெண்ணைக் கட்டுக்காவலோடு வீட்டிலேயே அடைத்து வைக்கின்றனர். அந்நிய ஆண்களைப் பார்ப்பதற்கோ, அவர்களோடு பேசுவதற்கோ, பெண்களுக்கு உரிமையில்லை. பலரோடு பழகிப் பார்த்தால்தானே அவள் மனம் விரியும். மணப்பதற்கு ஏற்றவன் என்ற தெளிவு பிறக்கும் என்று வசந்தா கடிதத்தில் குறிப்பிடுவது பெண்ணிய வாசிப்பில் முக்கியமானது. பெண்ணுக்குத் தனிப்பட்ட மனம் உண்டு, அவளுக்கென்று சுயமான தேர்வு தேவை என்ற

கருத்தை முன்வைத்திடும் நாவலாசிரியரின் கருத்து, அன்றையச் சமூகச் சூழலில் முக்கியமானது.

கே.ஜி. இராதாமணாளன் எழுதிய நாவல்கள் பின்வருமாறு: அன்னம், மனப்புயல், பாண்டியன், திருமேனிபாண்டியன், தாராவின் புன்னகை, கல்லறைக் குயில், இளவரசி, மறவர் குலத்து மலர்க்கொடி, கல்லறைக் குயில், பொற்சிலை, வீணை, சிவந்த கன்னம், தேன்மொழி, பாலைவனம், பெண், நீரோ, சபதம், மூடுபனி, களப்பலி, பசி, எழிலரசி கிளியோபாட்ரா, பாசக்கனல், அரக்கு மாளிகை, அரண்மனை, அழகிகள், உயிரோவியங்கள்.

திராவிட இயக்க நாவலாசிரியர்களில் டி.கே. சீனிவாசனின் எழுத்து தனித்துவமானது. டி.கே. சீனிவாசன் சாதி வேற்றுமை, சநாதன எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண்ணுரிமை, பகுத்தறிவு சார்ந்து திராவிட இயக்கக் கொள்கைகள் சார்ந்த படைப்புகளை எழுதியவர். மரபு வழிப்பட்ட குடும்பம், பெண்பற்றிய புனைவுகளை 'ஆடும் மாடும்' நாவல் புறக்கணித்துள்ளது. பால் சமத்துவமின்மை காரணமாகப் பெண்ணின் இருப்புப் புறக்கணிக்கப்படுவது, நாவலில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பத்மா, மோகனா, சுந்தரி ஆகிய மூன்று பெண்களை மையமாகக்கொண்டு விரியும் கதைக்களன் வாசகரை வாசிப்பின் வழியே விவாதத்திற்குள் இழுக்கின்றது. சுயமரியாதை இயக்கப் பின்புலம் மெல்லிய தொனியில் கதைப்போக்கில் வெளிப்படுகின்றது. தமிழகச் சூழலில் ஆண், பெண் உறவினை முன்னிறுத்தி, வாழ்க்கை குறித்த அடிப்படையிலான அம்சங்களைத் தத்துவப் பின்புலத்தில் விரித்திடும் கதைப்போக்கு இன்றைய வாசிப்பில் பெண் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றது. மோகனா என்ற பெண்ணை முன்வைத்து ஆண் மேலாதிக்கப் போக்கினை விமர்சித்துள்ள டி.கே.சீனிவாசனின் எழுத்து வீரியமானது.

நாவல் கருத்துத்தளத்தில் விவாதங்களுக்கு முன்னுரிமை தந்திருப்பதனால், ஆங்காங்கே இடம் பெற்றுள்ள கருத்துச் சிதறல்கள் முக்கியமானவையாக உள்ளன. அவற்றில் சில:

"அவளுக்கும் புகழுக்கும் இடையில் ஒரே ஒரு படுக்கையறை."

"கண்டபடி திரியும் காட்டு விலங்குகளிடம் இருந்து தப்பிக்கத்தான் பெண், குடும்பம் என்ற அமைப்பிற்குக் கட்டுப்பட்டு அடிமையாகி விட்டாள்".

"ஆணுடைய தொடர்பு மட்டும் ஏற்படாவிட்டால் பெண் பேயாகி விடுவாள். பெண்ணுடைய தொடர்பு ஏற்படாவிடில் ஆண் மிருகமாகி விடுவான்."

ஆணின் தேவைக்காகவே படைக்கப்பட்டவள் பெண். பெண்ணின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு குறித்த அக்கறை இல்லாமல், அவள்மீது அதிகாரம் செய்வது ஆணின் இயல்பு என நம்பிக்கொண்டிருக்கும் பொதுப்புத்தியைச் சிதைத்து அதிர்ச்சி மதிப்பீடுகளை உருவாக்கியுள்ளார், டி.கே.சீனிவாசன். பெண்ணைப் போற்றும் சமுதாயமே நாகரிகமடைந்த சமுதாயமாகக் கருதப்படும். அப்படிப் போற்றாத சமுதாயம் நசிந்து போய்க்கொண்டிருக்கிறது என்று பத்மா குறிப்பிடுவது, திராவிட இயக்கக் கருத்தின் வெளிப்பாடாகும். ஆடும் மாடும், ஊர்ந்தது உயர்ந்தால், மலர்ச்சியும் வளர்ச்சியும் போன்ற நாவல்களை டி.கே. சீனிவாசன் எழுதியுள்ளார்.

தி.மு.க.வின் அரசியலை முகவை மாவட்டத்தில் பிரச்சாரம் செய்த எஸ்.எஸ். தென்னரசுவின் எழுத்துக்கள், கண்ணதாசன் நடத்திய தென்றல் பத்திரிகையில் தொடங்கியது. தென்னரசு சமூக நீதி போராட்டப் பங்களிப்புகள், ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பு, மாவட்ட செயலாளர், சட்டமன்றப் பிரதிநிதி என அவருடைய அரசியல் செயல்பாடுகள் தொடர்ந்தன. எனினும் அவர் தனது படைப்பிலக்கியத்தையும் இடைவிடாமல் தொடர்ந்தார். தென்னரசு என்கிற பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். சிறுகதைகள், நாடகங்கள் புதினங்கள் போன்றவற்றைப் படைத்த தென்னரசு திராவிட இயக்கக் கருத்தியலைத் தன்னுடைய படைப்புகளில் ஆழமாகப் பதிவாக்கியுள்ளார். இன்று சேது நாடு எனக் குறிப்பிடப்படுகிற சிவகங்கைச் சீமையின் அரசியல், சமூக வாழ்க்கைப் பாடுகளைச் 'சேது நாட்டுச் செல்லக்கிளி' என்ற நாவலில் பதிவாக்கியுள்ளார்.

எஸ்.எஸ்.தென்னரசுவின் நாவல்கள் பின்வருமாறு: மலடி பெற்ற பிள்ளை, மான்கொம்பு, தங்கச்சி மடம், ஆனந்த பைரவி, கண்மணி, நகமும் சதையும், வைராக்கியம், ராஜபவனம், மயிலாடும் பாறை, செம்மாதுளை, கோபுர கலசம், சந்தனத்தேவன், சேது நாட்டு செல்லக்கிளி, துங்கபத்திரை, தைமூரின் காதலி, அவள் ஒரு கர்நாடகம், பாடகி, குஞ்சரத்தின் கதை, மிஸஸ். ராதா.

தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் க. அன்பழகன் எழுதிய சமூக நாவலின் பெயர் அழகரசி.

இராம. அரங்கண்ணல் எழுதியுள்ள நாவல்கள் தி.மு.கவின் அரசியல் கருத்துகளைப் பரப்புவதில் முக்கிய இடம் வகித்தன; சமூக சீர்திருத்தக் கருத்துகளுக்கு முன்னுரிமை அளித்தன. வெறுமனே கதைசொல்லலுக்கு அப்பால் அன்றைய காலகட்டத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும் நாவல்களின் கதையாடல்கள் விரிந்துள்ளன. வெண்ணிலா, கடிகாரம், அறுவடை, இதயதாகம் போன்ற நாவல்களை இராம. அரங்கண்ணல் எழுதியுள்ளார்.

தி.மு.க.வின் வளர்ச்சியில் இதழ்களின் மூலம் பங்காற்றியுள்ள தில்லை வில்லாளன் எழுதியுள்ள 'மனப்போர்' நாவல், சமூகப் பிரச்சினைகளைச் சித்திரிக்கிறது.

திராவிட இயக்கத்தினர் நாவல்கள் புனைந்தபோது அவை தமிழரின் கருத்துப் போக்கில் அழுத்தமான பாதிப்புகளை உருவாக்கின. பெருமபாலான நாவல்களில் நேரடியாகத் திராவிட இயக்கக் கருத்துகள் பிரச்சாரம் செய்யப்படவில்லை. கதையில் இடம்பெறும் சம்பவங்களின் வழியாகக் கருத்தியல் பிரச்சாரம் வெளிப்பட்டது. ஏழை - பணக்காரன் முரண், மூடநம்பிக்கைக்கு எதிரான குரல் போன்றவை வாசிப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தின; கட்சித் தொண்டர்களுக்கு இயக்கப் பணியாற்றப் புத்துணர்வைத் தந்தன. பொதுவாகப் பெரும்பாலான நாவல்கள் பிரச்சினைகளை மேலோட்டமாகவே அணுகின. இதனால் வெகுஜன வாசகர்கள் நாவலை வாசித்துவிட்டு உற்சாகம் அடைந்தனர். வாசகரைக் கவர்ந்திட வேண்டும் என்ற நோக்கில் அடுத்தடுத்த சம்பவங்களுடன் செயற்கையான கதைப்போக்கில் விரிந்திட்ட சில நாவல்கள் தட்டையாக உள்ளன. தாஸிகளின் மோசவலை, ஆடும் மாடும் ஆகிய இரு நாவல்கள் திராவிட இயக்கச் சார்புடைய நாவல்களில் தனித்துவமானவை.

திராவிட இயக்கப் படைப்பாளர்கள் தங்களுடைய படைப்புகளில் இதிகாசங்கள், புராணங்கள் மூலம் இதுவரை புனிதப்படுத்தப்பட்ட ஆகமங்கள், பார்ப்பனக் கடவுள்கள், மடாதிபதிகள், பூசாரிகள், இதிகாச மாந்தர்கள் போன்றோரைப் பகடிக்குள்ளாக்கினர். வைதிக சநாதனம், பண்பாட்டில் புனிதமாகப் புனைந்துரைத்தவற்றைக் கேலிக்குள்ளாக்கிக் கலகத்தைத் திராவிட இலக்கியப் படைப்புகள் தொடங்கி வைத்தன. திராவிட இலக்கியப் படைப்புகளில் பொதிந்திருந்த கேலியும் எள்ளலும் வைதிக சநாதன மதத்தை அழித்திடும் நோக்கத்தைக் கொண்டிருந்தன. திராவிட இலக்கியப் படைப்பாளர்கள் எழுதிய நாவல்களின் கதையாடலுக்குள் ஏழை, திருடன், ஆலைத் தொழிலாளி, வண்டிக்காரன், தெருப்பொறுக்கி, வேலைக்காரி, கூலிக்காரன், விலைமகள் போன்ற விளிம்புநிலையினர் இடம் பெற்றிருந்தனர். சமூகரீதியில் இதுவரை உயர்நிலை வகித்தவர்களின் உன்னதங்களை நாவல்கள்மூலம் பகடி செய்வதன்மூலம் சமூக மதிப்பீடுகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. ஏற்கனவே நிலவிய அதிகாரத்தின் வெளிப்பாடான பண்பாட்டினைப் புரட்டிப் போட்டுக் கலகம் செய்து கலகப் பண்பாட்டினைத் திராவிட இயக்க நாவலாசிரியர்கள் முன்வைத்தனர். திராவிட இயக்கத்தினரின் கலக இலக்கியப் படைப்புகள் மொழியைக் கட்டுடைத்தல், இலக்கண மீறல், கூச்சமில்லாத பேச்சு, படைப்பாளர் குறுக்கீடு, யதார்த்தமற்ற கதையாடல், மிகையான வருணனை, அடுக்குமொழி, முரட்டுப் பேச்சு போன்றவற்றின் கலவையாக அமைந்துள்ளன. காலங்காலமாக மதம், சாதி கட்டமைத்துள்ள பண்பாட்டின் முகத்திரையைக் கிழித்து அம்பலப்படுத்துவது என்ற இலக்கியச் செயல்பாட்டினைத் திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகள் முன்வைத்தன. இதனால் சநாதனத்தின் பின்புலத்தில் சமூக அடுக்கின் உச்சத்தில் அதிகாரத்துடன் வீற்றிருந்த பார்ப்பனியச் சார்பு எழுத்தாளர்கள், திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகளை முற்றாகப் புறக்கணிக்கும் அரசியல் நடைபெற்றது.


பொதுவாக ஒரு நோக்கம் கருதிப் படைக்கப்படுகின்ற படைப்புகள், அந்நோக்கம் நிறைவேறியவுடன் மதிப்பிழந்து விடுவது இயல்பானதாகும். இந்நிலைமைக்குத் திராவிட இயக்க நாவல்கள் விதிவிலக்கு அல்ல. தி.மு.க.வினர் 1967இல் தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் படைப்பாக்க முயற்சிகளைக் குறைக்கத் தொடங்கினர். இன்று திராவிட இயக்கக் கருத்துகளை நாவலின் வழியே வெளிப்படுத்த முயலும் படைப்பாளர் என்று யாருமில்லை. ஒருகாலத்தில் வாசகர்களிடையே பிரபலமடைந்திருந்த தி.மு.க. நாவலாசிரியர்களின் நாவல்கள், தமிழ்நாட்டில் திராவிட இயக்கக் கருத்துக்கள் பரவிட தளமிட்டன என்பதுதான் உண்மை. இன்றையச் சூழலில் திராவிட இயக்க நாவல்களை மறுவாசிப்புச் செய்யும்போது, கடந்தகாலத்தில் நிலவிய சமூக மதிப்பீடுகளையும் அரசியலையும் அறிந்திட சமூகப் பதிவுகளாக விளங்குகின்றன. அந்தவகையில் அவை வரலாற்று ஆவணங்கள்.

●

**கட்டுரையாளர்:எழுத்தாளர்**

# மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் புலங்களின் எல்லைகளைக் கலைத்தல்

மு. அறிவழகன்




தமிழில் இலக்கிய மானிடவியல்
ஆ. தனஞ்செயன் | விலை: ₹60
வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

பன்னெடுங்காலமாக மனித சமூகத்தையும் அதன் நடத்தைகளையும் புரிந்துகொள்ளவும், விளக்குவதற்கும் சமுதாயத் தத்துவவாதிகள் முயன்று வந்துள்ளனர். அதனைத் தெளிவாக விளக்குவதற்கான முயற்சிகள் அறிவொளிக் காலத்தில் உருவாகத் தொடங்கினாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தனித்தனியான கல்விப் புலங்கள் உருவாகி மனித சமூகம், பண்பாடு, மற்றும் நடத்தை குறித்துத் துல்லியமாக விவரிக்கும் முயற்சிகள் தோற்றம் கொண்டன. தற்போது, தனித்தனியான இக்கல்விப் புலங்களின் போதாமைகள் உணரப்பட்டு, கலப்புப்புல (inter-disciplinary) மற்றும் பல்-புலங்களின் (multi-disciplinary) துணைகொண்டு விவரிப்பதற்கானத் தேவைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில், ஆ.தனஞ்செயன் தன்னுடைய 'தமிழில் இலக்கிய மானிடவியல்' என்ற நூலில் தமிழின் தொகை நூல்களை மானிடவியல், சமூகவியல் துறைசார் கருத்தாக்கங்களின் உதவியுடன் இலக்கிய மானிடவியல் முறைமையைப் பயன்படுத்தி ஆராய்ந்துள்ளார். இந்நூலைக் குறித்த விமர்சனத்தை இக்கட்டுரை முன்வைக்கிறது.

ஆ. தனஞ்செயன் எழுதிய 'தமிழில் இலக்கிய மானிடவியல்' என்ற நூலானது, 2014 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. 2025 ஆம் ஆண்டில், பரிசல் பதிப்பகத்தால் இரண்டாம்

பதிப்பாக வந்துள்ளது. 166 பக்கங்களைக் கொண்டுள்ள இந்நூல் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. இதன் முதல் பகுதியில், இலக்கிய மானிடவியல் என்ற முறையியலையும், தமிழில் தோன்றிய இலக்கிய மானிடவியல் ஆய்வின் முன்னோடிகளைக் குறித்தும் விவரிக்கின்றார். மேலும், இலக்கிய மானிடவியல் முறையியலைப் பயன்படுத்தி தொல் தமிழ் இலக்கியங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். அது குறித்து விரிவாகக் காணலாம்.

## இலக்கிய மானிடவியல் எனும் முறையியல்

1980-களில், கதையாடல் வடிவங்களை முதன்மைத் தரவுகளாகக் கொண்டு அவற்றில் இடம்பெற்றுள்ள சமூக நிறுவனங்களைக் குறித்து ஆராய்வதே இலக்கிய மானிடவியல் என்ற முறையியலின் நோக்கமாக ஃபெர்னாண்டோ பொயத்தோஸ் அறிமுகம் செய்தார். மேலும், இலக்கியப் படைப்புகளில் இடம் பெறுகின்ற புலனுணர்வு சார்ந்த ஒழுங்கமைப்புகள் மற்றும் புரிந்துகொள்ளத்தக்க ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றை மானிடவியல் சார்ந்தத் தரவுகளாகப் பயன்படுத்திக் கொள்வது வலியுறுத்தப்படுகிறது. ஒரு இலக்கியப் பனுவலில் இடம்பெறக் கூடிய புலனுணர்வு சார்ந்த ஒழுங்கமைப்புகளில் வரிவடிவப் படுத்தக்கூடிய வாய்மொழி (verbal language), வரிவடிவப் படுத்த இயலாத மொழி (paralanguage), கதாபாத்திரங்களின் உடல்மொழிக் கூறுகள் (kinesics), கதைமாந்தர்களுக்கு இடையே காணப்படும் வெளிகள் (proxemics), விவரணையில் இடம்பெறக்கூடிய புழங்குப் பொருள்கள், கால விவரணைகள் ஆகியவற்றைக் குறிப்பனவாகும். புரிந்து கொள்ளத்தக்க ஒழுங்கமைப்புகள் என்பன "மனித நடத்தைகள் பலவற்றின் வாயிலாக வெளிப்படுத்தப்படும் குழு சார்ந்த நிகழ்வுகள், பருப்பொருள் படைப்புகள், கருத்துருவங்கள், ஏனைய பண்பாட்டுக் கூறுகள்" (பக்.15) போன்றனவற்றைக் குறிப்பிடுவனவாகும்.

## இலக்கியத்தின் சாத்தியப்பாடுகள்

மானிடவியல் ஆய்வில் களத்திற்குச் சென்று தகவல்கள் சேகரிக்கப்படுவது போன்று, இலக்கியப் படைப்புகளில் இருந்து தகவல்கள் திரட்டுவதனை இலக்கிய மானிடவியல் கவனப்படுத்துகிறது. இலக்கியப் படைப்புகள் என்பன தனிநபர்களின் படைப்புகளாக இருந்தாலும் அது குறிப்பிட்டதொரு பண்பாட்டுச் சூழலில் தோற்றம் கொள்வதனால் அந்தப் பண்பாட்டின் கூட்டொருமை (collective consciousness) யையோ அல்லது அதன் மேல் எழுப்பப்படும் விமர்சனத்தையோ ஆவணப்படுத்தக் கூடியதாக இருக்கும். இவ்வாறு ஆவணப்படுத்தும் பண்பை இலக்கியம் கொண்டிருப்பதனால் அதனை ஆய்வு செய்வதற்கான மூலாதாரமாகக் (source) கருத வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. சமூக உண்மையை (social reality) விவரிப்பதில் சமூக அறிவியலைக் காட்டிலும் இலக்கியப் படைப்புகளே அதிகமான சாத்தியங்களைக் கொண்டுள்ளன என்று எம்.எஸ். எஸ். பாண்டியன் (2008)[1] குறிப்பிடுகிறார்.

## நெடும்பாடல்களை ஆராய்ந்த முன்னோடிகள்

"தமிழில் இலக்கிய மானிடவியல்: தோற்றமும் அதன் முன்னோடிகளும்" என்ற தலைப்பிலான கட்டுரையில் தமிழின் தொன்மை இலக்கியப் பாடல்களை மானிடவியல், சமூகவியல், வரலாறு, தொல்லியல் ஆகிய புலங்களின் உதவியுடன் ஆராய்ந்து மிக நுட்பமான முடிவுகளை வழங்கிய க. கைலாசபதி, நா. வானமாமலை, கா. சிவத்தம்பி, தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோரைக் குறிப்பிடுகிறார். முன்னர் கூறியது போல, இலக்கிய மானிடவியல் என்ற முறையியலானது இலக்கியத்தில் மானிடவியல் தரவுகளைக் கண்டடைவதினை முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது என்று முன்பே பார்த்தோம். அதனுடைய மற்றொரு முக்கியமான அம்சம் பண்பாட்டிடை ஒப்பாய்வு (cross-cultural) ஆகும். உதாரணமாக, க. கைலாசபதி தன்னுடைய 'பேய்மகளிர்' கட்டுரையில் தமிழ்த் தொகை நூல்களிலிருந்து மூலாதாரங்களைச் சேகரித்து அவற்றை ஒத்த வழக்கங்கள் பிற பண்பாடுகளில் எவ்வாறெல்லாம் காணப்படுகின்றன என்பதை மானிடவியல் கோட்பாடுகளாகிய மந்திரம், ஆவியியம், இயற்கை வழிபாடு ஆகியவற்றின் துணைகொண்டு பண்பாட்டிடை ஒப்பாய்வு நோக்கில் ஆராய்ந்துள்ளார். 'பேய்மகளிர்' என்போரைக் குறித்து, காண்பார்க்கு அச்சத்தைக் கொடுப்பவர், பிணம் தின்பவர், குருதி குடிப்பவர், சுடுகாட்டை விரும்புபவர், மிருகங்களின் பிணத்தையும் தின்பவர், குடலை மாலையாகப் போடுபவர், துணங்கைக் கூத்தாடுபவர் போன்ற விவரணைகள் இடம்பெற்றுள்ளன. இவைகளைக் கலப்புப்புல உதவியுடன் ஆராய்ந்து, 'பேய்மகளிர்' என்போர் உண்மையான மகளிரேயாவர்; அவர்கள் பெண்தெய்வ வழிபாட்டிற்காக பிணந்தின்னும் சடங்கினைச் செய்யக்கூடிய மாந்திரீகளாயிருந்திருப்பர் என்று நிறுவுகிறார். இதே போன்று, கா. சுப்பிரமணியன் 'சங்ககாலச் சமுதாயம்' என்ற நூலில் தமிழின் தொகை நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள ஐந்திணைகளில் வாழ்ந்த இனக்குழு மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவற்றை பரந்துபட்டக் கருத்தாக்கங்களுக்குள்

1 M. S. S. Pandian. "Writing Ordinary Lives." Economic and Political Weekly, vol. 43, no. 38, 2008, pp. 34-40.

அடைக்காமல் குறிப்பாக மானிடவியல் கருத்தாக்கங்கள் மற்றும் கோட்பாடுகளைப் பயன்படுத்தித் துல்லியமாக விவரிக்கின்றார். உதாரணமாக, அச்சமூகங்களில் வழக்கில் இருந்த சடங்குகளை 'மந்திரச்சடங்கு, வளச்சடங்கு, மந்திர-வழிபாட்டுச் சடங்கு, வேட்டைச் சடங்கு' என்று விளக்குகின்றார். அத்துடன், அவர்களது தொல் பழைய சமய வழிபாடுகளில் குலகுறியியம் (totemism), ஆவியியம் (animism), உயிரியக் கொள்கை (animatism) ஆகியனவற்றின் கூறுகள் கலந்து காணப்படுவதைக் குறிப்பிட்டு, சங்ககாலச் சமுதாயம் எவ்வாறு இனக்குழு சமுதாயமாக இருந்துள்ளது என்று சான்றுகளின் துணைகொண்டு நிறுவுகிறார். தமிழில் இலக்கிய மானிடவியலின் முன்னோடியாக விளங்கியவர்களுக்கும், மேற்கத்திய இலக்கிய மானிடவியலாளர்களுக்கும் அடிப்படையில் காணப்படும் சில வேறுபாடுகளைத் தனஞ்செயன் சுட்டிக்காட்டியுள்ளார். மேற்கத்திய இலக்கிய மானிடவியலாளர்கள் கதையாடல் சார்ந்த இலக்கிய வடிவங்களில் இருந்து மானிடவியல் சார்ந்த மூலாதாரங்களை வருவித்துக்கொண்டனர். இங்கு, தமிழ் இலக்கியத்தில் புலமை பெற்றவர்கள் நெடும் பாடல்களில் இருந்து சான்றுகளைச் சேகரித்து மானிடவியல் புலம் மட்டுமின்றி சமூகவியல், தொல்லியல், வரலாறு ஆகிய புலங்களின் உதவியுடன் ஆராய்ந்துள்ளனர்.

### அலைகுடிக் கலைஞர்கள் – வறுமை

'ஆற்றுப்படை நூல்கள் காட்டும் அலைகுடிக் கலைஞர்கள் வாழ்வியல்' என்ற கட்டுரை அலைகுடிக் கலைஞர்களாகிய கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோர் நிகழ்த்தக்கூடிய கலைகளைக் குறித்து விரிவாகப் பேசுகின்றது. இதில், விறலியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் 'தனித்தனிக் கலைக் குழுவிற்குத் தலைமை தாங்கி'ச் செல்பவர்களாக இருந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். கூத்தர், பாணர், பொருநர் போன்றவர்களின் புரவலர்களாக அரசர்கள், வள்ளல்கள் மட்டும் விளங்கியுள்ளனர். இந்த அலைகுடிக் கலைஞர்கள் இசைக்கருவிகளை இசைக்கக்கூடிய/பாடல்களைப் பாடக்கூடிய உறவுமுறையைக்கொண்ட சமூகக்குழுக்களாக இருந்திருக்க வாய்ப்புள்ளது என்று கூறுகிறார். இந்த அலைகுடிக் கலைஞர்கள் தங்களுடைய உணவுகளைத் தாங்களே சேகரிக்கும் திறனையோ அல்லது உற்பத்தி செய்யும் திறனையோ கொண்டிருக்கவில்லை. தங்களுடைய நிகழ்த்துதலின் வழியே பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தக்கூடிய இரவலர் அலைக்குடிகளாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்தக் கலைஞர்கள் 'அரசு நிறுவனச் சார்புநிலைக் குடியினராகவே' இருந்துள்ளனர்; அப்படியிருந்தும், அவர்கள் பசியால் வாடிய உடல், கந்தல் ஆடைகளுடன் அலைந்து திரிந்ததாக ஆற்றுப்படை நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தை மானிடவியல், சமூகவியல் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் ஆகிய கல்விப் புலன்களின் துணைகொண்டு இந்தச் சிக்கலைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறார். அதன்படி, இக்கலைஞர்களின் நிகழ்த்துக் கலைகள் திணைசார் சமூகப் பண்பாட்டு வாழ்க்கையோடு தொடர்பில்லாத காரணத்தைச் சுட்டிக்காட்டுகிறார்: "... அரசின் புரவலாதரவு வாய்க்கப் பெற்றிருப்பினும், மக்களின் சமூக-பண்பாட்டுச் சூழல்களுக்கு அப்பால் இயங்கிய அந்நிகழ்த்துதல் கலைஞர்களுக்கு அவர்களின் ஆதரவு கிட்டியதே இல்லை. எனவே மன்னரின் உபசரிப்புக் காலம் நீங்கலாக, ஏனைய காலக்கட்டங்களில் பசியோடும் வறுமையோடும் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது" (ப. 48). சிறிய சமூகங்கள் (small-scale societies), சிக்கலான சமூகங்கள் (complex societies) ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஏற்பவே அச்சமூகங்களில் தோன்றக்கூடிய கலைகளின் வளர்ச்சியும், தன்மையும் அமைந்திருக்கும். இந்தச் சமூகவியல், மானிடவியல் கருத்தாக்கங்களுடன், நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் இடம்பெற்றுள்ள நிகழ்த்துதல் கோட்பாட்டின் பின்புலத்தில் தனஞ்செயன் இம்முடிவினை வருவித்துள்ளார். தற்காலத்தில் நாட்டார் நிகழ்த்துக்கலைகளில் வழிபாட்டுடன் நேரடித் தொடர்புடையன தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருவதையும், வழிபாட்டுடன் நேரடித் தொடர்பில்லாத கலைகள் மாறிவரும் சமூகப் பண்பாட்டு சூழலில் அழிந்துவரும் சூழலைக் கணக்கில் கொண்டு இங்கு பொருத்திக் காண்பதாகத் தோன்றுகிறது.

### சடங்கியல் நிகழ்த்துதல்: வெறியாட்டு

'பண்டைத் தமிழரின் சடங்கியல் நிகழ்த்துதல் மரபுகளின் இயல்பும் பரிமாணமும்' என்ற கட்டுரையில் தமிழ்த் தொகை நூல்களில் விவரணை செய்யப்பட்டுள்ள சடங்கியல் நிகழ்த்துதலாகிய 'வெறியாட்டு' குறித்து நிகழ்த்துதல் கோட்பாட்டுப் பின்புலத்தில் விளக்கமளித்துள்ளார். வெறியாட்டு குறித்து வெவ்வேறு சூழல்களில் பாடப்பெற்றுள்ள பாடல்களை நேரடியாக உற்றுநோக்கிய நிகழ்த்துதலாக அன்றி, நிகழ்த்துப் பனுவல் என்று மட்டும் கருதிக்கொண்டு ஆராய்கிறார். ஆனால், இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள விவரணைகளை நிகழ்த்துதல் சார்ந்த கருத்தாக்கங்களாகிய நிகழ்த்துனர்கள், நிகழ்த்துதலின் வகைமைகள், நிகழிடம் (அகவெளி, புறவெளி), நிகழ்த்துதல் சார்ந்த ஒப்பனைகள், சடங்கியல் நிகழ்த்துதல்கள்

மற்றும் ஆவிவயப்படுத்தல் (spirit possession) ஆகியவற்றின் துணைகொண்டு விரிவாக விளக்கும்போது வெறியாட்டு நிகழ்த்துதலின் பல பரிமாணங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. அந்த அடிப்படையில், இலக்கிய மானிடவியலின் அணுகுமுறை முக்கியத்துவமுடையதாக விளங்குகிறது.

### சிலப்பதிகாரத்தில் ஆவியேற்றம்

தற்போதைய தமிழ்ச்சூழலில், நாட்டார் வழிபாட்டு மரபில் சடங்கியல் நிகழ்த்துனர்கள் 'பூசாரி, மாந்திரீகப் பூசாரி, குறிசொல்லி, சாமியாடி, கோமரத்தடி' என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவை, சமயம் குறித்து மானிடவியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் கருத்தாக்கங்களாகிய 'ஆவிவயப்படுதல்' (spirit possession), ஆவி ஊடகத்தன்மை (spirit mediumship), மாந்திரீகம் (shamanism) போன்றவைகளுடன் தொடர்புடையவர்கள். இக்கருத்தாக்கங்களுக்கு இடையில் காணப்படும் வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, இவை தொல் தமிழ் இலக்கியங்களிலிருந்து சிலப்பதிகாரம் வரையில் எவ்வாறெல்லாம் விவரணை செய்யப்பட்டுள்ளன என்று ஆராய்ந்துள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களில் 'ஆவிவயப்படுத்தல்', 'மாந்திரீகம்' மற்றும் 'பரவசநிலைச் சமயம்' (ecstatic religion) ஆகியவற்றின் பண்புகள் காணப்படுவதைக் குறிப்பிடுகிறார். அதன் தொடர்ச்சியாக, சிலப்பதிகாரத்தில் 'ஆவிவயப்படுதல்', தெய்வமுற்றோரின் மெய்ப்பாடுகள், தெய்வமுற்று ஆடுதல் போன்றன சாலினி என்ற தேவராட்டி கொற்றவை வேடம் அணிந்து வழிபாடு நடத்துவதில் எவ்வாறு வெளிப்படுகிறது என்று ஆராய்ந்துள்ளார். மொத்தத்தில், பழந்தமிழ் இலக்கியங்கள் தொட்டு, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியப் பனுவல்களில் மட்டுமின்றி, சமகால நாட்டார் வழிபாடுகளில் தெய்வமுறுதல்/ஆவிவயப்படுதல் வழக்கிலுள்ளதன் தொடர்ச்சியை மானிடவியல் கருத்தாக்கங்களின் துணைகொண்டு நிறுவுகிறார்.

### பாலின வேறுபாடும் சமூகத் தகுநிலைகளும் (Gender and Social Status)

பழந்தமிழ் இலக்கியங்களில் பெண்கள் குறித்த விவரணைகள் விரிவாக இடம்பெற்றுள்ளன. இந்த விவரிப்புகளை மட்டும் மனதில் கொண்டு விளக்கமளிக்கையில், பண்டைய தமிழ்ச் சமூகம் என்பது ஏற்றத்தாழ்வுகளைக் குறைவாகக்கொண்ட ஒன்றாக இருந்துள்ளது என்ற பார்வையே மேலோங்கியுள்ளது. ஆனால், சமூகவியல் ஆய்வுகளில் மேக்ஸ் வெபர் (Max Weber) பயன்படுத்தியுள்ள கருத்தாக்கங்களாகிய சமூக அடுக்கமைவு (social stratification), தகுநிலை: பிறவித் தகுநிலை, எய்தப்பெற்றத் தகுநிலை (status: achieved status, ascribed status), பங்கு (role), அதிகாரம் (power) போன்றனவற்றைப் பயன்படுத்தி ஆராயும்போது அதன் விளக்கங்கள் சற்றுக் கூடுதலான புரிதலை உருவாக்குகிறது. அதாவது, வேந்தன், தந்தை, மனைவி/தாய், கொல்லன், காளை (வீரன்), புதல்வர், ஏவலர், சான்றோர் போன்றோரின் கடமை/பங்கு (role) என்னென்ன என்பது குறித்து விவரிக்கப்பட்ட பாடல்களைக் கொண்டு பண்டைய தமிழ்ச் சமூகம் என்பது 'ஓர் ஒருமைச் சமூகமாகத் திகழவில்லை'. அத்துடன், அச்சமூகமானது 'பன்முகத்தன்மை உடைய சமூகமாகத் திகழ்ந்தது', பாலின ஏற்றத்தாழ்வும் கொண்டிருந்துள்ளது என்று சமூகவியல் கருத்தாக்கங்களின் உதவியுடன் நிறுவுகிறார்.

### நெய்தல் மகளிர்

தொல் தமிழ் இலக்கியங்கள் தமிழின் திணைக் குடிகளுள் ஒன்றான பரதவர்களைக் குறித்து விரிவாகப் பேசுகின்றது. இச்சமூகமானது, எளிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தங்களது உணவுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டதனால் எளிய சமூகம் (simple society) என்று அழைக்கப்பட்டது. இது, மானிடவியலில் 'எழுத்தறிவுக்கு முந்தைய சமூகத்தினர்' (preliterate society), 'சமத்துவச் சமூகத்தினர்' (egalitarian society), 'எளிய தொழில்நுட்பக் குழுவினர்' (technologically simple society) என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சமூகத்தின் அடிப்படைப் பண்பு என்னவெனில், சமூகப் பொருளாதார அமைப்புகளில் ஓரளவு ஏற்றத்தாழ்வின்றி காணப்படக்கூடிய சமூக அமைப்பினைக் கொண்டிருக்கும். மீனவர்களின் எளிய தொழில்நுட்பக் கருவிகளாகிய மரக்கலங்களின் வகைகள், வலைகள், தூண்டில்கள் ஆகியன குறித்தும், மீன் பிடிக்கும் முறை பற்றியும் விவரிக்கக் கூடிய பாடல்கள் கணிசமாகக் காணப்படுகின்றன. இவற்றில், ஆண், பெண் ஆகிய இருபாலரின் வேலைப்பிரிவினைகள் இடம் பெற்றுள்ளன.

பொதுவாக, பரதவர் சமுதாயம் தந்தைவழிச் சமூகமாக இருந்துள்ளது. அந்தக் காரணத்தால் தான், ஆண்கள் தொழிற்கருவிகளையும், அதனைக் கையாளும் திறனையும் கைக்கொண்டுள்ளனர்; பரதவப் பெண்களோ பிடித்த மீன்களைப் பதப்படுத்துவது, சேகரிப்பது, உலர்த்துவது, விற்பனை செய்வது, பண்டமாற்றம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இச்சமூகத்தில், பெண்கள் ஆண்களை விடவும்

தங்கள் குடும்பப் பொருளியல் தேவைகளுக்காகக் கூடுதல் பங்களிப்பு செய்துள்ளதைப் பாடல்களில் வெளிப்படுத்துகின்றன. தற்கால நடைமுறைகளிலும் கூட, இந்த வகையிலான பங்களிப்பு தொடர்வதைப் பார்க்கலாம்.

இந்தச் செயல்பாட்டினை இரண்டு சமூகவியல் சார்ந்த கருத்தாக்கங்களின் துணைகொண்டு பகுப்பாய்வு செய்கின்றார். ஒன்று, 'வீடு சார்ந்த அகவெளி' (domestic sphere); மற்றொன்று, 'பொது வெளி' (public sphere). மீனவச் சமூகத்தில் மீன்பிடிக் கருவிகள், மீன் பிடித்தல் மற்றும் கலம் செலுத்துதல் போன்ற பணிகளில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். இது பொதுவெளியில் நடைபெறக்கூடிய செயல்களாகும். பரதவப் பெண்களைப் பொருத்தமட்டில், அவர்கள் முன்னர் கூறியது போன்று வீடு சார்ந்த அகவெளி தவிர்த்து பொது வெளிகளில் பொருளாதாரச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனடிப்படையில் காணும்போது, பரதவ மகளிர் பிற திணை மகளிரைக்காட்டிலும் கூடுதல் பண்புகளுடன் விவரிக்கப்பட்டுள்ளார்கள்; இவர்கள் இரண்டு வெளிகளிலும் இயங்கக்கூடியவர்களாக உள்ளனர். இதனை அடியொற்றிக் காணுகையில், பரதவ மகளிர் ஆண்களை விடவும் கூடுதலாகப் பொருளீட்டும் செயல்களில் மேற்கூறிய இரண்டு வெளிகளிலும் இயங்குகின்றனர். மொத்தத்தில், பரதவ ஆண், பெண் ஆகிய இருபாலினருக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வானது பிற சமூகங்களில் காணப்படுவதை விடவும் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது என்ற முடிவை மானிடவியல் கருத்தாக்கங்களின் துணையுடன் முன்வைக்கிறார்.

## கதையாடல் சார்ந்த இலக்கிய வகைமைகள்

கதையாடல் சார்ந்த இலக்கிய வடிவங்களைக் குறித்து ஆராய்வதே மேற்கத்திய இலக்கிய மானிடவியலின் தனித்துவமாகும் என்று முன்னமே கண்டோம். அதனடிப்படையில், இமையத்தின் 'செடல்', ஜோடி குரூஸின் 'ஆழி சூழ் உலகு' ஆகிய இரண்டு புதினங்களை (novel) எடுத்துக்கொண்டு அவற்றில் வெளிப்படும் சமூக ஆவணங்களைக் குறித்து விவரிக்கின்றார். 'செடல்' நாவலில் நாட்டார் வழிபாட்டுடன் தொடர்புடைய 'பொட்டுக்கட்டுதல்' என்ற சடங்கியல் நிகழ்வு மூலமாக நிலவுடைமைச் சாதியினர் எவ்வாறு ஒடுக்கப்பட்டச் சமூகத்துப் பெண்களை நம்பிக்கைகளின் பெயரால் ஆதிக்கம் செலுத்தி பாலியல் ரீதியாகச் சுரண்டுகின்றனர்; ஒடுக்கப்பட்டச் சாதிகளைச் சேர்ந்த நாட்டார் கூத்து மரபைச் சார்ந்த கலைஞர்களை அவர்கள் சாதிகளைச் சார்ந்தவர்களால் இரண்டாம் தாரமானவர்களாகக் கருதுவதும், கிராமங்களில் அக்கலைஞர்களைத் தீண்டாமை உணர்வுடன் எவ்வாறு அணுகுகின்றனர் என்பதைக் குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளார். ஜோடி குரூஸின் 'ஆழி சூழ் உலகு' புதினத்தில் பரதவர்களின் வாழ்வில் கத்தோலிக்கச் சமயம் எவ்வாறு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பது குறித்து விரிவாக விவரித்த போதிலும் பூர்வீக சமயம் சார்ந்த சமய மரபுகள், நம்பிக்கைகள், மாந்திரீகச் சடங்குகள் போன்றன எவ்வாறு அவர்களிடம் வெளிப்படுகின்றன என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், பரதவர்களின் நினைவுகளிலிருந்து எவ்வாறு அவர்களுடைய பழைய மரபுகள் வெளிப்படுகின்றன; அவர்களிடம் காணப்படும் 'கலகக்குரலும் தேவதூஷணமும்' எந்தெந்தச் சமயங்களில் மேலெழுகின்றன என்பதும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

## முடிவுரை

'தமிழில் இலக்கிய மானிடவியல்' என்ற நூலானது இலக்கிய மானிடவியல் என்ற அணுகுமுறையைக் குறித்து விலாவாரியாக அது குறித்த வரையறை, கதையாடல் சார்ந்த இலக்கிய வகைமைகளில் வெளிப்படக்கூடிய இனவரைவியல் தகவல்கள், கலப்புப்புல அணுகுமுறைகளைக் கைக்கொள்ள வேண்டியதன் அவசியம் என்று அறிமுகம் செய்கின்றது. இவ்வாறு அறிமுகம் செய்வதுடன் நின்று விடாமல் தமிழ்ச் சூழலில் பழந்தமிழ் இலக்கியங்களைக் குறித்து கலப்புப்புலக் கருத்தாக்கங்களின் உதவியுடன் ஆராய்ந்துள்ள முன்னோடிகளையும், அவர்களின் பங்களிப்புகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். அந்தப் பங்களிப்புகளானது, இலக்கியப் பனுவலாக மட்டுமே அணுகியதிலிருந்து மாறுபட்ட, துல்லியமான புரிதலை வழங்கியுள்ளது. தனஞ்செயன் பழந்தமிழ்ப் பாடல்களை பிற கல்விப்புலக் கருத்தாக்கங்களின் உதவியுடன் நுட்பமான விளக்கங்களைத் தந்துள்ளார். மேற்கத்திய இலக்கிய மானிடவியல் பரிந்துரைக்கக்கூடிய கதையாடல் சார்ந்த இரண்டு புதினங்களை எடுத்துக்கொண்டு அதில் வெளிப்படக்கூடிய சமூக ஆவண விவரங்களைக் குறித்து ஆராய்கின்றது. மொத்தத்தில், தனஞ்செயனின் நூலானது மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் புலன்களில் எல்லைகளைக் கலைத்து ஆய்வுகள் விரிவடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. அந்த அடிப்படையில் காணும்பொழுது, தமிழியல் ஆய்வுகளை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்துவதற்கான தேவையை வலியுறுத்தும் நூலாக விளங்குகிறது.

●

**உதவிப்பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் துறை,**
**தூய. சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.**

அஞ்சலி

# குறிஞ்சிச் செல்வர்



**டாக்டர் த.அறம்**

குறிஞ்சிச் செல்வர் கொ.மா.கோதண்டம் அவர்கள் ஒரு எளிய பாட்டாளியாக தன் வாழ்வைத் தொடங்கி தமிழ் உலகம் அறிந்த படைப்பாளியாக விளங்கியவர். இளமைப் பருவத்தில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்ற குறிஞ்சிச் செல்வர் குடும்ப வறுமையின் காரணமாக ஒரு பெட்டிக் கடையில் குழந்தைத் தொழிலாளியாக வேலை செய்தார். தன் வயது குழந்தைகள் பள்ளிக்கு செல்வதை மிக ஏக்கத்துடன் கவனித்தவர், தன்னுடைய பணி நேரம், தூங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் கையில் புத்தகத்துடன் ஏதாவது ஒரு வாசக சாலையில் படித்துக் கொண்டிருந்தார். 'கண்டது கற்க பண்டிதனாவான்', 'பல நாள் வாசகன் ஒருநாள் எழுத்தாளன்' என்ற பழமொழிகளை மனதில் நிறுத்தி தொடர்ந்து நூல்களை வாசித்தார்.

தனது 17-வது வயதில் பஞ்சாலைத் தொழிலாளியாக தன்னுடைய பணியைத் தொடர்ந்தார். சென்னை மாகாணத்தின் முன்னாள் முதல்வர் திரு.பி.எஸ்.குமாரசாமி ராஜா அவர்கள் தன்னுடைய ராஜபாளையம் இல்லத்தை காந்தி கலை மன்ற நூலகமாக மாற்றினார். அங்கு செல்வதை தன்னுடைய வழக்கமாக மாற்றிய குறிஞ்சிச் செல்வர், அந்த நேரத்தில் தி.மு.க சார்பாக வெளிவந்த வார, மாத இதழ்களை தொடர்ந்து வாசித்ததின் காரணமாக திராவிட இயக்கத்தின்பால் பற்று கொண்டார். ராஜபாளையத்திற்கு அறிஞர் அண்ணா வந்தபோது அவரை நேரில் சந்தித்து உரையாடினார்.

எல்லா தொழிற்சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள் குறித்து உரையாடி வந்தார். இறுதியில் ஏஐடியுசி-ல் இணைந்து செயல்பட்டார். தான் பணியாற்றிய பஞ்சாலையில் தொழிலாளர்களுக்கான நூலகம் ஒன்றை ஆலை நிர்வாகத்திடம் பலமுறை வலியுறுத்தி ஏற்பாடு செய்து தந்தார். தன்னுடன் பணிபுரியும் சக தொழிலாளி திரு பூ.அ.துரைராஜா அவர்களையும் தன்னுடைய இலக்கியப் பயணத்தில் தோழராக இணைத்து படைப்பாளியாக மாற்றினார். காந்தி கலை மன்ற நூலகத்தில் இவருடைய இலக்கிய ஆசான் பன்மொழிப் புலவர் மு.கு. ஜெகநாத ராஜா அவர்களை சந்தித்தார். தியாகி பி.எஸ்.வசந்தன் மற்றும் ஜெகநாதராஜா இருவரும் இணைந்து துவங்கிய 'தமிழ் வளர்ச்சி சங்கம்' அமைப்பின் சார்பாக நடந்த கவிதை, சிறுகதை நாடகப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகளை வென்றார். இந்த காலகட்டத்தில் ராஜபாளையம் நிகழ்ச்சியில் உரையாற்ற வந்த இலக்கியப் பேராசான் ஜீவானந்தம் அவர்களுடன் இவருக்கு தொடர்பு ஏற்பட்டது.

குறிஞ்சிச் செல்வர் முதலில் கலைமகள் இதழில் தொடர்ந்து துணுக்குகள் எழுதி வந்தார். பின்னர் தாமரை, செம்மலர், தீபம், அமுதசுரபி, கல்கி, ஜனசக்தி, தமிழ் முரசு, தினமணி, தினமணிச் சுடர், தினமணிக் கதிர் உள்ளிட்ட 80-க்கும் மேற்பட்ட இதழ்களில் அவரது படைப்புகள் தொடர்ந்து வெளிவந்தன. இந்தக் காலகட்டத்தில் மு.கு. ஜகநாதராஜா ஆரம்பித்த மணிமேகலை மன்றத்தில் இணைந்து பொதுச்செயலாளர் மற்றும் தலைவராக சென்ற ஆண்டு வரை மிகச் சிறப்பாக செயல்பட்டு நிகழ்வுகளை நடத்தினார். தன்னுடைய இல்லத்தை

'சாத்தனார் இல்லம்' என பெயர் மாற்றினார். அந்த இல்லத்தில் திருக்குறள் சிறார் பயிற்சி கழகம் ஆரம்பித்து வாரம் ஒரு முறை திருக்குறள் வகுப்பு எடுத்தார். சிறுவர்களுக்காக கோகுலம் சிறுவர் சங்கத்தைத் தொடங்கி தொடர்ந்து நடத்தினார்.

தன்னுடைய இணையர் திருமதி ராஜேஸ்வரி அவர்களுடன் இணைந்து பெண்களுக்கான வாசுகி மாதர் சங்கம் தோற்றுவித்தார். இந்த சங்கங்களின் சார்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளை அருகில் உள்ள திருநெல்வேலி, மதுரை, திருச்சி மாநாடு நிலையங்களுக்கு அழைத்துச் சென்று நிகழ்ச்சிகளை நடத்தினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கிளையைத் தோற்றுவித்து நீண்ட காலம் அதன் பொறுப்பாளராக செயலாற்றினார். அதன் மாநிலக் குழு உறுப்பினராகவும், தலைமைக்குழு உறுப்பினராகவும் பணிபுரிந்தார். மலைவாழ் மக்கள் நல சங்கம் தோற்றுவித்து அய்யனார் கோவில் படிவர்களுக்கு பல நல உதவிகளை பெற்றுத் தந்தார்.

தன்னுடைய படைப்புகளாக 'ஏலச்சிகரம்', 'ஜன்ம பூமிகள்', 'குறிஞ்சாம்பூ போன்ற நாவல்களையும், 'ஆரண்ய காண்டம்', 'மலையின் மைந்தர்கள்', வெடிக்கத் துடிக்கும் வேர் பலாக்கள்'. 'காட்டுக் குயில்கள்' போன்ற சிறுகதை தொகுப்புகளையும், 'நீலனும் மலைப்பாம்பும், 'நீலன் நமது தோழன், எங்கிருந்தோ வந்தான்', 'திக்குத் தெரியாத காட்டில்', 'பிறந்த பூமி' போன்ற சிறார் படைப்புகளையும், புனித பூமி' என்ற நாடகத்தையும், 'தியாகி அரங்கசாமி ராஜா வரலாறு' என்ற வரலாற்று நூலையும், 'நமது வீடு நல்ல மருந்தகம்', 'நமக்கு நாமே நல்லதொரு மருத்துவர்', 'இயற்கை உணவும் தீரும் நோய்களும் போன்ற மருத்துவ நூல்கள் உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்ட நூல்களை படைத்துள்ளார்.

ஒன்றிய அரசின் குடியரசுத் தலைவர் பரிசு இவருடைய 'ஆரண்ய காண்டம்' நூலுக்கு கிடைத்தது. 2012-ஆம் ஆண்டுக்கான பால சாகித்ய அகாடமி விருது 'காட்டுக்குள்ளே இசை விழா' என்ற நூலுக்கு வழங்கப்பட்டது. 2022-ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்டது. 2025 ஏப்ரல் 5 அன்று இவரது படைப்புகள் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது. இது தவிர ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார். இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் கலாநிதி சிவத்தம்பி. டொமினிக் ஜீவா, சே.யோகநாதன் போன்றவருடன் மிக நெருங்கிய நட்பில் இருந்தார். இதன் காரணமாக 1981-ஆம் ஆண்டு இலங்கை பயணம் மேற்கொண்டு அங்குள்ள பல்வேறு கல்லூரிகள் மற்றும் தமிழ் சங்கங்களில் உரை நிகழ்த்தினார்.

இவர் தன்னுடைய படைப்புகளுக்காக அய்யனார் கோவில் பளியர் இன மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு சென்று, அவர்களுடன் தங்கி அவர்களின் வாழ்வை நுட்பமாக கவனித்து படைப்புகளை வழங்கினார். அதைப் போலவே ஏலக்காய் தோட்டத் தொழிலாளர்களோடு தங்கி, அவர்கள் வாழ்வின் துயரங்களையும், அவர்களின் வாழ்வு, சுயநலவாதிகளால் எவ்வாறு சூறையாடப்படுகிறது என்பதையும் நுணுக்கமாக தன்னுடைய படைப்புகளில் சித்தரித்தார்.

இவருடைய ஆரண்ய காண்டத்தில் உள்ள சிறுகதைகளை அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுப்பு அவர்கள் வாசித்து, அன்றைய அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணி முத்து அவர்களிடம் மலை வாழ் மக்களின் துயரங்களை எடுத்துக் கூறி செண்பகத் தோப்பு மலைவாசிகளுக்கு வீடுகளைப் பெற்று தந்தார். பல அரிய வகை தாவரங்கள் குறித்தும், விலங்குகளின் பழக்கவழக்கங்கள் குறித்து மலைவாழ் மக்களின் வினோதமான மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் பாடல்களை பதிவேற்றினார். இதனால் தான் கி.ராஜநாராயணன் இவரை 'இருபதாம் நூற்றாண்டின் குறிஞ்சிக் கபிலர்', என்றும் ந.பிச்சைமூர்த்தி 'குறிஞ்சிக்கு ஒரு கோதண்டம்' என்றும் புகழுரை வழங்கினர்.

எழுத்தாளர்கள் தி.க.சி. வல்லிக்கண்ணன், பேராசிரியர் நா.வானமாமலை, திருக்குறள் முனுசாமி, அழ.வள்ளியப்பா, பொன்னீலன், மேலாண்மை பொன்னுச்சாமி, தனுஷ்கோடி ராமசாமி, தமிழ்ச்செல்வன் முதல் இன்றைய இளம் எழுத்தாளர்கள் வரை நட்பை பேணி வந்தார். தன்னை சந்திக்கும் ஒவ்வொரு நபர்களையும், எழுதுவதற்கு உத்வேகம் தந்தார். பல இளம் படைப்பாளிகளின் படைப்புகள் வெளிவர உதவிகரமாக இருந்தார்.

எளிமை, அன்பு, பணிவு அவரது அடையாளமாக இருந்தது. தன்னுடைய மூத்த மகனுக்கு குறள்அமுதன் என பெயரிட்டார். இரண்டாவது மகனுக்கு இளங்கோ என பெயரிட்டார். இணையர் திருமதி ராஜேஸ்வரி உட்பட இரண்டு மகன்களும் படைப்பாளிகளாக விளங்குகின்றனர். தன்னுடைய குடும்பத்தையே இலக்கியக் குடும்பமாக மாற்றினார். 1938 செப்டம்பர் 15-ல் பிறந்த குறிஞ்சிச் செல்வர் தனது 87-வது வயதில் 2025 அக்டோபர் 4-ல் இயற்கை எய்தினார். மலைவாழ் மக்களின் துயரங்களையும், ஏலத்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வின் சிக்கல்களையும் முதன் முதலில் இலக்கியத்தில் பதிவு செய்த குறிஞ்சிச் செல்வர் புகழ் தமிழ் இலக்கிய உலகில் நிலைத்திருக்கும்.

●

**கட்டுரையாளர்: மருத்துவர், எழுத்தாளர், கஇபெம மாநிலச் பொதுச் செயலாளர்.**





# கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் சாதியச் சிக்கல்கள்

**க. உஷாநந்தினி**

**முனைவர் ப. பாலமுருகன்**

கவிஞர்கள் காலந்தோறும் தம் கவிதைகளில் காதல், அன்பு, இயற்கை, சமூகம், அரசியல், குடும்பம், வறுமை, மக்கள் ஒற்றுமை குறித்து எழுதியுள்ளார்கள். அதேபோல் அன்றாடம் நடக்கும் நாட்டு நடப்புகள் குறித்து தங்களது கருத்துகளை கவிஞர்கள் பதிவு செய்துள்ளார்கள். குறிப்பாக சாதி மனிதர்களிடையே பாகுபாடுகளை உருவாக்கி ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதும் சமூக ஒற்றுமைக்கு இடையூறாகவும், மக்கள் வளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கிறது. இந்நிலைகள் குறித்து தங்களது கோபத்தை தங்களது கவிதைகளில் கவிஞர்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். இன்றைய சூழலில் சாதியம் பல்வேறு வடிவங்களில் மக்களைப் பிளவுபடுத்தி வருகிறது. இக்கொடுமைகளை கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்கள் தனது கவிதை நூல்களில் சாதியம் குறித்து கோபமாகவும், கேளிக்கையாவும், மிகுந்த வேதனையோடும் பதிவு செய்துள்ளார். கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் உள்ள சாதிய சிக்கல்கள் குறித்து இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கவிஞர் தங்கம் மூர்த்தியின் காதல் கவிதைகள் இருவேறு பிரிவின் உள்ளங்களின் எண்ணங்களை எடுத்துக்காட்டும் எண்ணப்பேழைகளாய் மணம் வீசி படிப்போரின் மனதில் இலக்கிய இன்பமாய் மனங்களின் பரிமாணங்களை நமக்கு விளக்குகின்றன. இதனை,

**"காதல்**

**இல்லையேல்**

**சாதல்.**

**காதல்**

**இருந்தாலும்**

**சாதல்." (தே.தே.ப.60)**

என்னும் கவிதை புலப்படுத்தும்.

காதல் வாழ்வியல் இலக்கியங்களில் களவு, கற்பு என இரு நிலைகளைக் கொண்டுள்ளது. காதல் மலர்ந்து தலைவனும் தலைவியும் சாதியால் படுகின்ற வேதனைகளை எடுத்துரைத்துள்ளார்.

சாதிய அடக்குமுறைகள் காலங்காலமாகத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதனைக் கண்ட கவிஞர் தங்கம்மூர்த்தி சாதி குறித்துப் பின் வருமாறு கவிதை வடிக்கிறார்.

காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே கம்பும் தடியுமாய் மிரட்டி ஒடுக்கும் சமூகம் இன்னும் மாறவே இல்லை. அதனால், காதல் ஒன்றும் தன் சக்தியை இழந்து அழிந்து விடவுமில்லை. காதலர்கள் தோற்கலாம். ஆனால், காதல் என்றும் தோற்பதே இல்லை. அது அவரவர் மனங்களில் மணம் வீசிக் கொண்டுதான் இருக்கும். சாதி, மத பேதம் காட்டி மனித குலம் காதலின் உண்மைத்தன்மையை உணராமல் நசுக்கிப் போடும் நிலையைக் கவிஞர்,

**"காதலின் தலையில்**

**அட்சதை தூவும்**

**கரங்கள் இன்னும்**

**தோன்ற வேண்டும்.**

**சாதிப் பேயை**

**சாம்பலாய் போடும்**

**தீயில் நெய்யை**

**ஊற்ற வேண்டும்" (த.மூ.க.ப.54)**

என்று எடுத்துரைக்கிறார்.

மேலும், சமூகத்தின் படிநிலைகளில் தோன்றிய வேறுபாடுகளை, முரண்களை, சமூக அவலங்களை அவரது கவிதைகள் எடுத்துரைக்கின்றன. ஒவ்வோர் ஊர்களிலும் தேநீர்க் கடைகள்தோறும் இரட்டைக் குவளை முறை இருப்பதனைப் பின்வரும் கவிதை மூலம் சாடுகிறார்.

**"தேசம்**

**ஒரு கவலை**

**இல்லாமல்**

**இருக்க வேண்டுமெனில்**

**இருகுவளை**

**இல்லாமல்**

**இருக்க வேண்டும்." (பொ.பெ.ம.ப.24)**

என்ற கவிதை அமைந்துள்ளது. மற்றொரு கவிதையில்,

**"பகை கொள்வதில்லை**

**பழக்கடை ஈக்களும்**

**சாக்கடை ஈக்களும்" (பொ.பெ.ம.ப.31)**

என்று மனிதப் பிறவிகளுக்கு எடுத்துரைக்கிறார்.

### மத ஒற்றுமை

மதம் மனிதனிடம் உள்ள மனித நேயத்தை வெளிக்கொணர்கிறது. சமூகத்தில் வாழும் சக மனிதர்களுடன் இணக்கமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ உதவுகிறது. இது தனிமனிதனுக்கும் தெய்வீகத்திற்கும் இடையிலான பிணைப்பையும் வேற்றுமையில் ஒற்றுமையையும் இது காட்டுகிறது. அன்பு, தியாகம், சேவை மற்றும் நேர்மை ஆகியவை மதத்தின் முக்கிய அங்கங்கள் என்னும் மத ஒற்றுமையின் அவசியத்தை கவிதைகளின் வழி விளக்குகிறார் கவிஞர்.

**"தேவாலயத்துக்**

**கற்கண்டோ**

**பள்ளிவாசல்**

**சர்க்கரையோ**

**பெருமாள் கோவில்**

**பொங்கலோ**

**எதுவென்றாலும்**

**இனிப்பாய் இருக்கிறது.**

**அதில்**

**அன்பைக் கலந்தால்**

**அமுதமாகிறது.**

**மதத்தைக் கலந்தால்**

**விஷமாகிறது" (எ.ப.நா.ப.88)**

என்று மதங்களின் ஒற்றுமையை வலியுறுத்துகிறார்.

மேலும்,

**"வறுமைத் தீ**

**வன்முறைத் தீ**

**இனத்தீ**

மதத்தீ என

தேசம் எப்போதும்

வெளிச்சத்தில்

இருட்டில் மனிதர்கள்" ( த.மூ.க.ப.115 )

என்றுரைக்கிறார். மேலும், சாதிச் சண்டைகளால் நகரெங்கும் பல்வேறு வகுப்பினரின் இரத்தம் ஓடுவதைத் தடுக்கத் தாமிரபரணி,

"சாதி ரத்தம் மிதப்பதை நிறுத்துவோம்"

(க.ந.கா.ப.124)

என்று தென்மாவட்டக் கலவரங்கள் குறித்த நிகழ்வைப் பதிவு செய்கிறார் கவிஞர் தங்கம் மூர்த்தி.

## சாதி மத வேற்றுமை:

மனித வாழ்வில் சக மனிதனை மதித்து, அன்பு செலுத்தி வாழ்ந்த வரை சமூகம் அமைதியுடனும் முன்னேற்றப் பாதையில் எவ்விதத் தடையுமின்றி வளர்ந்தும் வந்தது. எப்போது சாதி, மத, இன வேற்றுமைகள் உள்ளே நுழைந்ததோ அந்த நாள் முதல் மனிதகுல மாண்புகள் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அதுமட்டுமன்றி இவ்வேறுபாடுகளால் அழிவுதான் மிச்சம் என்பதை,

"குடிசைகளின் மீது

சாதி நடந்தது

சாம்பல் கிடந்தது

மதம் நடந்தது

ரதம் நடந்தது

அங்கங்கே ரணம் கிடந்தது" (த.மூ.க.ப.117-118)

எனக் கூறி வருந்துகிறார்.

"கலவரத்தில்

வீடுகள் எரிந்தன

பீனிக்சாய் சாதிகள்" ( த.மூ.க.ப.72 )

எனக் கலவரங்களால் சாதாரண மனிதர்கள் பாதிக்கப்படுவதை எடுத்துரைக்கிறார்.

## காதலும் திருமணமும்

காதல் என்ற உணர்வு நிலையானதில்லை. காலத்திற்கு காலம் மாறக்கூடியது. பொருளாதாரச் சுதந்திரம், பிள்ளைப்பேறு இவையே திருமணத்தின் நோக்கங்கள். காதல் மணங்கள் இந்நோக்கங்களை நிறைவேற்றுவதில் உண்டாக்கலாம். எனவே, 'கல்வி, தொழில், பொருளாதார நிலை ஆகியவை குறித்த ஒரு தெளிவுடன் மனமொப்பி ஆண், பெண் இருவரும் ஒன்றாக ஒப்பந்தம் செய்தால் அதுவே காதல் மணத்தைவிடச் சிறப்பாக இருக்கும்"[11] என்பார் திரு.வி.க.

உலகில் காதல்தான் சமதர்மத்தை உருவாக்குகிறது என்பதை அறிந்து கொள்ள இயலுகிறது.

கவிஞர் தங்கம் மூர்த்தி தம் கவிதையில் காதல் குறித்த புதிய பரிமாணத்தை எடுத்துரைக்கக் காணலாம்.

கொஞ்சம்

காதலைக் கொண்டுவந்து

கொட்டுங்கள்

மண்ணுக்குள்ளிருந்து

புதிய ஊற்று ஒன்று

புறப்பட்டுவரும்

பாவநதிகளையும்

புனிதப் படுத்தும்

ஜீவநதிதான்

காதல். (க.ந.கா.பக்.14-17)

என்னும் கவிதையில் எடுத்துரைப்பார்.

கவிஞர் தங்கம் மூர்த்தி தம்முடைய கவிதை நூல்களில் சமூகத்தில் கேடு உருவாக்கும் சாதியக் கொடுமைகளை வெறுக்கிறார். சாதிய அமைப்பில் கீழ், மேல் என்னும் பாகுபாடு உயிர்களை வதைக்கிறது. காதலை எதிர்க்கிறது. வன்மத்தைச் சாதியப் பிரிவு கொண்டாடுவதால் சமத்துவமின்றிச் சமூகம் மிகுந்த சீர்கேட்டிற்கு ஆட்படுகிறது. சமூகப் பன்மைக்குக் காதலே சிறந்த வழி என்பதைக் கவிஞர் தங்கம் மூர்த்தி கவிதைகள் எடுத்துரைக்கக் காணலாம்.

## கல்வி நிலையங்களில் சாதி

சாதி பொதுச் சமூகத்தில் புரையோடிப்போயிருப்பதை கண்கூடாகக் காண்கிறோம். மதிப்பெண் அதிகமாக எடுத்த பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மாணவரை ஆதிக்க சாதியென்று சொல்லப்படும் மாணவர்கள் தாக்குதல் நடத்துவதும், கல்வி நிலையங்களுக்குள் வளரும் இளம் தலைமுறையான மாணவர்கள் தங்களுக்கிடையே சாதியால் பிரிந்து கிடப்பதும் குறித்து கவிஞர் தங்கம் மூர்த்தி மிகுந்த வேதனையடைகிறார். வரும் காலத் தலைமுறையை மனித நேயமிக்க மனிதனாக உருவாக்க வேண்டிய கல்வி வெறும் மதிப்பெண் மட்டுமே எடுக்கும்

எந்திரமாக உருவாகி வருவதை கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்கள்,

**மாணவனாகும் பயிற்சியில்**
**வென்றுவிடுகிறார்கள்**
**மனிதனாகும் முயற்சியில்**
**தோற்றுவிடுகிறார்கள்.**
**மதிப்பெண்களைத் துரத்துகிறது**
**கல்வி.**

(பக் 55 - பொய்யெனப் பெய்யும் மழை)

மேலும்

**மாணவர்களும் ஆசிரியர்களும்**
**வேறு வேறு இனங்கள்**
**வகுப்புக் கலவரங்கள்.**

( பக் 76 - முதலில் பூத்த ரோஜா )

என்ற கவிதை மூலம் வகுப்பறையில் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களிடமும் சாதியப்பார்வை இருப்பதையும், சாதியின் பெயரில் மாணவர்களை அணுகும் பார்வை குறித்தும் மிக ஆழமாகப் பதிவு செய்கிறார். ஆசிரியர்களும் மாணவர்களும் வேறு வேறு திசையில் பயணிப்பதை 'வகுப்புக் கலவரங்கள்' என்று சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் சாதியை உருவாக்கியது யார்? அறிவியல் வளர்ச்சியில் நாம் ஏன் இன்னும் சாதியத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறோம்? சமூகத்தில் சாதிக்க வேண்டிய மக்கள் சாதியால் பிளவுண்டு கிடப்பது நியாயமா..... சாதியை ஒழிக்க வேண்டிய தலைவர்கள் சாதிக்கு ஒரு தலைவராக இருக்கிறார் என்ற கருத்தை மிக நுட்பமாக தனது கீழ்க்கண்ட கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

**ஆதிக்கரு**
**உருவானது**
**ஆதாமிடம் எனில்**
**சாதிக்கரு**
**உருவானது**
**சாத்தானிடம்**
**என்ற தொடர்ச்சியாக**
**சாதிக்கும் தலைவர்கள்**
**இல்லாத தேசத்தில்**
**சாதிக்குத் தலைவர்கள்**
**ஏராளம்.**

(பக் 22 - பொய்யெனப் பெய்யும் மழை)

என்று தங்கம் மூர்த்தி கவிதை வரிகள் வாயிலாக சாடுகிறார்.

## தொகுப்புரை :

இந்த உலகத்தில் முதலில் மதிக்கப்பட்ட மனித சமூகம் உயர்வு தாழ்வின்றி அனைவரும் சரிநிகர் சமானமாக ஆன பின்னரும் அவர்களுக்கான வாழ்வில் சாதியச் சிக்கல்கள் காலந்தோறும் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சமூக உணர்வுகளைக் கொண்ட காதல், சமூகம் ஆகியன மதிக்கப்பட வேண்டும். மனிதனாக இருந்தாலும் மற்ற உயிர்களாக இருந்தாலும் எல்லாவற்றிலும் சமத்துவம் இருக்க வேண்டும். ஆகவே, அத்தகைய சமய ஒருமையைப் பெருமைப்படுத்தி சமத்துவத்துடன் வாழ வகை செய்ய வேண்டும். அதுவே வளர்ச்சியடைந்த நாகரிகம் பெற்ற சமூகம் என்பதைப் பறைசாற்றும்.

## துணைநூற்பட்டியல்


1. திரு.வி .க., பெண்ணின் பெருமை , பூம்புகார் பதிப்பகம், சென்னை -16. 16 ஆம் பதிப்பு ஆகஸ்ட் 1998.
2. கவிஞர் தங்கம் மூர்த்தி,தேவதைகளால் தேடப்படுபவன் - டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை
3. கவிஞர் தங்கம் மூர்த்தி கவிதைகள், வள்ளல் அழகப்பர் பதிப்பகம்
4. கவிஞர் தங்கம் மூர்த்தி - பொய்யெனப் பெய்யும் மழை - வள்ளல் அழகப்பர் பதிப்பகம்.
5. கவிஞர் தங்கம் மூர்த்தி கவிதைகள் - வள்ளல் அழகப்பர் பதிப்பகம்.
6. கவிஞர் தங்கம்மூர்த்தி - அகரம் பதிப்பகம், காரைக்குடி


●


**கட்டுரையாளர்கள்:**

**க.உஷாநந்தினி**

பதிவு எண் : BDU211063277 8987

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி
(தன்னாட்சி ), பூண்டி-613503, தஞ்சாவூர்.

ஆய்வு நெறியாளர்:

**முனைவர் ப.பாலமுருகன்**

ஆய்வு நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி
(தன்னாட்சி), பூண்டி-613503, தஞ்சாவூர்.



# நிகழ்வுகளைக் கடத்திச் செல்லும் திரைநாவல்

வெ. சந்தியா

நவீன தமிழ் இலக்கியச் சூழலில் சிறுகதை மற்றும் நாவல் இலக்கியங்கள் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளன. சிறுகதை, குறுங்கதை, நெடுங்கதை, ஒரு பக்கக் கதை, மைக்ரோ கதைகள், நாவல், குறுநாவல், பெருநாவல், வரலாற்று நாவல், துப்பறியும் நாவல் என்ற வரிசையில் திரை நாவல் என்ற புதியதொரு வகைமையையும் சுப்ரபாரதிமணியனின் 'பள்ளிக்கூடம் போகலாமா?' சேர்த்து விடுகிறது. இது ஆசிரியரின் இரண்டாவது திரை நாவல். திரைக்கதை வடிவில் நிகழ்காலத்தில் எழுதப்பட்டுள்ள நாவல் என்பதால் ஆசிரியர் இதனைத் திரை நாவல் என்று வரையறை செய்கிறார். 'முகப்பறவையே எங்கே சென்றாய்' இவருடைய முதல் திரை நாவலாகும்.

தமிழக அரசின் சிறந்த நாவலாசிரியர் விருது, தமிழ்ச்செம்மல் விருது, மொழிபெயர்ப்பாளர் விருது போன்ற பல சிறப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ள சுப்ரபாரதிமணியன் சிறந்த சிறுகதையாளருக்கான இந்திய ஜனாதிபதி வழங்கிய கதா விருதினையும் பெற்றவர்.

பள்ளிக்கூடம் போகலாமா? என்ற தலைப்பே நாவலின் மையப் பொருளை விளக்கி விடுகிறது. வடமாநிலத்திலிருந்து

வயிற்றுப் பிழைப்புக்காக திருப்பூர் பனியன் கம்பெனிக்கு வேலைக்கு வருபவர்களின் குழந்தைகளுக்கு அரசு ஆரம்பப் பள்ளிகளில் இடம் கிடைக்காத போது தனிப்பட்ட ஒருவரின் முயற்சியால் அந்தக் குழந்தைகளுக்கென ஒரு பள்ளிக்கூடம் உருவாக்கப்படுவதை திரைப்பட காமிரா பாணியில் இந்நாவல் விவரிக்கிறது.

தமிழ்ப் பள்ளியின் ஆசிரியர்கள் வடமாநிலத்திலிருந்து வருபவர்களுக்கு தமிழ் தெரியாத காரணத்தினால் அவர்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்துக் கொள்ள மறுத்து விடுகின்றனர். இந்த விஷயம் கூர்கா பூஷித் மூலம் அந்தப் பகுதியில் சமூக சேவை செய்து வரும் ரவிசங்கர் என்பவருக்குத் தெரிய வருகிறது.

பின்பு அப்படி தமிழ்ப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட வடமாநிலக் குழந்தைகள் முப்பது பேருக்கு ரவிசங்கர் தன் இல்லத்திலேயே பாடம் நடத்துகிறார். பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் போதுதான் இந்தி தெரிந்த ஒரு ஆசிரியரும் உடன் இருந்தால் பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிப்பது எளிதாகிவிடும் என்பதை அவர் உணர்கிறார்.

அந்த சமயம் வடமாநிலத்தில் இருந்து வேலைக்காக வந்திருந்த வர்ஷாவும் ரவிசங்கரின் வேண்டுகோளுக்கு இணங்க பிள்ளைகளுக்கு இந்தி கற்றுக் கொடுக்கிறார். காலப்போக்கில் இவர்கள் நடத்தும் பள்ளிக்கூடம் தமிழக அளவில் பெயர் பெற்ற பள்ளியாக உருவெடுக்கிறது. பிள்ளைகளுக்கு பாடம் புகட்டுவதற்காக ஒன்று சேர்ந்த ரவிசங்கரும் வர்ஷாவும் வாழ்க்கைப் பயணத்திலும் இணைவது, சிறந்த சமூக சேவகர் மற்றும் மிகச் சிறந்த ஆசிரியைக்கான விருதுகளை ரவிசங்கரும் வர்ஷாவும் பெறுவதுமாக நாவல் நிறைவு பெறுகிறது.

வடமாநிலத்திலிருந்து வந்திருந்தாலும் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க தானாக முன் வரும் மனிதநேயம் மிக்க ஆசிரியராக ரவிசங்கர் கதாபாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது.

அபிஜித், ராத்யா, பூஷித், இப்ஷிதா, வர்ஷா, உமிகா, ஆயரா போன்ற வடநாட்டுப் பெயர்களை ஆசிரியர் கதாபாத்திரங்களுக்கு சூட்டியிருப்பதன் வழியாக அவர்கள் வடமாநில மக்களாகவே நாவலில் உலா வருகின்றனர்.

வாழ்வதற்காக பிழைப்புத் தேடி வந்திருக்கும் அவர்களின் பிள்ளைகளை ஆங்கிலம் மற்றும் இந்தி கற்றுத் தரும் பள்ளிகளில் சேர்க்கச்




**பள்ளிக்கூடம் போகலாமா? (திரை நாவல்)**
**சுப்ரபாரதிமணியன் | வெளியீடு: என்.சி.பி.எச், சென்னை**
**விலை - ரூபாய் 70**

சொல்லும் இடங்களில் பணம் இல்லாத அவர்களின் பரிதவிப்புகள் எதார்த்தமாக வெளிப்பட்டுள்ளன. தங்கள் கஷ்டங்களை அறிந்து உதவ வந்த ஆசிரியரிடம் பிள்ளைகளை அனுப்பி வைக்கும் அவர்களின் நம்பிக்கையையும் நாவல் வெளிப்படுத்தியுள்ளது.

பனியன் கம்பெனியில் எழுபத்தைந்து சதவீதம் வடமாநிலத் தொழிலாளர்கள் இருப்பது, பிள்ளைகளை பார்த்துக் கொள்வதற்காக பெண்கள் வேலைக்கு செல்லாத சமயங்களில் குடும்பத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது, பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித் தருபவராக மட்டுமில்லாமல் பிள்ளைகளுக்கு பிஸ்கட் தருவது, குட்டிக் கதைகள் சொல்வது, தூங்க வைப்பது என அர்ப்பணிப்புடன் செயல்படும் ஆசிரியராக ரவிசங்கர் இருப்பது, வடமாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒரே கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்த பிறகு தோழிகளாகும் வர்ஷா, உமிகாவின் நட்புறவு போன்றவற்றையும் இந்நாவல் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

'பள்ளிக்கூடம் போகலாமா?' நிகழ்வுகளை நிகழ்காலத்தில் கடத்திச் செல்லும் திரை நாவல் மட்டுமல்ல, அரை மணி முதல் ஒரு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக்கூடிய குறுநாவல் என்றும் சொல்லலாம்.

●

**முனைவர் பட்ட ஆய்வாளர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்**

Article

# SERVICES OF BHASKARA SETHUPATHI FOR THE SPREADING OF VAISHNAVA CONCEPT IN RAMANATHAPURAM REGION - A Study



**Mr.D.BHARATHI**
**Dr.K.JEYAKALAI**

**Abstract**

This article tries to bring out the services of Bhaskara Sethupathi of Ramanathapuram Kingdom to the spread of the concept of Vaishnavism and his support to the construction of Vaishnava Temples in the Kingdom. Though, Sethupathi rulers were the Staunch supporters of Siva concept of Saivism, simultaneously they supported Vaishnavism in their kingdom. Bhaskara sethupathi was a secular ruler. He supported Christianity and Muslim religion. At the same time he devoted his attention for the spreading of Vaishnava concept pro founded by Ramanuja in the South. Bhaskara Sethupathi played a significant role in reviving and promoting vaishnava traditions and institutions during the late 19th Century C.E..

## Introduction

The Ramanathapuram region in Tamil Nadu has historically been a centre of religious confluence, home of both saivite and vaishnavite traditions. While the Sethupathi's[1], the traditional ruler of Ramanathapuram, were known for their saivite official due to their custodianship of the Rameshwaram Temple, Raja Bhaskara sethupathi stands out for his inclusive religious and cultural transformation in Colonial India.

This temple located in the Rameswaram plays an important role in fostering India's National Unity. The Coastal area of Ramanathapuram is called "Sethu". Those who protected and ruled this area were called "Sethupathis". There is evidence that the sethupathi rule in the Ramanathapuram region began in the 15th century C.E[2]. Bhaskara sethupathi was the most prominent of those sethupathi rulers, in later days.

When Swami Vivekananda was invited to present Hinduism at the Parliament of religions in Chicago, He lacked the financial means to travel, Raja Bhaskara sethupathi stepped forward with Great enthusiasm, Offering to sponsor the entire trip[3]. To cover the Swami Vivekananda travel expensive, he sold the village of Pampur near at paramakudi, Which was under his Jurisdiction, to the chettinad nagarathar people and made arrangement with that money. Swami to visit Chicago. After he returning an Ramanathapuram from Chicago he was taken to the Thiruppullani Adhi Jeganatha Perumal Temple with Royal honours in a decorated Bullock cart[4]. During his reign, he allocated Two Lakhs rupees for the maintenance of Thiruppullani Vishnu Temple and the Temples there.

The Kothandaramar Temple in Ramanathapuram area was renovated by Bhaskara sethupathi. It was built with Bricks during the time of Dhalavai sethupathi (1630-1645C.E.)[5]. It was later destroyed by the Sea winds. S.Shanthalingam has published an inscription in his Journal book "Avanam" stating that he rebuilt it into a beautiful black stones temple in 1903 C.E[6].

The Ramanathapuram Bhaskara sethupathi brought the Rameshwaram Temple under his control from 1877 C.E[7].and promoted the worship of Rama and Shiva. This Temple is also a bridge that unites the saiva and vaishnavite religious sects. During the reign of Bhaskara Sethupathi, he ordered that Poojas and he organised festivals such as vasantha vizha, Ramanavami, Perumal veethi Ula, Chariot processions in all the Vaishnavite Temples under his jurisdiction according to the rules of the Temple Agamas[8].

The Palace in Ramanathapuram is called Ramalinga vilasam. This palace was built in 17th century C.E. There is also a story that this palace was built by Kilavan Sethupathi by the financial support Vallal Seethakathi of keezhakarai. There are many Vaishnava painting here. The paintings here mostly depict the birth of Lord Krishna, Vasudevan-Devaki and the life of Rama[9]. The word "Sri Ramajeyam" is also found in Telugu. Bhaskara Sethupathi maintained it very well during his reign and also built a new arched gate infront of the Ramalinga vilasam[10].

He promoted vaishnavite learning and sholars, encouraging the teaching and preservation



of Sri Vaishnavas philosophy. He supported Temple Priests, Vaishnava Acharyas and school of traditional learning that taught Vaishnava Scriptures,especially the works of Ramanuja and Alwars. He accepted "Mahavidhvan" Raghava Ayyankar, a vaishnavite scholar who lived in the area, as his spiritual Guru. He treated him with immense respect and not only built for him a house in Ramanathapuram but also donated the fertile Vaigai river irrigated farmlands to him[11].

**Conclusion**

Just as Ramanuja's Contribution to Vaishnava religion is Immortalized by the time, Similarly, Raja Bhaskara Sethupathi's Contribution to Vaishnava religion, Introducing Vivekananda to the Spritual World, Established the Fourth Tamil Sangam and developing Tamil, and facilitating Vishnu worship and Vishnu festivals in Shiva Temples in the Sethu region according to the Agama tradition, It has earned him an Indelible reputation for him in history. Although the Sethupathi rulers mostly saivites, they gave Great encouragement and support to Vaishnavism.

**Endnotes:**

1. Ramaswami.A, Ramanathapuram District Gazetteer, Madras: Government of Tamil Nadu, 1972, P.64.
2. James Fergusson, History of India and the Eastern Architecture, London; John Murray Publications, 1910, P.164.
3. Pamban Vivekanada mandapa Seashore Inscription, No.36.
4. Kamal.S.M, Manner Bhaskara sethupathi (Tamil), Ramanathapuram: Sharmila, Publications, 1992,P.81.
5. Ramanathapuram Kothandaramar Temple Inscription, No.35.
6. Rajagopal.S,Avanam (Tamil),Tanjore: Journal of the Archaeological Society, 2019,. P.157.
7. Srinivasa Iyer.R, Brief notes on Traditions and Historical relating to Rameshwaram Temple,1914, P.14.
8. Shanmuga sundaram, Sethupathikal Sarithram (Tamil), Chennai: Kaavya, Publication, 2008, Pp.378-379.
9. Nagasamy.R.,Oviyapaavai (Tamil),Chennai: Archaeological Development of Tamil Nadu, 2010, P.108.
10. Ramalinga vilasam office documents.
11. Kamal.S.M., Mannar Bhaskara sethupathi, Op.cit, P.72.

●

**Mr.D.BHARATHI**
Ph.D Research Scholar (Part-time), Dept of Histyory, Alagappa University, Karaikudi – 630 003.Tamil Nadu.

**Dr.K.JEYAKALAI**
Research Supervisor, Assistant Professor & Head, Dept of History P.T.M.T.M College, Kamuthi – 623 604. Tamil Nadu.

**உங்கள் நூலகம் இதழுக்குக் கட்டுரைகள் அனுப்புவோர் கவனத்திற்கு...**

- கட்டுரைகள் 1300 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்
- யுனிக்கோட் (Unicode) எழுத்துருவில் தட்டச்சு செய்து அனுப்பவேண்டும்.
- கட்டுரையாளரின் புகைப்படம் இணைத்து அனுப்பவேண்டும்.
- தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் இருக்க வேண்டும்.
- ஆசிரியர்குழுவின் முடிவின்படியே கட்டுரைகள் தெரிவுசெய்யப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படாத கட்டுரையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

Article

# Information Seeking Behavior of the Academic Library Users in the Affiliated College Under Bharathiar University: A Case Study of Santhalinga Adigalar Arts, Science, and Tamil College



**Dr. S.ABIRAMI**

## Introduction

Information seeking behavior refers to the ways in which individuals search for access, and use information to fulfill their academic, professional, or personal needs. For students and faculty members of academic institutions, libraries are vital resources that support academic pursuits by providing access to a wide array of scholarly materials. Bharathiar University, a prominent higher education institution in Tamil Nadu, has a network of affiliated colleges that cater to the educational needs of thousands of students. One such institution, Santhalinga Adigalar Arts, Science, and Tamil College, is committed to providing quality education to its students. This article explores the information seeking behavior of the library users at this college and attempts to understand how they interact with the library's resources and services.

## Context of the Study

Santhalinga Adigalar Arts, Science, and Tamil College provide education in arts, science, and Tamil studies. As an affiliated college under Bharathiar University, it is bound by the academic framework set by the University, which places an emphasis on library resources as integral to the teaching-learning process. The college library serves as a hub for students and faculty who require access to textbooks, reference books, journals, research papers, and digital resources.

Understanding the information seeking behavior of users in this setting is important for improving library services, ensuring better user satisfaction, and identifying gaps in resources that may hinder academic progress. This study investigates the types of resources most frequently sought by users, the methods of information retrieval they employ, and the challenges they face while seeking information.

## Objectives of the Study

**The main objectives of this study are:**

1. To examine the information seeking behavior of academic library users in Santhalinga Adigalar Arts, Science, and Tamil College.
2. To analyze the types of information resources used by students and faculty.
3. To identify the challenges faced by users in accessing library resources.
4. To understand the role of digital technologies in facilitating information seeking behavior.

## Literature Review

Research on information seeking behavior in academic libraries has been extensive, and studies have shown that students and faculty rely on a range of physical and digital resources to meet their information needs. Studies by researchers such as Wilson (2000) and Kumar and Kaur (2015) suggest that academic library users exhibit different information seeking patterns based on factors like academic discipline, age, and technological proficiency. Chowdhury and Sayeed (2018) highlighted that the advent of digital libraries and online databases has significantly altered the information-seeking habits of academic users, making it more efficient but also presenting new challenges such as information overload and accessibility issues.

In India, several studies have focused on the information-seeking behavior of library users in both university and college libraries. For instance, Kaur and Poonam (2014) noted that students in affiliated colleges were more likely to use print materials, while faculty members frequently accessed journals and research papers through online databases. However, the limited availability of resources, especially in rural or semi-urban areas, remains a persistent issue.

## Methodology

This study employs a mixed-method approach to gather data about the information seeking behavior of library users at Santhalinga Adigalar College. Both qualitative and quantitative data were collected using the following methods:

1. Questionnaires: A structured questionnaire was distributed to 20 students, 10 Research Scholars and 10 faculty members. The questionnaire focused on the frequency of library visits, types of resources used (books, journals, e-resources), preferred methods of information search (manual vs. digital), and challenges encountered.
2. Interviews: Semi-structured interviews were conducted with 10 faculty members to gain a deeper understanding of their information needs, usage patterns, and perceptions of library services.
3. Observation: An observational study was conducted in the library to analyze user



interactions with library staff and the utilization of available resources.

## Findings

### 1. Frequency of Library Visits and Resource Usage

- The majority of students (63%) reported visiting the library once or twice a week, primarily for borrowing textbooks and reference materials. Faculty members (62%) visited the library more frequently (3-4 times a week) for research purposes, especially to access journals and online databases.
- Books (print and digital) were the most commonly used resource by students, followed by online journals and articles. Faculty members, on the other hand, preferred accessing online journals, research papers, and digital resources, while print books and reference materials were secondary.

### 2. Information Retrieval Methods

- 65% of students indicated that they preferred using traditional methods like browsing shelves or seeking help from library staff when looking for information. However, 35% of the students preferred digital means such as accessing e-books, online journals, or using the college's digital library services.
- Faculty members exhibited a higher preference for digital information retrieval, with 85% indicating that they used online academic databases, Google Scholar, and institutional repositories. The reliance on digital resources is reflective of their research-oriented needs.

### 3. Challenges in Information Seeking

- Lack of sufficient resources: A significant number of students (60%) reported a lack of sufficient textbooks and reference materials in their subject areas, especially for specialized topics in science and Tamil studies.
- Limited access to digital resources: Despite the availability of digital resources, students and faculty faced challenges related to slow internet connectivity and the limited number of computers in the library.
- Information overload: Both students and faculty mentioned difficulty in filtering useful information from the vast quantity available, especially when accessing online databases.

- Library timing: Students pointed out that the library's operational hours were not conducive to their schedules, especially during exam time.

**4. Impact of Technology on Information Seeking**

- The increasing use of mobile devices and the internet has transformed the way users access information. A large percentage of students (70%) and faculty (90%) reported using their smartphones or laptops to access library e-resources from home or outside the college campus.
- The integration of digital libraries and e-learning platforms was noted as an effective means of accessing information remotely, particularly during the COVID-19 pandemic.

**Discussion**

The findings indicate that while the library plays an important role in supporting academic activities, the information-seeking behavior of users at Santhalinga Adigalar College is influenced by a combination of traditional methods and modern digital tools. The significant reliance on print resources among students reflects the need for more comprehensive access to digital collections and an upgraded library infrastructure.

For faculty, the preference for digital resources is clear, underlining the importance of investing in electronic journals, research databases, and e-books. However, the challenges of limited access to these resources, slow internet, and the physical constraints of the library suggest that more efforts are needed to modernize the library services and improve the availability and accessibility of information.

**Recommendations**

**Based on the findings, the following recommendations are made:**


1. Increase Digital Resources: The college should enhance its digital library offerings by subscribing to more online journals, databases, and e-books relevant to the curriculum.
2. Improve Infrastructure: The library should consider expanding its physical space, increasing the number of computers, and improving internet speed to accommodate the growing demand for digital resources.
3. Information Literacy Programs: Organize workshops to train students and faculty on how to effectively use digital tools and databases for academic research.
4. Extended Library Hours: To accommodate the varying schedules of students, the library's hours should be extended, particularly during exam periods.
5. Strengthen Inter-Library Cooperation: Collaborating with other libraries in the region to share resources and offer access to a wider range of materials could alleviate the shortage of books and reference materials.

**Conclusion**


The information seeking behavior of users in the library of Santhalinga Adigalar Arts, Science, and Tamil College reflects a mix of traditional and modern approaches. While students still rely heavily on physical books, faculty members show a clear preference for digital resources. The study underscores the importance of evolving library services to meet the demands of an increasingly digital and research-driven academic environment. By addressing the challenges identified in this study, the college library can better support the academic success of its users and contribute to the overall educational experience.

**columnist: Librarian, Thavathiru Santhalinga Adigalar Arts, Science and Tamil College, Perur, Coimbatore**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





ரூ 170/–





ரூ 310/–





ரூ 190/–




ரூ 85/–




ரூ 125/–





ரூ 240/–

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam**
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,**
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**


Posted at Egmore RMS, Pathirika Channel, chennai - 08.
New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)
Registered with RNI No :TNBIL/2009/28728.
Postal Reg. No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication: 1 Week of every month,Posted b/w 1-7 every month
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam, 16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





(2 தொகுதிகள்)

**ரூ 1000/-**





(12 தொகுதிகள்)

**ரூ 4275/-**





(10 தொகுதிகள்)


**ரூ 1000/-**




**ரூ 330/-**




**ரூ 600/-**




**ரூ 470/-**

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in